126

126

ILANGO TAMIL GRAMMAR

BOOK I For FORMS I, II & III

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 APR 1943
MADRAS

BY

Vidwan M. RAJAMANIKKAM, B. O. L.,
Tamil Pandit, Muthialpet High School, Madras.

811

THE MODEL PUBLICATIONS
Theagarayanagar, :: Madras.

இளங்கோ

தமிழ் இலக்கணம்

முதல் மூன்று பாரங்கட்கு உரியது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 APR 1943
MADRAS

494.8115

811

வித்துவான்
மா. இராசமாணிக்கம், B. O. L.,
தமிழாசிரியர்,
முத்தியாலுப்பேட்டை உயர்கலாசாலை, சென்னை.

மாடல் பப்ளிகேஷன்ஸ்

தியாகராயநகர் :: சென்னை.

காபிரைட்] 1942 [விலை அணா 8

1st Edition November 1942.

P31, I: 2

Printed at The Senguntha Mithran Press, G. T. Madras.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 APR 1943
MADRAS
811

முகவுரை

மொழிப் பயிற்சி நன்கு அமைய வேண்டுமாயின், அதற்கு அடிப்படையான இலக்கணப் பயிற்சி இன்றியமையாததாகும். நமது தமிழகத்தில் எழுதப் படிக்கத் தெரிந்தவரும் இலக்கணப் பயிற்சி இன்மையால், பிழைபடப் பேசலும் எழுதலும் கையாள்கின்றனர். இதற்கு, அவர்கள் இளமை முதலே நன்முறையிற் பேசாமையே காரணம் ஆகும். ஆதலின், சிறுவயது முதலே பிழை நீக்கிப் பேசும் முறையில் மாணவரைப் பழக்குதல் ஆசிரியர்தம் —கற்றறிந்த பெற்றோர்தம் முதற்கடமை ஆகும்.

தமிழ் நமது தாய்மொழி. இம்மொழி தோன்றிப் பல ஆயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. இம்மொழியில் இலக்கண நூல்கள் பல இருந்தன. அவற்றுள் பல நாளடைவில் மறைந்தன. மறைந்தவை போக இன்று இருப்பன சில. அச் சிலவற்றுள்ளும் சிறப்புடையன தொல்காப்பியமும் நன்னூலுமே ஆகும். முன்னது ஏறக்குறைய 2500 ஆண்டுகட்கு முன்னும், பின்னது ஏறக்குறைய 800 ஆண்டுகட்கு முன்னும் செய்யப்பட்டவை. இந்த இரண்டு நூல்களையும் அடிப்படையாகக் கொண்டே பள்ளிக்கூட இலக்கணச் சிறு நூல்கள் எழுதப்படுதல் வழக்கம்.

நமது தமிழ் மொழி நெடுங்காலமாக வழக்கில் இருந்து வருதலால், பல சொற்கள், மக்கள் உச்சரிப்பால் நாளடைவில் சிதைந்தும் உருமாறியும் பேச்சு வழக்கு ஒழிந்தும் போதல் உண்டு; பல நாட்டாரும் தமிழரோடு பழகுவதால்,

அவரவர் மொழிச்சொற்கள் தமிழில் வழக்காறு பெறுதலும் உண்டு. இத்தகைய மாறுபாடுகள் அவ்வக்கால இலக்கண நூல்களில் இடம்பெறும். 'பிறமொழிச் சொற்கள்' என இக்காலத்தே வழங்குவன வடமொழிச் சொற்கள், போர்ச்சுகீஸிய - பாரசீக - இந்துஸ்தானி - அரேபிய - உருதுச் சொற்கள் முதலியனவாம். இத்தகைய சொற்களை இந் நூலிற் காணலாம். இக்காலத்திற்கேற்ற - பிள்ளைகட்கு நன்கு பழக்கமான உதாரணங்களையே இந்நூலிற் காணலாம்.

இச்சிறு நூல், கல்வித்துறையினர் 1939-ல் வெளியிட்ட பாட இயலை (Syllabus) உளங்கொண்டு புதிய முறையில் எழுதப்பெற்றது; போதிய பயிற்சிகளைத் (Excercises) தன் அகத்தே கொண்டது; ஒவ்வொரு பாரப் பிரிவினை இறுதியிலும் அப்பிரிவிற்குரிய தேர்வு வினாக்களைச் சிறப் புறக் கொண்டது; இரண்டாம் பிரிவில் முதல் பாரத்துச் செய்திகள் பற்றிய வினாக்களையும், மூன்றாம் பிரிவில் முதல் - இரண்டாம் பிரிவுச் செய்திகள் பற்றிய வினாக்களையும் தன் அகத்தே கொண்டது. இம்முறை வேறு எந்த இலக்கண நூல்களிலும் காணல் இயலாது. இரண்டாம் பார மாணவன் அப்பகுதியைப் படிக்குங்கால், முதல் பாரத்துக்குரிய இலக் கணச் செய்திகள் பற்றிய கேள்விகட்கு விடையளிக்கும் நிலைமை உண்டாக்கவே அக்கேள்விகள் படிப்படியாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

செய்யுள் இலக்கணம், அணி இலக்கணம் ஆகிய இரண்டும் இதன்கண் காணலாம். செய்யுளை எழுதும் முறை, அந்வயம், பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, உபமான - உபமேயங்கள், மகடூஉ - ஆடூஉ முன்னிலைகள், உவமை அணி, உருவக அணி, தற்குறிப்பேற்றம் முதலியன இதன்கண் விளக்கமாக இடம் பெற்றுள்ளன. செய்யுளில்

அறியத்தகும் பகுதிகள், இலக்கண விசேடங்கள் இன்ன பிறவும் இதன்கண் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

சுருங்கக் கூறின், இவ்விலக்கண நூல் முதல் மூன்று பாரப் பிள்ளைகட்கு வேண்டும் தமிழ்மொழி அறிவினை எளிய - இனிய முறையில் ஊட்டவல்லது எனத் துணிந்து கூறலாம். ஆதலின், இந்நூல் மாணவர் உலகில் நல் வரவேற்புப் பெறும் என்னுந் துணிபுடையேன்.

முத்தியாலுப்பேட்டை
உயர்நிலைப்பள்ளி,
சென்னை.

மா. இராசமாணிக்கம்

பொருள் அடக்கம்

எண்	பொருள்	பக்கம்

Form I

1. எழுத்து - உயிர் எழுத்துகள் - மெய் எழுத்துகள் - உயிர்மெய் எழுத்துகள் - ஆய்த எழுத்து - சுட்டு எழுத்துகள் - வினு எழுத்துகள் - மாத்திரை - கேள்விகள் - பயிற்சி. ... 1
2. சொல் - பெயர்ச் சொல் - திணை - பால் - எண் - இடம் - வேற்றுமை - வினைச்சொல் - மூன்று காலங்கள் - கேள்விகள் - பயிற்சி. ... 7
3. சொற்றொடர் - பயனிலை - எழுவாய் - செயப்படு பொருள் - செயப்படுபொருள் குன்றுவினை - செயப்படுபொருள் குன்றியவினை - செய்வினை - செயப்பாட்டுவினை - சொல் இலக்கணம் கூறுதல் - வாக்கிய வகை - நிறுத்தக் குறிகள் - கேள்விகள் - பயிற்சி. ... 18
4. புணர்ச்சி - சந்திப் பிழைகள். ... 28
5. செய்யுள் இலக்கணம் - உரைநடை - பதவுரை - பொழிப்புரை - கருத்துரை - உபமானம் - உபமேயம் முன்னிலை - கேள்விகள் - பயிற்சி ... 30
6. தேர்வுக்கு உரிய கேள்விகள் (Form I) .. 34

Form II

1. எழுத்து - இன எழுத்துகள் - குற்றியல் உகரம் - கேள்விகள் - பயிற்சி - எழுத்தைப்பற்றிய கேள்விகள். (Forms I & II) ... 43

2 (A) சொல் - அறுவகைப் பெயர்கள் - கேள்விகள் - பயிற்சி - பொது, சிறப்புப் பெயர்கள் - காரண, இடுகுறிப் பெயர்கள் - முறைப்பெயர் - அளவைப் பெயர் - இருதிணைப் பெயர் - ஐம்பாற் பெயர் - மூவிடப் பெயர் - கேள்விகள் - பயிற்சி - தொழிற் பெயர் - வினையால் அணையும் பெயர் - ஆகு பெயர் - வேற்றுமை - வேற்றுமைத் தொகை - வேற்றுமை விரி - கேள்விகள் - பயிற்சி. ... 47

(B) வினைமுற்று - எச்சங்கள் - பகுதி, விகுதி, இடை நிலை - 'இன்' என்னும் இடைநிலை - கேள்விகள் - பயிற்சி - தன்வினை, பிறவினை - ஏவல், வியங் கோள் - ஐம்பால் வினை முற்றுகள் - மூவிடத்து வினை முற்றுகள் - கேள்விகள் - பயிற்சி - சொல் லைப்பற்றிய கேள்விகள். (Forms I & II) 58

3. சொற்றொடர்—கலப்பு வாக்கியம் - உடன்பாடு, எதிர்மறை, வினா வாக்கியங்கள் - பிழை இன்றிப் பேசலும் எழுதலும் - நிறுத்தக் குறிகள் - கேள் விகள் - பயிற்சி - சொற்றொடர்பற்றிய கேள்விகள் (Forms I & II) 71

4. புணர்ச்சி - இயல்பு புணர்ச்சி - விகாரப்புணர்ச்சி - உயிர் முன் உயிர்ப் புணர்ச்சி - கேள்விகள் - பயிற்சி - புணர்ச்சிபற்றிய கேள்விகள் (Forms I & II) 74

5. செய்யுள் இலக்கணம் - குறள் வெண்பா - நாலடி வெண்பா - கேள்விகள் - பயிற்சி - செய்யுள்பற்றிய கேள்விகள் (Forms I & II) ... 78

6. (1) தேர்வுக்கு உரிய வினாக்கள் (Form II) ... 80

(2) தேர்வு வினாக்கள் (Forms I & II) ... 87

Form III

1. எழுத்து—குற்றியல் உகரம் - முற்றியல் உகரம் - குற்றியல் இகரம் - போலி - கேள்விகள் - பயிற்சி - எழுத்தைப்பற்றிய வினுக்கள் (Forms I, II & III) ... 92

2. சொல் - வடசொல் - திசைச்சொல் - ஆண்பால், பெண்பாற் சொற்கள் - உறுப்பிலக்கணம் - வினை மாற்றம் - உடன்பாடு, எதிர்மறை - கேள்விகள் - பயிற்சி - சொல்லைப்பற்றிய வினுக்கள் (Forms I, II & III) ... 96

3. சொற்றொடர் - நிறுத்தக் குறிகள் - தன்கூற்று, பிறகூற்று - சில தொடர்கள் - தொடர் இலக்கணம் கூறுதல் - இரட்டைக்கிளவி, அடுக்குத் தொடர் - கேள்விகள் - பயிற்சி - சொற்றொடர் பற்றிய கேள்விகள் (Forms I, II & III) ... 109

4. புணர்ச்சி - மெய்ம்முன் உயிர் - குற்றியல் உகரப் புணர்ச்சி - 'மை' யீற்றுப் பண்புப்பெயர்ப் புணர்ச்சி - வடமொழிப் புணர்ச்சி - கேள்விகள் - பயிற்சி - புணர்ச்சிபற்றிய கேள்விகள் (Forms I, II & III) ... 116

5. செய்யுள் இலக்கணம் - மோனை - எதுகை - உவமை - உருவகம் - தற்குறிப்பேற்ற அணி - கேள்விகள் - பயிற்சி - செய்யுள்பற்றிய கேள்விகள் (Forms I, II & III) ... 123

6. (1) தேர்வுக்கு உரிய கேள்விகள் (Form III) ... 128

(2) தேர்வுக்கு உரிய கேள்விகள் (Forms I, II & III) ... 130

இளங்கோ

தமிழ் இலக்கணம்

I. எழுத்து

Letter

1. நமது தாய்மொழி தமிழ். இம்மொழிக்கு அவசியமான உறுப்பு எழுத்து. பல எழுத்துகள் சேர்ந்தது ஒரு சொல். பல சொற்கள் சேர்ந்தது சொற்றொடர் எனப்படும். முடிந்த கருத்தைத் தெரிவிக்கும் சொற்றொடரே வாக்கியம் எனப்படும்.

2. எழுத்து ஒலி எழுத்து, வரி எழுத்து என இரண்டு வகைப்படும். பேச்சளவில் நிற்பது ஒலி எழுத்து. எழுதப் படுவது வரி எழுத்து.

3. தமிழ் எழுத்துகள் **247.** அவை நான்கு வகைப் படும் :

(1) உயிர் எழுத்துகள்—12
(2) மெய் எழுத்துகள்—18
(3) உயிர்மெய் எழுத்துகள்—216
(4) ஆய்த எழுத்து—1

உயிர் எழுத்துகள்—12

Vowels

நமது உயிர் உடம்பின் (மெய்யின்) உதவி இல்லாமல் தானாகவே இயங்க வல்லது. அதுபோல வேறு ஓர் எழுத்

தின் உதவி இல்லாமல் தாமாகவே இயங்கவல்ல எழுத்துகள் உயிர் எழுத்துகள் எனப்படும்.

அவை—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பன.

இவற்றை உச்சரித்துப் பாருங்கள். இவற்றுள்,

(1) அ, இ, உ, எ, ஒ—இவை குறுகிய ஓசை உடையவை (Short Vowels).

(2) ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஐ, ஔ—இவை நீண்ட ஓசை உடையவை (Long Vowels).

முன் ஐந்தும் குறில் எனவும், பின் ஏழும் நெடில் எனவும் பெயர் பெறும்.

மெய் எழுத்துகள்—18
Consonants

நமது மெய் (உடல்) உயிரின் உதவி இல்லாமல் இயங்க முடியாது. அதுபோல உயிர் எழுத்துகளின் உதவி இல்லாமல் இயங்க முடியாத எழுத்துகள் மெய் எழுத்துகள் எனப்படும். அவை பதினெட்டு. அவை—க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்பன.

இவற்றுள்,

(1) க், ச், ட், த், ப், ற் (6)—வலிந்த ஓசை உடையவை.

(2) ங், ஞ், ண், ந், ம், ன் (6)—மெலிந்த ஓசை உடையவை.

(3) ய், ர், ல், வ், ழ், ள் (6)—இடைத்தர ஓசை உடையவை.

இவை முறையே (1) வல்லினம், (2) மெல்லினம், (3) இடையினம் எனப்படும்.

உயிர்மெய் எழுத்துகள்—216

Vowel Consonants

உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் எழுத்து (க்+அ =க) உயிர்மெய் எழுத்து ஆகும். ஓர் உயிர் எழுத்துப் பதி னெட்டு மெய் எழுத்துகளோடும் சேர, 18 உயிர் மெய் எழுத்துகள் உண்டாகின்றன.

க்+அ=க, க்+ஆ=கா, க்+இ=கி, க்+ஈ=கீ, க்+ உ=கு, க்+ஊ=கூ, க்+எ=கெ, க்+ஏ=கே, க்+ஐ=கை க்+ஒ=கொ, க்+ஓ=கோ, க்+ஔ=கௌ.

இவ்வாறே 12 உயிர்களும் 18 மெய்களோடும் தனித் தனியே சேருவதால், (18×12=) 216 உயிர்மெய் எழுத்துகள் உண்டாகும்.

ஆய்த எழுத்து—1

The Guttural

ஃ இப்படி மூன்று புள்ளி வடிவமாக இருப்பது ஆய்த எழுத்து. இது, அஃது, இஃது, எஃகு என்றாற்போலச் சொல்லின் இடையில் மட்டுமே வரும்.

சுட்டு எழுத்துகள்—3

Demonstrative Letters

உயிர் எழுத்துகளில் அ, இ, உ என்பன, ஒன்றைச் சுட்டிக்காட்டப் பயன்படுகையில் சுட்டு எழுத்துகள் எனப் படும்.

அவன், இவள், உவர்.

அவ்வீடு, இப்படகு, உவ்வீடு.

இவற்றுள்,

(1) அ—தூரத்தில் உள்ள பொருளைச் சுட்டுவது.

(2) இ—அருகில் உள்ள பொருளைச் சுட்டுவது.

(3) உ—நடு, பின்புறம், மேற்புறம் முதலிய இடங்களில் உள்ள பொருளைச் சுட்டுவது.

வினு எழுத்துகள்—5

Interrogative Letters

எ, ஏ, ஆ, ஓ, யா என்னும் ஐந்தும் கேள்விப் பொருளைத் தரும்பொழுது வினு எழுத்துகள் எனப்படும்.

எவன்? ஏது? யார்? அவனு? அதுவோ?—இவற்றுள் முதல் மூன்றும் சொல்லுக்கு முதலில் நின்று வினுப் பொருளை உணர்த்தும்; பின் இரண்டும் சொல்லின் கடைசியில் இருந்து வினுப் பொருளைத் தரும்.

மாத்திரை

Quantity

எழுத்து ஒலிக்கும் கால அளவை மாத்திரை எனப்படும். இது கண் இமைத்தற்கு அல்லது கைந்நொடித்தற்கு இயல்பாக உண்டாகும் நேரம் ஆகும்.

(1) குறிலுக்கு மாத்திரை ஒன்று.

(2) நெடிலுக்கு மாத்திரை இரண்டு.

(3) மெய் எழுத்திற்கும் ஆய்த எழுத்திற்கும் மாத்திரை அரை.

கேள்விகள்

1. எழுத்து எத்தனை வகைப்படும்? என்னென்ன?

2. தமிழ் எழுத்துகளின் தொகை என்ன? வகை என்ன?

3. உயிர், மெய், உயிர் மெய்—பெயர்க் காரணம் என்ன?

4. குறில், நெடில்—எவை? இப்பெயர்கள் எவ்வாறு பொருந்தும்?

5. வல்லினம், மெல்லினம், இடையினம்—பெயர்க் காரணம் என்ன?

6. உயிர் மெய் எப்படி உண்டாகிறது? அவ்வெழுத்துகள் எத்தனை? எப்படி?

7. சுட்டு, வினா எழுத்துகள் எவை? அவை என் அப்பெயர்கள் பெறவேண்டும்?

8. மாத்திரை என்பது யாது? குறில், நெடில், ஆய்தம், மெய்-எழுத்துகட்குத் தனித்தனி மாத்திரை என்ன?

பயிற்சி

1. அம்மி, ஆடு, இடி, ஈட்டி, உளி, ஊறுகாய், எடு, ஏது, ஐந்து, உரல், ஒட்டன், ஓட்டு, ஔவை.—குறில், நெடில்களைக் கூறுக.

2. கற்றவன் கந்தன், பஞ்சணை மெத்தை, பொய் வார்த்தை, பல் வீழ்ந்தது, அக்காள் பட்டம், அண்ணன் வாழ்க்கை, சங்கு வெண்மை, அச்சம் இல்லை.—இவற்றில் உள்ள (1) வல்லின (2) மெல்லின (3) இடையின மெய்களைக் கூறுக.

3. இந்தப் பழம் அறுக்கும் கத்தி எஃகினால் செய்யப்பட்டது.—இதில் உள்ள (1) உயிர் மெய் (2) ஆய்த எழுத்துகளைக் கூறுக.

4. கோ, டா, ணே, தெ, பி, ழை, சூ, று, ங, ஞு, ரொ, னௌ.—ஒவ்வொன்றையும் உயிர் வேறு—மெய் வேறாகப் பிரிக்க.

5. க்+ஈ, ங்+ஊ, ச்+ஆ, ஞ்+ஓ, ட்+ஊ, ண்+ஏ, த்+ஊ, ந்+ஔ, ப்+ஐ, ம்+இ, ய்+ஈ, ர்+ஓ, ல்+ஔ, வ்+உ, ழ்+ஊ, ள்+எ, ற்+ஏ, ன்+ஓ.—சேர்த்துக் காட்டுக.

6. இவள் அவன் தங்கை, அந்தப் பசு உவளை உதைத்தது, இந்த இஞ்சி அந்தக் கடையில் விற்கிறது, அவள் பெற்ற மகன் இவன்.—சுட்டு எழுத்துகளைக் கூறுக.

7. அம்மி, அவன், அணில், இடி, இவள், இலை, உரல், உவன், உலக்கை.—சுட்டு எழுத்துகள் எவை?

8. வந்தானா, ஏன், யார், அவனோ, எவன்.—வினா எழுத்து களைக் குறிக்க.

9. எவன், எலி, ஏணி, ஏது, யானை, யார்.—வினா எழுத்து கள் எவை?

10. (1) அண்ணன் அந்தக் கன்றை மேய்த்தானா? (2) இவன் ஏன் இப்படி நின்று ஏங்குகிறான்? (3) என்ன! அவனா இவன்? (4) அவன் இன்று கொடுத்த கத்தியோ இது?—இவற்றில் உள்ள (1) சுட்டு (2) வினா எழுத்துகளைக் கூறுக.

11. க, டே, ச், ஃ—தனித்தனி மாத்திரை கூறுக.

12. அவன், எஃகு, யார், ஐயோ, என்ன, எண்ணெய்—ஒவ்வோர் எழுத்திற்கும் மாத்திரை கூறுக.

II. சொல்

Word

1. ஓர் எழுத்துத் தனித்தேனும் இரண்டு முதலிய எழுத்துகள் தொடர்ந்தேனும் ஒரு பொருளைத் தெரிவிப்பது சொல் எனப்படும்.

(1) கை, வா, போ, நீ—ஓர் எழுத்துச் சொற்கள்

(2) பலா, மரம், கிண்ணம்—பல எழுத்துச் சொற்கள்

2. இச்சொல் பெயர்ச்சொல், வினைச்சொல் எனச் சிறப்பாக இரண்டு வகைப்படும்.

(1) ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல்லே பெயர்ச் சொல் (Noun).
முருகன், வள்ளி, மலைகள், ஆறு.

(2) தொழிலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் (Verb).
வந்தான், வந்து, வந்த.

பெயர்ச் சொல்

Noun

3. பெயர்ச் சொல்லில் (1) திணை, (2) பால், (3) எண், (4) இடம், (5) வேற்றுமை என்னும் ஐந்தையும் அறிய வேண்டும்.

1. திணை

Class

திணை—குலம். உலகத்துப் பொருள்களில் மனிதர் நீங்கலாக உள்ள உயிர்களும் பிறவும் ஒரு திணையாகவும்,

மனிதர், தேவர் மற்றொரு திணையாகவும் இலக்கண ஆசிரியர் பிரித்துள்ளனர். இவை முறையே அஃறிணை என்றும், உயர்திணை என்றும் கூறப்படும்.

(1) தேவேந்திரன், குப்பன், கண்ணகி—உயர்திணை

(2) பசு, கிளி, மலை, புழு, ஆறு, மரம்—அஃறிணை (உயர்வு அல்லாத திணை.)

2. பால்

Gender

பால்—பிரிவு. உயர்திணை (1) ஆண்பால், (2) பெண் பால், (3) பலர்பால் என மூன்று வகைப்படும். அஃறிணை (1) ஒன்றன்பால், (2) பலவின்பால் என இரண்டு வகைப் படும்.

(1) இந்திரன், குப்பன்—ஆண்பால்	}	உயர்திணை
(2) இந்திராணி, வள்ளி—பெண்பால்		
(3) அரசர், அரசியர்—பலர்பால்		
(4) பசு, கிளி, மலை, ஆறு—ஒன்றன்பால்	}	அஃறிணை
(5) பசுக்கள், ஆறுகள்—பலவின்பால்		

3. எண்

Number

பொருள்களின் எண்ணிக்கை எண் எனப்படும். ஒன்று ஒருமை எனவும், பல பன்மை எனவும் கூறப்படும்.

(1) குப்பன், வள்ளி, பசு—ஒருமை (Singular)

(2) அரசர், பசுக்கள்—பன்மை (Plural)

ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால்—ஒருமை எண்
பலர்பால், பலவின்பால்—பன்மை எண்

4. இடம்
Person

சொற்கள் வழங்கப்பெறும் இடமே இடம் எனப்படும். அது (1) பேசுவோன் (தன்மை) இடம் (First Person), (2) முன்னின்று கேட்போன் (முன்னிலை) இடம் (Second Person), (3) பேசப்படுபவன் (படர்க்கை) இடம் (Third Person) என மூன்று வகைப்படும்.

	தன்மை	முன்னிலை	படர்க்கை
(ஒருமை)	நான், யான்	நீ	அவன், அவள், அது
(பன்மை)	நாம், நாங்கள் யாம், யாங்கள்.	நீர், நீவிர், நீங்கள்	அவர்கள், அவை

குறிப்பு:—எல்லாப் பெயர்களும் படர்க்கை இடத்தையே சேர்ந்தவை.

5. வேற்றுமை
Case

கண்ணன் என்பது ஒருவனது இயல்பான பெயர். இஃது ஒருவித மாறுதலும் இல்லாமல் இருக்கிறது. இப்படி இல்லாமல், கண்ணனை (கண்ணன்+ஐ), கண்ணனால் (கண்ணன்+ஆல்) எனப் பலவாறு வேற்றுமை அடைந்து வருவது வேற்றுமை எனப்படும். இங்ஙனம் பெயர்ச்சொல் வேறுபடும்பொழுது அதன் பொருளும் வேறுபடுகிறது. இப்படி வேறுபடுத்தும் ஐ, ஆல் முதலியன வேற்றுமை உருபுகள் எனப்படும்.

வேற்றுமை எட்டு வகைப்படும்.

1. முதல் வேற்றுமை (Nominative Case)—இயல்பான பெயரே முதல் வேற்றுமை.

குப்பன் பாடத்தைப் படித்தான்.

2. இரண்டாம் வேற்றுமை (Objective Case)—இதன் உருபு ஐ. இது 'செயப்படு பொருள் வேற்றுமை' எனவும் பெயர் பெறும்.

குப்பன் பாடத்தைப் படித்தான்.

3. மூன்றும் வேற்றுமை—இதன் உருபுகள் ஆல், ஓடு, உடன் என்பன.

(1) தச்சனல் செய்யப்பட்ட நாற்காலி.

(2) அண்ணனேடு தம்பி வந்தான்.

(3) தமக்கையோடு தங்கை போனள்.

4. நான்காம் வேற்றுமை (Dative Case)—இதன் உருபு கு.

ஏழைக்கு உதவி செய்.

5. ஐந்தாம் வேற்றுமை—இதன் உருபுகள் இல், இன், நின்று, இருந்து என்பன.

(1) மரத்தில் பெரியது ஆல்.

(2) செல்வத்தின் மிக்கது கல்வி.

(3) வீட்டினின்று போ.

(4) வீட்டிலிருந்து போ.

6. ஆரும் வேற்றுமை (Genitive Case)—இதன் உருபுகள் அது, உடைய என்பன.

(1) எனது புத்தகம்

(2) என்னுடைய புத்தகங்கள்

குறிப்பு:—'அது' ஒருமைக்கு மட்டுமே வரும்; 'உடைய' ஒருமைக்கும் பன்மைக்கும் வரும்.

ஏழாம் வேற்றுமை—இதன் உருபுகள் இல், இடம், கண் என்பன. இவை இடத்தைக் குறிப்பவை.

(1) வீட்டில் குடை இருக்கிறது.

(2) அவனிடம் பணம் இருக்கிறது.

(3) என்கண் படம் இருக்கிறது. (கண்—இடம்)

எட்டாம் வேற்றுமை (Vocative Case)—படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயர் ஆக்குதலே இதன் வேலை. இதற்குத் தனி உருபுகள் இல்லை.

முதல் வேற்றுமை	எட்டாம் வேற்றுமை
(1) முருகன்	முருகனே!
(2) முருகன்	முருகா !
(3) முருகன்	முருக!
(4) தந்தை	தந்தாய்!
(5) மக்கள்	மக்காள் !

வினைச்சொல்
Verb

1. கண்ணன் வந்தான், கண்ணன் வந்து.—இவற்றில் 'வந்தான், வந்து' என்பன வினையை (தொழிலை)க் குறிக்கும் சொற்கள். ஆதலின், இவை வினைச்சொற்கள் எனப் படும். (1) இவ்விரண்டு வினைச் சொற்களிலும் கருத்து முடிந்து நிற்பது எது? வந்தான் என்பதே கருத்து முடிந்து நிற்பது. அதனால் இது வினைமுற்று எனப்படும். (2) வந்து என்பது எச்சமாய் (பொருள் முடியாமல்) இருப்பதாலும், வந்து போனான் என்பது போன்ற வினைச் சொற்களைக் கொண்டு முடிவதாலும் வினை எச்சம் எனப்படும். (3) வந்த, போன என்பனவும் வினைச்சொற்களே. ஆனால், இவை வந்த (பையன்), போன (பசு) என்றாற்போலப் பெயர்ச்சொற்

களையே கொண்டு முடியும். ஆதலால், இவை பெயர் எச்சம் எனப்படும். எனவே,

(1) பொருள் முடிந்து நிற்கும் வினைச்சொல் வினை முற்று (Finite Verb) ஆகும்.

(2) பொருள் முடியாமல் நின்று வினைச் சொல்லையே கொண்டு முடியும் வினைச்சொல் வினையெச்சம் (Verbal Participle) ஆகும்.

(3) பொருள் முடியாமல் நின்று பெயர்ச் சொல்லையே கொண்டு முடியும் வினைச்சொல் பெயர் எச்சம் (Noun Participle) ஆகும்.

(1) வந்தான், வருகிறாள், வருவார்—வினைமுற்று

(2) வந்து, போய், நின்று, தூங்கி—வினையெச்சம்

(3) வந்த, போன, நின்ற, தூங்கின—பெயர் எச்சம்

மூன்று காலங்கள்
Three Tenses

பெயர்ச்சொல் காலத்தை உணர்த்தாது. வினைச் சொல்லே காலத்தை உணர்த்தும். (1) வந்தான் என்னும் வினைச்சொல் தொழில் நடந்துவிட்ட காலத்தை உணர்த்தும். (2) வருகிறான் என்பது தொழில் இப்பொழுது நடக்கின்ற காலத்தை உணர்த்தும். (3) வருவான் என்பது தொழில் இனி நடக்கும் காலத்தை உணர்த்தும். இம் மூன்று காலங்களும் முறையே (1) இறந்த காலம் (Past Tense), (2) நிகழ் காலம் (Present Tense), (3) எதிர் காலம் (Future Tense) என்பன.

வினைச்சொல்லில் இருந்து இக்காலங்களை உணர்த்தும் உறுப்புகள் இடை நிலைகள் எனப்படும். அவை (1) இறந்த

கால இடைநிலைகள், (2) நிகழ்கால இடைநிலைகள், (3) எதிர் கால இடைநிலைகள் என்பன.

1. இறந்த கால இடைநிலைகள்—த், ட், ற், இன்.

(1) செய்தான் =(செய்+த்+ஆன்)
(2) உண்டான் =(உண்+ட்+ஆன்)
(3) தின்றார் =(தின்+ற்+ஆர்)
(4) ஓடினேன் =(ஓடு+இன்+என்)

2. நிகழ்கால இடைநிலைகள்—கிறு, கின்று.

(1) செய்கிறான் =(செய்+கிறு+ஆன்)
(2) செய்கின்றான் =(செய்+கின்று+ஆன்)

3. எதிர்கால இடைநிலைகள்—ப், வ்.

(1) தின்பான் =(தின்+ப்+ஆன்)
(2) பேசுவாள் =(பேசு+வ்+ஆள்)

கேள்விகள்

1. ‘சொல்’ என்பது யாது? அதன் வகை எவை?

2. பெயர்ச்சொல் எது? வினைச்சொல் எது?

3. திணை, பால், எண், இடம், வேற்றுமை—பொருள் என்ன?

4. ஒருமைக்கு உரிய பால்கள் எவை? பன்மைக்கு உரிய பால்கள் எவை?

5. பெயர்ச் சொல்லுக்கும் வினைச் சொல்லுக்கும் உள்ள வேறுபாடு யாது?

6. வினைமுற்றின் இலக்கணம் என்ன?

7. வினையெச்சம், பெயரெச்சம் என்பன யாவை?

8. இடைநிலைகள் யாவை?

9. இறந்தகால இடைநிலைகள் எவை?

10. நிகழ்கால இடைநிலைகள் எவை ?

11. எதிர்கால இடைநிலைகள் எவை ?

12. முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உள்ள வேறுபாடு என்ன ?

பயிற்சி

1. கண்ணன் மேசைமீது புத்தகங்கள் வைத்துப் போனான், வந்த வரதன் பள்ளிக்கூடம் சென்றான், அவன் வீட்டிலிருந்து போய்த் திரும்பிவந்தான்.—இவற்றில் உள்ள (1) பெயர்ச் சொற்களையும் (2) வினைச் சொற்களையும் கூறுக.

2. கந்தன், கழுதை, காவிரி, மலை, ஆறு, குளம், கண்ணகி, பசுக்கள், வீடு, பாம்பு, பல்லிகள், அரசன், வேலையாட்கள்.—இவற்றில் உள்ள (1) உயர்திணைப் பெயர்களையும் (2) அஃறிணைப் பெயர்களையும் கூறுக.

3. (1) வள்ளியம்மை முருகனை மணந்தாள், (2) கண்ணன் மாடுகளை மேய்த்தான், (3) வீரர்கள் யானைகளை வேட்டையாடினார்கள், (4) பசு பால் கொடுக்கும், (5) அரசி முத்துமாலையை அணிந்தவள், (6) செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கட்டினான்.—இவற்றில் உள்ள ஐம்பால் பெயர்களைக் கூறுக.

வாக்கிய எண்	ஆண்பால்	பெண்பால்	பலர் பால்	ஒன்றன் பால்	பலவின் பால்
1					
2					
3					
4					
5					
6					

4. வீரர்கள், அரசர்கள், அரசிகள், தலைவர்கள், ஆசிரியர்கள்.—இவை என்ன பால் பெயர்கள்? இவற்றிற்கு ஆண்பால் பெயரும் பெண்பாற் பெயரும் கூறுக.

5. எலி, வண்டிகள், எருது, ஏர், வயல்கள், பாட்டிமார், தம்பிமார், வண்ணான், இடையர், இடைச்சி, பாட்டன்—இவற்றில் உள்ள ஒருமை, பன்மை கூறுக.

6. மூன்று இடங்களையும் உதாரணத்தால் விளக்குக.

7. (1) நான் நீ பேசுகையில் அவனைப் பார்த்தேன், (2) நீ வந்ததைப்பற்றி அவள் என்னைக் கேட்டாள், (3) பசு உன்னை முட்ட வந்தபோது நாங்கள் அவர்களோடு பேசிக்கொண்டு இருந்தோம், (4) கண்ணகி பாண்டியனிடம் வழக்குரைத்த பொழுது நான் இல்லையே என்று வருந்துகிறேன், (5) நீ உன்னைப்பற்றி அதிகம் நினைப்பதாக அவர்கள் என்னிடம் கூறினர்.—இவற்றில் உள்ள மூவிடப் பெயர்களையும் கீழ்க் கண்டபடி கட்டம் போட்டு எழுதுக.

வாக்கிய எண்	தன்மை இடம்	முன்னிலை இடம்	படர்க்கை இடம்
1			
2			
3			
4			
5			
6			

8. மரத்தை வெட்டு, கொத்தனால் கட்டப்பட்ட வீடு, வீட்டிற்குப் போ, மரத்திலிருந்து இறங்கு, கல்வியிற் பெரியவர் கம்பர், கண்ணனது கன்று, பெட்டியில் பணம் இருக்கிறது, என்னிடம் புத்தகம் இருக்கிறது, கண்ணா! வா, கந்தனே! போ, அக்கா! எழுந்திரு, பிள்ளாய்! படி.—இவற்றில் உள்ள வேற்றுமை உருபுகளைக் கூறுக.

9. வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் இவற்றை உதாரணங்களால் விளக்குக.

10. வந்தேன், போகிறாய், பாடினாள், எழுதுகிறார், படிக்கிறோம், ஆடுகின்றீர், பேசுவான், ஓடினது, துரத்தின.—இவை என்னென்ன கால வினைமுற்றுகள் ?

11. கண்ணன் மாடுகளை மேய்த்தான்.—இச்சொற்களுக்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமை கூறுக.

குறிப்பு :—பெயர்ச் சொல்லுக்கு வேற்றுமை உண்டு. வினைச் சொல்லுக்கு வேற்றுமை இல்லை; ஆனால் காலம் உண்டு.

12. கண்டேன், செய்தார், கற்றாள், ஆடினான், வருவார், வருகின்றன, போயினான், பேசுவாள், பார்ப்பான்.—இவற்றில் உள்ள முக்கால இடை நிலைகளைக் கூறுக.

13. பெயரெச்ச, வினையெச்சங்களைக் கூறுக :—

(1) எழுந்து சென்ற மாமன் வழுக்கி வீழ்ந்து அழுதான்.
(2) படித்த பையன் பரீக்ஷையில் ஒழுங்காகத் தேறினான்.
(3) கடித்து இழுத்த நாய் நன்றாய் அடி வாங்கியது.
(4) நினைந்து எழுதிய கடிதம் படிக்க நன்றாக இருந்தது.

14. கோடிட்ட இடங்களில் தக்க வேற்றுமை உருபுகளை அமைக்க :—

(1) அவன் பால்—க் குடித்தான்.
(2) இது மண்—செய்யப்பட்ட பானை.
(3) பெற்றோர்க்—க் கீழ்ப்படிதல் நல்லது.
(4) மாமன்—மாமி போனாள்.
(5) மரம்—இறங்கு.
(6) கல்வி—பெரியர் கம்பர்.
(7) அவன் ஊர்—வந்தான்.
(8) பள்ளி—ஆசிரியர் இருக்கிறார்.

15. பெயர்ச் சொற்களையும் வினைச்சொற்களையும் கூறுக :—

(1) இது அரசனது முடி ; நீ குடுமியை முடி.

(2) பந்து விளையாடு ; இது செம்மறியாடு.

(3) ஒரு பிடி சோறு போடு ; அவனைப் பிடி.

(4) நீ வீட்டை அடை ; அரிசி அடை சுவையுள்ளது.

(5) நீ பாடம் படி ; இது பட்டணம் படி.

(6) பன்னிரண்டு அங்குலம் ஓர் அடி ; நீ அவனை அடி.

III. சொற்றொடர்

Sentence

1. சொற்கள் தொடர்வது சொற்றொடர் என்பதை முன்பே சொன்னோம் அல்லவா? 'இராமன் வந்தான்' என்னும் சொற்றொடர் பொருள் முடிந்து நிற்பதால் முற்றுச் சொற்றொடர் அல்லது வாக்கியம் (Complete Sentence) எனப்படும். 'இராமன் வந்து' என்பது பொருள் முடியாது நிற்பதால், எச்சச் சொற்றொடர் (Incomplete Sentence) எனப்படும்.

2. முற்றுச் சொற்றொடரில்—செய்பவன், அவன் செய்யும் தொழில், அத்தொழிலை அடையும் பயன் என்னும் மூன்று உறுப்புகள் பெரும்பாலும் இருக்கும். அவை மூன்றும் முறையே எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எனப்படும்.

3. பயனிலை (Predicate) :—முருகன் பாடத்தைப் படித்தான்.—இவ்வாக்கியத்தில் படித்தான் என்பது வினைமுற்று. இதுவே பயனிலை எனப்படும். (பயனிலை - எழுவாய் செய்யும் தொழிலின் பயன் நிற்கும் இடம்.)

4. எழுவாய் (Subject) :—பயனிலைக்கு முன் 'யார்?' அல்லது 'எது? எவை?' என்பதைத் திணைக்குத் தக்கபடி வைத்துக் கேள்வி கேட்டு, வரும் பதிலே எழுவாய் ஆகும். மேல் வாக்கியத்தில் உள்ள 'படித்தான்' என்னும் பயனிலைக்கு முன், 'யார்?' என்பதை வைத்து, 'யார் படித்தான்?' என்று கேட்க, 'முருகன்' என்பது பதில் ஆகிறது.

ஆகவே, 'முருகன்' என்பது எழுவாய். (எழுவாய்—ஒரு தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும் சொல்.)

5. செயப்படுபொருள் (Object):—பயனிலைக்கு முன் 'யாரை?' அல்லது 'எதை? எவற்றை?' என்பதைத் திணைக்குத் தக்கபடி வைத்துக் கேட்டு, வரும் பதிலே செயப்படுபொருள் ஆகும். மேல் உதாரணத்தில் 'படித்தான்' என்னும் பயனிலைக்கு முன் 'எதை?' என்பதை வைத்து, 'எதைப் படித்தான்?' என்று கேட்டால், 'புத்தகத்தை' என்பது பதில் ஆகிறது. ஆகவே, 'புத்தகத்தை' என்பது செயப்படுபொருள்.

(செயப்படு பொருள்—எழுவாய் செய்யும் தொழிலின் பயனை அடைவது.)

குறிப்பு:—(1) செயப்படு பொருள் இரண்டாம் வேற்றுமையாகவே இருக்கும்.

(2) சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்து வரும். வா—இது 'நீ வா' என்று பொருள்படும். ஆனால், 'நீ' என்பது மறைந்து இருக்கிறது. இத்தகைய எழுவாய் தோன்றா எழுவாய் எனப்படும்.

(3) பயனிலை பெரும்பாலும் வினைமுற்றாகவே இருக்கும். ஆனால், சில இடங்களில் பெயரும் வினாவும் பயனிலையாக வரும்.

i. படைத்தவர் கடவுள் (பெயர்ப் பயனிலை)

ii. அவன் யார்? (வினாப் பயனிலை)

(4) எழுவாயும் பயனிலையும் திணை, பால், எண், இடங்களில் ஒத்திருக்கும்.

6. செயப்படுபொருள் குன்ற வினை (Transitive Verb) :—'முருகன் பாடத்தைப் படித்தான்' என்னும் வாக்கியத்தில் உள்ள 'படித்தான்' என்னும் வினைமுற்றுக்குப் 'பாடத்தை' என்பது செயப்படு பொருள் என்பதை உணர்ந்தோம் அல்லவா? இவ்வாறு செயப்படு பொருளைப் பெற்றுவரும் வினை செயப்படுபொருள் குன்ற வினை எனப்படும்.

7. செயப்படுபொருள் குன்றிய வினை (Intransitive Verb) :—'முருகன் வந்தான்'—இதில் 'வந்தான்' என்னும் வினைமுற்றுக்குச் செயப்படு பொருள் இல்லை. ஆதலால், இது செயப்படுபொருள் குன்றியவினை எனப்படும்.

8. செய்வினை (Active Voice) :—முருகன் பாடத்தைப் படித்தான்.—இதில், முருகன் செய்தவினை 'படித்தல்' என்பது. ஆகவே, படித்தான் என்பது செய்வினை.

9. செயப்பாட்டுவினை (Passive Voice) :—முருகனால் பாடம் படிக்கப்பட்டது.—இதில் முருகனால் செய்யப்பட்ட தொழில் 'படிக்கப்படல்' என்பது. எனவே, படிக்கப்பட்டது என்பது செயப்பாட்டுவினை.

குறிப்பு.—செய்வினையில் உள்ள (1) செயப்படு பொருள், செயப்பாட்டு வினையில் எழுவாயாக வரும்; (2) எழுவாய் மூன்றும் வேற்றுமை உருபு ஏற்று வரும்; (3) பயனிலை 'படு' அல்லது 'பட்டு' என்பதை ஏற்று வரும்.

10. சொல் இலக்கணம் கூறுதல் (Parsing) :—சொற்களுக்குத் திணை, பால் முதலியன கூறி முடிபும் கூறுதல்.

(1) முருகன் பாடத்தைப் படித்தான்.

i. முருகன்—பெயர்ச்சொல், உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், முதல் வேற்றுமை, 'படித்தான்' என்னும் பயனிலைக்கு எழுவாய்.

ii. பாடத்தை—பெயர்ச்சொல், அஃறிணை, ஒன்றன் பால், ஒருமை எண், படர்க்கை இடம், இரண்டாம் வேற்றுமை, 'படித்தான்' என்னும் பயனிலைக்குச் செயப்படுபொருள்.

iii. படித்தான்—வினைச்சொல், செயப்படுபொருள் குன்றுவினை, உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், இறந்தகாலம், 'முருகன்' என்னும் எழுவாய்க்குப் பயனிலை.

(2) வந்த மாமன் எழுந்து போனான்.

i. வந்த—பெயரெச்சம், 'மாமன்' என்னும் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிகிறது.

ii. மாமன்—பெயர்ச்சொல், உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், முதல் வேற்றுமை, 'போனான்' என்னும் பயனிலைக்கு எழுவாய்.

iii. எழுந்து—வினையெச்சம், 'போனான்' என்னும் பயனிலையைக் கொண்டு முடிகிறது.

iv. போனான்—வினைச்சொல், செயப்படு பொருள் குன்றிய வினை, உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், இறந்த

காலம், 'மாமன்' என்னும் எழுவாய்க்குப் பயனிலை.

குறிப்பு :—

(1) பெயர்ச்சொல்லுக்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமை உண்டு; காலம் இல்லை.

(2) வினைமுற்றுக்குத் திணை, பால், எண், இடம், காலம் உண்டு; வேற்றுமை இல்லை.

11. தனி வாக்கியம் (Simple Sentence) :—ஒரே பயனிலையைக் கொண்ட வாக்கியம் தனி வாக்கியம் எனப் படும்.

முருகன் பாடத்தைப் படித்தான்.

12. தொடர் வாக்கியம் (Compound Sentence) :— பல தனி வாக்கியங்கள் தொடர்ந்து வருதல் தொடர் வாக்கியம் எனப்படும்.

முருகன் புத்தகம் எடுத்தான்; முருகன் பாடத்தைப் படித்தான்.

நிறுத்தக் குறிகள்

Punctuation

, இது காமா (Comma) எனப்படும். இங்கு ஒரு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும். இது நீண்ட வாக்கியங் களில் பொருள் விளங்கும் பொருட்டுப் பெரும்பாலும் வினையெச்சங்களை அடுத்து இடப்படுவது.

. இது முற்றுப்புள்ளி (Full stop) எனப்படும். இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும். இது வாக்கியங் களின் முடிவிற்றான் வருவது.

? இது கேள்விக்குறி. இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும். இது கேள்வி வாக்கிய முடிவில் இடத்தகுவது.

குறிப்பு :—பிற குறிகளைப்பற்றி அடுத்த வகுப்புகளிற் கற்றுணர்க.

13. தொடர் வாக்கியத்தைத் தனி வாக்கியங்கள் ஆக்குதல் :—

i. கண்ணன் வந்தான் ; புத்தகம் எடுத்தான் ; பாடம் படித்தான்.—தொடர் வாக்கியம்.

ii. கண்ணன் வந்து, புத்தகம் எடுத்து, பாடம் படித்தான்.—தனி வாக்கியம்.

குறிப்பு :—தொடர் வாக்கியத்தில் உள்ள கடைசிப் பயனிலையை மட்டும் விட்டு, மற்றவற்றை வினையெச்சமாக மாற்றிவிட்டால், தொடர் வாக்கியம் தனிவாக்கியம் ஆகும்.

14. தனி வாக்கியத்தைத் தொடர் வாக்கியம் ஆக்குதல் :—

i. கண்ணன் வந்து புத்தகம் எடுத்துப் பாடம் படித்தான்.—தனி வாக்கியம்.

ii. கண்ணன் வந்தான் ; புத்தகம் எடுத்தான் ; பாடம் படித்தான்.—தொடர் வாக்கியம்.

15. சாதாரண வாக்கியம் :—அவன் வந்தான். அவள் வரவில்லை.

16. கேள்வி வாக்கியம் :—அவன் வந்தானா ? அவள் வரவில்லையா ?

17. எதிர்மறை வாக்கியம்:—

அவன் வந்தான்—சாதாரண வாக்கியம்.

அவன் வரவில்லை—எதிர்மறை வாக்கியம்.

கேள்விகள்

1. சொற்றொடர் யாது? அதன் வகை யாவை?

2. முற்றுச் சொற்றொடரில் அறியத் தக்கவை யாவை?

3. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்—என்பன யாவை?

4. தோன்றா எழுவாய் யாது?

5. எவை எவை பயனிலையாக வரும்?

6. செயப்படுபொருள் குன்றாவினை, செ. குன்றிய வினை என்பன எவை?

7. செய்வினை யாது? செயப்பாட்டு வினை யாது?

8. செய்வினை வாக்கியத்தில் உள்ள எ. ப. செ. செயப்பாட்டு வினையில் என்னென்ன மாறுதல்களை அடையும்?

9. சொல் இலக்கணம் கூறுதலாவது யாது?

10. தனிவாக்கியம் யாது? தொடர் வாக்கியம் யாது? ஒன்றை மற்றொன்றாக ஆக்குவது எப்படி?

பயிற்சி

1. கந்தன் வந்தான், கந்தன் கடைக்குப்போய், நின்ற கந்தன், வள்ளி பாடினாள், வள்ளி பாடி, பாடிய வள்ளி, வந்து போன மாமன், மாமன் வந்துபோய், மாமன் வந்து போனான்.—இவற்றில் உள்ள (1) முற்றுச் சொற்றொடர், (2) எச்சச் சொற்றொடர்களைக் கூறுக.

2. வள்ளி முருகனை மணந்தாள், நான் பாட்டுப் பாடினேன், கந்தன் கழுதை மேய்த்தான், வண்ணான் துணி தப்புகிறான், பசு பால்

தரும், கன்று பாலைக் குடிக்கும், எருது ஏரை இழுக்கிறது, வண்டி விரைந்து ஓடுகிறது, குதிரை தாவிச் செல்கிறது.—இதில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கீழ்க் கண்டவாறு கட்டம் போட்டு எழுதுக.

வாக்கிய எண்	எழுவாய்	பயனிலை	செயப்படுபொருள்
1			
2			
3			
4			
5			
6			
7			
8			
9			

3. கந்தன் நல்லவன், அவன் யாவன்? அவர் யார்? அவன் புண்ணியவான், அவள் போனாள், அவர் போனாரோ? இது வேடிக்கை, இதைச் செய்தவன் கெட்டிக்காரன், இவன் நல்ல பிள்ளை.—இவற்றில் உள்ள (1) வினைப்பயனிலை, (2) பெயர்ப் பயனிலை, (3) வினாப் பயனிலைகளைக் கூறுக.

4. கண்ணகி வந்தாள். கண்ணகி கோவலனை மணந்தாள், அவள் அவனை நேசித்தாள், அவள் அவனோடு மதுரைக்குப் போனாள், பாண்டியன் கோவலனைக் கொன்றான், கண்ணகி பாண்டியனைக் கொன்றாள், செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கட்டினான், கண்ணகி தெய்வமானாள்.—இவற்றில் உள்ள (1) செயப்படுபொருள் குன்றியவினை (2) செ. குன்றாவினைகளைக் கூறுக.

5. பூனை எலியைப் பிடித்தது, எலி மூட்டையைக் கடித்தது, முருகன் மூட்டையைத் தூக்கினான், முகுந்தன் மூட்டையை விற்

ருன், அவள் வடை விற்கிருள், அவன் கடைவைப்பான், நாய் நரியை விரட்டுகிறது, நாய்கள் பூனைகளைத் துரத்துகின்றன.—செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக மாற்றுக.

6. பாட்டு வள்ளியால் பாடப்படுகிறது, குப்பனுல் காற்றுடி விடப்பட்டது, வரதனுல் வீணை வாசிக்கப்படும், கண்ணகியால் பாடம் படிக்கப்படுகிறது, யானையால் கிளை முறிக்கப்பட்டது, நாயால் கள்வன் விரட்டப்பட்டான், கழுதைகளால் பொதி சுமக்கப்பட்டது.—செயப்பாட்டு வினைகளைச் செய்வினைகளாக மாற்றுக.

7. வந்த வரதன் எழுந்து போனுன், வரதன் வடையை வாங்கினுன், இராமன் இராவணனைக் கொன்று சீதையை மீட்டான், பெரிய மனிதன் சிறிய வீட்டில் நுழைந்து துன்பப்படுகிருன்.—**சொல் இலக்கணம் கூறுக.**

8. (1) நான் கடைக்குப் போனேன்; ஆறணு கொடுத்தேன்; புத்தகம் வாங்கினேன்.—தனிவாக்கியம் ஆக்குக.

(2) நான் வீடு சென்று, உணவு உண்டு, பள்ளிக்கூடம் போனேன்.—தனித்தனி வாக்கியம் ஆக்குக.

9. கேள்வி வாக்கியங்களாக மாற்றுக:—

(1) நான் வந்தேன் (2) அவன் வருகிருன் (3) அவள் வரவில்லை (4) பூனை ஓடுகிறது (5) எலிகள் மறைகின்றன (6) குள்ளன் பயப்படவில்லை (7) சூரியன் கடுமையாகக் காய்கிருன் (8) சந்திரன் காணப்படவில்லை.

10. சாதாரண வாக்கியம் ஆக்குக:—

வரதன் வந்தானு? அவன் என் அங்குப் போனுன்? இவன் நல்லவனு? இது என்ன அநியாயம்? பரந்தாமன் படித்த பையனு? பாலம்மாள் பந்தாடினுளா? அவன் என் வரவில்லை? அவள் பாடம் படிக்கவில்லையா?

11. எதிர்மறை வாக்கியம் ஆக்குக :—

அவன் நல்லவன், அவள் வந்தாள், அவர் படிக்கிறார், நான் நிலம் வாங்கினேன், நீ ஓடுகிறாய், எலி தூங்குகிறது, நாய்கள் வேட்டை ஆடுகின்றன, குகன் இராமனை வரவேற்றான், இராவணன் சீதையை எடுத்துப் போனான்.

12. சாதாரண வாக்கியம் ஆக்குக :—

முருகன் சிவபிரான் மகனா? முருகன் வள்ளியை மணந்தானா? அவன் ஏன் அசுரரை எதிர்த்தான்? அவனிடம் சேனைகள் இல்லை, அவன் சூரபன்மனை வென்றானா? அவன் ஏன் வேலை வீசி எறிந்தான்?

IV. புணர்ச்சி

Combination

சொற்கள் ஒன்ருேடு ஒன்று சேர்வது புணர்ச்சி எனப்படும். அவ்வாறு சொற்கள் சேரும்பொழுது முன் நிற்கும் சொல் நிலைமொழி எனப்படும். அதனேடு வந்து சேரும் சொல் வருமொழி எனப்படும்.

நிலைமொழி		வருமொழி		புணர்ச்சி
பலகை	+	பெரியது	=	பலகைபெரியது

1. அந்த, இந்த, எந்த / அங்கு, இங்கு, எங்கு } இவற்றின் முன் வருமொழி முதலில் வரும் க, ச, த, ப மிகும்.

அந்த	+	காகம்	=	அந்தக் காகம்
அங்கு	+	பார்	=	அங்குப் பார்

2. நிலைமொழியின் கடைசியில் வரும் ஆக, ஆகி, ஆய், போய், வித, பற்றி, எல்லா, வகை இவற்றின் முன் வருமொழி முதலில் வரும் க, ச, த, ப மிகும்.

பெரியவனுக	+	போனுன்	=	பெரியவனுகப் போனுன்
போய்	+	பார்	=	போய்ப் பார்
பலவித	+	பைகள்	=	பலவிதப் பைகள்
அதுபற்றி	+	பேசு	=	அதுபற்றிப் பேசு
எல்லா	+	பைகள்	=	எல்லாப் பைகளும்
பலவகை	+	பெட்டிகள்	=	பலவகைப் பெட்டிகள்

3. நிலைமொழியின் கடைசியில் இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ) வந்தால், வருமொழி முதலில் வரும் க, ச, த, ப மிகும்.

அவனை	+	காண்	=	அவனைக் காண்
அவனை	+	சந்தி	=	அவனைச் சந்தி
அவனை	+	தழுவு	=	அவனைத் தழுவு
அவனை	+	பார்	=	அவனைப் பார்

4. நிலைமொழியின் கடைசியில் நான்காம் வேற்றுமை உருபு(கு) வந்தால், வருமொழி முதலில் வரும் க, ச, த, ப மிகும்.

அவனுக்கு	+	காட்டு	=	அவனுக்குக் காட்டு
அவனுக்கு	+	சோறு	=	அவனுக்குச் சோறு
அவனுக்கு	+	தடை	=	அவனுக்குத் தடை
அவனுக்கு	+	படை	=	அவனுக்குப் படை

V. செய்யுள் இலக்கணம்

"எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ?—பைந்தொடீஇ!
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி."

1. இப்பாட்டு நான்கு அடிகளை உடையது; ஒவ்வோர் அடியும் நான்காகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அப்பிரிவு சீர் எனப்படும். எனவே, ஒவ்வோர் அடியிலும் நான்கு சீர்கள் இருக்கின்றன. நான்காம் அடியில் மூன்று சீர்கள் இருக்கின்றன. இந்த முறைப்படியே நீங்கள் எழுதப் பழக வேண்டும். இப்படியே ஒவ்வொரு பாட்டையும் கவனித்துச் சீர் பிரித்து எழுதப் பழகவேண்டும்.

2. உரைநடை (Prose Order):—உரைநடையில் எழுவாய் முதலிலும் பயனிலை கடைசியிலும் வரும். ஆனால், செய்யுளில் இம்முறைமை மாறிவரும். அதனை முறைப் படுத்துவதே உரைநடை எனப்படும்.

இந்தப் பாட்டில் இரண்டு வாக்கியங்கள் இருக்கின்றன:

(1) எந்தை இரப்பார்க்கு ஈந்து நல்கூர்ந்தான் என்று அவன் மைந்தர் தம் ஈகை மறுப்பரோ?

(2) நின்று பயன் உதவி நில்லா அரம்பையின் கீழ்க் கன்றும் கனி உதவும்.

3. பதவுரை (Word for word Meaning):—உரை நடைப் படுத்தியபடி உள்ள பதங்களுக்குப் பதத்திற்குப் பதம் உரை (அர்த்தம்) கூறுதல் பதவுரை எனப்படும்.

எந்தை—'எம் தந்தை
இரப்பார்க்கு—யாசித்தவர்க்கு
ஈந்து—கொடுத்து
நல்கூர்ந்தான்—வறுமை அடைந்தான்'
என்று—என்று சொல்லி
அவன் மைந்தர்—அவன் மக்கள்
தம் ஈகை—தாம் தருமம் செய்தலை
மறுப்பரோ—நிறுத்துவரோ? (நிறுத்தார்.)

இப்படியே அடுத்த வாக்கியத்திற்கும் பதவுரை கூறிக் கொள்க.

4. பொழிப்புரை (Total Meaning):—மொத்த அர்த்தம் பொழிப்புரை எனப்படும். மேல் கூறப்பட்ட பதவுரையில் உள்ள மொத்த உரையே பொழிப்புரை ஆகும்.

(உ-ம்) 'எம் தந்தை யாசித்தவர்க்குக் கொடுத்து வறுமை அடைந்தான்' என்று சொல்லி, அவன் மக்கள் தாம் தருமம் செய்தலை நிறுத்துவரோ? நிறுத்தார்.

5. கருத்துரை.—தந்தையார் தருமம் செய்து எழ்மை அடைந்ததை அறிந்தும் அவர்தம் அறிவிற் சிறந்த மக்கள் தருமம் செய்பவராகவே இருப்பர்.

6. உபமானம்:—பாட்டில் தெரியாத ஒன்றை விளக்க உதவும் தெரிந்த விஷயம் உபமானம் எனப்படும்.

மேல் பாட்டில்,

"நின்று பயனுதவி நில்லா அரம்பையின் கீழ்க்
கன்றும் உதவும் கனி."

என்பது உபமானம்.

7. உபமேயம் :—உபமானத்தைக் கொண்டு அறியும் விஷயம் உபமேயம் எனப்படும்.

மேல் பாட்டில்,

"எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ ?"

என்பது உபமேயம்.

8. முன்னிலை :—சில செய்யுட்கள் ஓர் ஆணை அல்லது பெண்ணை முன்னிலைப்படுத்திப் பாடப்படும். ஆணை முன்னிலைப்படுத்தல் ஆடூஉ முன்னிலை எனப்படும். பெண்ணை முன்னிலைப்படுத்தல் மகடூஉ முன்னிலை எனப்படும்.

இச்செய்யுளில், 'பைந்தொடீஇ !' (பசிய வளையலை அணிந்தவளே !) என்பது மகடூஉ முன்னிலை.

கேள்விகள்

1. புணர்ச்சி யாது? நிலைமொழி, வருமொழிகள் எவை ?
2. உரைநடை என்பது என்ன ?
3. பதவுரை என்பது என்ன ?
4. பொழிப்புரை என்பது என்ன ?
5. கருத்துரை என்பது என்ன ?
6. உபமானம் என்பது யாது ?
7. உபமேயம் என்பது யாது ?
8. முன்னிலை என்பது யாது ?
9. செய்யுளில் வரும் முன்னிலைகள் எவை ?

பயிற்சி

1. சேர்த்துக் கூறுக :—அந்த+காகம், பலவித+கைகள், எல்லா+பிள்ளைகள், அவனை+காண், அவனுக்கு+போடு.

2\. "நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்."

(1) இதற்கு உரைநடை கூறுக. (2) எ. ப. செ. கூறுக. (3) பதவுரை கூறுக. (4) பொழிப்புரை கூறுக. (5) கருத்துரை கூறுக. (6) உபமான, உபமேயங்களைக் கூறுக.

3\. "இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே ;—பொன்செய்
அதிர்விளையாய்! பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல்."

(1) இதிலுள்ள முன்னிலை என்ன முன்னிலை? (2) இதிலுள்ள உபமான, உபமேயங்களைக் கூறுக. (3) பதவுரை கூறுக. (4) எ. ப. செ. கூறுக. (5) பொழிப்புரை கூறுக. (6) உரைநடை கூறுக. (7) இதிலுள்ள பெயர்ச் சொற்களைக் கூறுக.

4\. "நீக்கம் அறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர் பெருமை நொய்தாகும் ;—பூக்குழலாய்!
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினுந் திண்மைநிலை போம்."

இதிலுள்ள (1) முன்னிலை என்ன முன்னிலை? (2) உபமான உபமேயங்களைக் கூறுக. (3) பதவுரை கூறுக. (4) எ. ப. செ. கூறுக. (5) பொழிப்புரை கூறுக. (6) உரைநடை கூறுக.

தேர்வுக்கு உரிய கேள்விகள்

(Form I)

1. எழுத்து எத்தனை வகைப்படும்? அவை என்னென்ன?

2. தமிழ் எழுத்துகள் மொத்தம் எத்தனை? அவற்றின் வகை என்ன?

3. உயிரெழுத்து, மெய்யெழுத்து—பெயர்க்காரணம் யாது?

4. மெய்யெழுத்து எதனால், எத்தனை வகைப்படும்?

5. உயிர் மெய் எழுத்துகள் எங்ஙனம் உண்டாகின்றன? அவற்றின் தொகை என்ன? எப்படி?

6. சுட்டு, வினா எழுத்துகள் எவை? அவை ஏன் அப்பெயர் பெற்றன?

7. மாத்திரை என்பது யாது? சட்டை விலை நான் கரையணு—ஒவ்வோர் எழுத்திற்கும் மாத்திரை கூறுக.

8. (1) அம்மணி, அவன், இஞ்சி, இவள், உரல், உவ்வீடு—இவற்றில் உள்ள சுட்டெழுத்துகள் எவை?

(2) அவனா, அணா, இவனோ, அதோ, எது, எடை, ஏன், ஏர், யாவன், யானை—இவற்றில் உள்ள வினா எழுத்துகள் எவை?

9. சொல் என்பது யாது? அதன் வகை யாவை? வகைக்கு ஓர் உதாரணம் தருக.

10. பெயர்ச்சொல் யாது? அதில் அறிய வேண்டுவன எவை?

11. திணை, பால், எண், இடம், வேற்றுமை—இவற்றை விளக்குக.

12. உயர்திணைக்குரிய பால்கள் எவை? அஃறிணைக்குரிய பால்கள் எவை?

13. ஒருமைக்குரிய பால்கள் எவை? பன்மைக்குரிய பால்கள் எவை?

14. ஒரு பெயர்ச்சொல், எத்தனை வேற்றுமைகளை அடையும்? உதாரணத்தால் விளக்குக.

15. நான் கண்ணனைக் கண்டு அண்ணனோடு வீட்டுக்குப் போகையில், அண்ணனினும் பெரியவன் ஒருவன் தனது பையிலிருந்து பழம் ஒன்றை எடுத்து, "கண்ணா! இதனைப் பெற்றுக்கொள்" என்றான்.—இதில் உள்ள வேற்றுமை உருபுகளைச் சுட்டுக.

16. உளியால் செய்த மத்து, கல்வியில் பெரியவர் கம்பர், வரதனுடைய பலகை, கண்ணனுக்கு உணவு, கண்ணனிடம் பை இருக்கிறது, கண்ணனைக் கண்டேன், பிள்ளாய்! வா.—இவற்றிலுள்ள வேற்றுமை உருபுகள் எவை?

17. எட்டாம் வேற்றுமையில் முதல் வேற்றுமைப் பெயர் அடையும் வேறுபாடுகள் எவை? உதாரணத்தால் விளக்குக.

18. வினைச்சொல் எது? வினை முற்று, வினை எச்சம், பெயர் எச்சம்—இவற்றை உதாரணங்களால் விளக்குக.

19. வினைச்சொல்லுக்குரிய காலங்கள் எவை? அவற்றைக் குறிப்பன யாவை?

20. இறந்தகால இடைநிலைகள் எவை? உதாரணத்தால் விளக்குக.

21. நிகழ்கால இடைநிலைகளை உதாரணம் தந்து விளக்குக.

22. எதிர்கால இடைநிலைகள் எவை? உதாரணம்கூறுக.

23. பெய்தான், கண்டான், நின்றார், ஆடினேன், பாடுகிறான், பாடுகின்றான், பாடுவான், உண்பான்—இவற்றில் உள்ள இடைநிலைகள் எவை? அவை எக் காலத்தவை?

24. கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள வினைமுற்று, வினை எச்சம், பெயரெச்சம் இவற்றைக் கூறுக :—

(1) ஓடிய மாடு கால் முறிந்து விழுந்ததால் உழவு நின்றுவிட்டது.

(2) படிக்கிற பையன் நல்ல பிள்ளைகளோடு சேர்ந்து வாழ்ந்து நன்மை பெறுதல் வேண்டும்.

(3) மரம் வைத்து வளர்த்த மனிதன் இப்பொழுது மகிழ்ச்சியோடு அதன் பழங்களைத் தின்று பிறர்க்கும் கொடுத்து மகிழ்கிறான்.

25. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்களைக் குறிக்க :—

(1) நீ பள்ளிக்கூடம் போகையில் வரதன் உன்னோடு பேசி நின்றதை நாங்கள் பார்த்தோம்.

(2) நீ ஏன் வந்தாயென்று அவர்கள் என்னைக் கேட்டார்கள்.

(3) வண்டி உன்னைத் தாண்டும்பொழுது நான் நாயோடு போய்க்கொண்டு இருந்தேன்.

(4) ஆசிரியர் உன்னிடம் பேசிக் கொண்டிருந்த பொழுது நானும் கண்ணனும் கவனித்துக் கொண்டிருந்தோம்.

(5) நீ பரிசு வாங்கியதைப் பற்றிப் பிள்ளைகள் என்னிடம் புகழ்ச்சியாகச் சொல்லினர்.

26. கோடிட்ட இடங்களில் தக்க வேற்றுமை உருபுகளை அமைக்க :—

(1) இப்பானை குயவன்—செய்யப்பட்டது.

(2) நான் என் தங்கை—கடை—போனேன்.

(3) நான் " — " என்றேன் ; அண்ணன் "ஏன்"? என்றான்.

(4) மீன் — பெரியது திமிங்கிலம்.

(5) குரங்கு மரத்தில்—இறங்கியது.

(6) திருடன் வரதன்—பெட்டி—கை வைத்தான்.

(7) கண்ணன்—புத்தகம் கந்தன் பை—இருக்கிறது.

27. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் கூறுக :—

(1) தட்டான் முடி செய்கிறான் ; நீ வேலையை முடி.

(2) கையில் வளை ; நீ வில்லை வளை.

(3) நீ பாடம் படி ; இது வாயிற்படி.

(4) நான் அவரைக் கண்டு வந்தேன் ; இது கற்கண்டு.

(5) இதன் நீளம் ஓர் அடி ; நீ அவனை அடி.

(6) இது ஒரு பிடி சோறு; கள்வனைப் பிடி.

28. சொற்றொடர் யாது? அதன் வகை என்ன ? உதாரணத்தால் விளக்குக.

29. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்—இவற்றின் பொருள் என்ன ?

30. இம்மூன்றையும் ஒரு வாக்கியத்தில் எவ்வாறு கண்டு பிடிப்பது ? உதாரணம் தந்து விளக்குக.

31. தோன்று எழுவாய் என்பது எது ? பயனிலையாக வருவன எவை ? உதாரணம் தருக.

32. செயப்படு பொருள் குன்று வினை, செயப்படு பொருள் குன்றிய வினை—இவற்றை உதாரணம் தந்து விளக்குக.

33. கண்ணன் பசுக்களை மேய்த்தான், கண்ணன் தூங்கினான், வரதன் பாடம் படித்தான், வரதன் வேகமாய் ஓடினான், கண்ணகி மதுரையை எரித்தாள், கண்ணகி கதறி அழுதாள்.—இவற்றில் உள்ள செயப்படுபொருள் குன்று வினை, செயப்படுபொருள் குன்றியவினை இவற்றைக் கூறுக.

34. செய்வினை, செயப்பாட்டு வினை—இவற்றை உதாரணம் தந்து விளக்குக.

35. இராமன் இராவணனைக் கொன்றான், சீதை இராவணனால் கொண்டு செல்லப்பட்டாள், அநுமான் இலங்கையைத் தாண்டினான், இலங்கை அநுமானால் எரிக்கப்பட்டது,

இராமன் அசுரரை அழித்தான், இராமன் கைகேயியால் காட்டிற்கு விரட்டப்பட்டான், பரதன் அரசைத் துறந்தான், குகனுல் கங்கைக்கரை காவல் செய்யப்பட்டது.—இவற்றில் உள்ள (1) செய்வினை, செயப்பாட்டு வினைகளைக் கூறுக. (2) செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாகவும், செயப்பாட்டு வினைகளைச் செய்வினைகளாகவும் மாற்றி அமைக்க.

36. (1) கண்ணன் காலையில் எழுந்து பாடத்தைப் படித்தான்.

(2) வந்த விருந்தாளி உண்டு எழுந்தான்.

(3) நின்று பேசிய மாணவன் வழுக்கி விழுந்தான்.—சொல் இலக்கணம் கூறுக.

37. தனி வாக்கியம், தொடர் வாக்கியம்—ஒவ்வொன்றிற்கும் உதாரணம் தருக.

38. சாதாரண வாக்கியம், கேள்வி வாக்கியம், எதிர்மறை வாக்கியம்.—உதாரணத்தால் விளக்குக.

39. புணர்ச்சி என்பது யாது? நிலைமொழி, வருமொழிகள் எவை? உதாரணம் தருக.

40. க, ச, த, ப, மிகும் இடங்கள் எவை? ஒவ்வோர் இடத்திற்கும் உதாரணம் தருக.

41. அடி, சீர்—எவை? ஒரு செய்யுளைத் தந்து விளக்குக.

42. உரை நடை யாது? உதாரணத்தால் விளக்குக.

43. பதவுரை, பொழிப்புரை, கருத்துரை—இவற்றின் பொருள் என்ன? உதாரணம் தந்து விளக்குக.

44. உபமானம், உபமேயம்: விளக்கி உதாரணம் தருக

45. முன்னிலை என்பது யாது ? முன்னிலை எத்தனை வகைப்படும் ?

46. "என்று முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பார் தீதற்றோர் ;—துன்று சுவை
பூவிற் பொலிகுழலாய் ! பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து."

(1) இப்பாட்டை இப்படியே சீர்பிரித்து எழுதிக் காட்டுக.

(2) இதில் உள்ள முன்னிலை எது? அஃது என்ன முன்னிலை ?

(3) இதில் உள்ள உபமான, உபமேயங்களைக் கூறுக.

(4) இப்பாட்டிற்குப் பதவுரை கூறுக.

(5) இதற்குப் பொழிப்புரை கூறுக.

(6) இதற்குக் கருத்துரை கூறுக.

(7) இதில் உள்ள (1) பெயர்ச்சொற்கள் (2) வினைமுற்றுகள் (3) எச்சங்கள் கூறுக.

(8) 'குழலாய்' !—என்ன வேற்றுமை ? இதன் முதல் வேற்றுமை யாது ?

II Form

II Form

I. எழுத்து

Letter

1. இன எழுத்துகள்

Relative Letters

ஒலி, வடிவம் முதலியவற்ருல் ஒன்றுக்கொன்று தொடர்புடைய எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும்.

1. உயிர் எழுத்துகளில் குறிலாகவுள்ள அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து எழுத்துகட்கும் அவற்றின் நெடிலாகவுள்ள ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்பன இன எழுத்துகள் ஆகும். நேரான குறிலைப்பெருத ஐ, ஔ என்பவற்றிற்கு முறையே இ, உ என்பன இனமாகும்.

அ—ஆ ; இ—ஈ ; உ—ஊ ; எ—ஏ ; ஒ—ஓ ; இ—ஐ ; உ—ஔ.

2. மெய் எழுத்துகள் பதினெட்டில், (1) க, ச, ட, த, ப, ற ஆகிய வல்லின எழுத்துகட்கு மெல்லினமாகிய ங, ஞ, ண, ந, ம, ன என்பன இனமாம். இடையின எழுத்துகளாகிய ய, ர, ல, வ, ழ, ள என்பவற்றிற்கு வேறு இனம் இல்லை.

க—ங ; ச—ஞ ; ட—ண ; த—ந ; ப—ம ; ற—ன,

ங்—ன்—ண்

1. வந்து, கந்தன், சந்தை—என்றாற்போலப் பெரும்பாலும் த-வ்வை அடுத்தே நகரம் (ந்) வரும். எனவே, இது தந்நகரம் (தவ்வை அடுத்து வரும் நகரம்) எனப்படும்.

2. கன்று, பன்றி, மன்றம்—என்றாற்போலப் பெரும்பாலும் ற-வ்வை அடுத்தே னகரம் (ன்) வரும்; வருதலால், இது றன்னகரம் எனப்படும்.

3. நண்டு, ஆண்டு, சுண்டல்—என்றாற்போலப் பெரும்பாலும் ட-வ்வை அடுத்தே ணகரம் (ண்) வரும்; வருதலால், இது டண்ணகரம் எனப்படும்.

2. குற்றியல் உகரம்

The Shortened உ

குறிலுக்கு மாத்திரை ஒன்று என்று சென்ற வகுப்பில் படித்தீர்கள் அல்லவா? உயிர்க்குற்றெழுத்துகளாகிய அ, இ, உ, எ, ஒ என்பன ஒவ்வொரு மாத்திரை ஓசை உடையவை. ஆனால் உ என்னும் உயிர் மட்டும் சில இடங்களில் தனக்கு இயல்பாகவுள்ள ஒரு மாத்திரை ஓசையிற் பாதி குறைந்து (அரை மாத்திரை ஓசை கொண்டு) ஒலிக்கும். இவ்வுண்மையை உச்சரித்துக் காண்க.

ட்+உ
படு ↓ இது மிகுந்த ஓசை உடையதாதலைக் காண்க.

ட்+உ
பாடு ↓ இது முன்னதைவிடக் குறைந்து ஒலிப்பதைக் காண்க.

மடு-மாடு, கடு-காடு, நகு-நாகு, படு-பட்டு, கடு-கட்டு, வறு-வயிறு, அது-அஃது, பசு-பாய்ச்சு.—இவற்றை உச்சரித்து உகரங்களின் வேறுபாடு உணர்க.

1. முழு ஓசை உடையது முற்றியல் உகரம் (The Full Sound உ) எனப்படும்.

2. குறைந்த ஓசை உடையது குற்றியல் உகரம் (The Shortened உ) எனப்படும்.

இக்குற்றியல் உகரம், (1) சொல்லின் கடைசியில் உள்ள வல்லின மெய்கள்மீதே வரும்; (2) பசு, படு-என்பது போலத் தனிக் குற்றெழுத்தை அடுத்த வல்லின மெய்யின் மீது வராது; ஆனால் பாசு, பாடு—எனத் தனி நெட்டெழுத்தை அடுத்த வல்லின மெய்யின்மீது வரும்.

குறிப்பு:—(1) குற்றியல் உகரம் என்பது 'உ' என்னும் எழுத்தே என்பதை நன்கு நினைவிற் கொள்க.

(2) 'குற்றியல் உகரத்திற்கு ஓர் உதாரணம் தருக'

ட்+உ

எனின், 'பட்டு ↓ இந்த 'உ' குற்றியல் உகரம்' என்று இவ்வாறு கடை எழுத்தை இரண்டாக்கி, உகரத்தை வேறு பிரித்துச் சுட்டிக் காட்டவேண்டும்.

கேள்விகள்

1. இன எழுத்துகள் என்பன யாவை? எவை எவற்றுக்கு இனம்?

2. ங், ன், ண்—இவற்றிற்கு முறையே என்ன பெயர்கள் வழங்குகின்றன? ஏன்?

3. குற்றியல் உகரம் எது? சுட்டிக் காட்டுக.

4. முற்றியல் உகரம் எது? சுட்டிக் காட்டுக.

பயிற்சி

1. பம்பரம், கந்தன், கன்றியது, பண்டு, கங்கை, மஞ்சள்.—ம், ந், ன், ண், ங், ஞ்—இவற்றுக்குக் காட்டப்பெற்றுள்ள இன எழுத்துகள் எவை? இவற்றுக்கே வேறு இரண்டிரண்டு உதாரணங்கள் தருக.

2. உறு-ஊறு-ஊற்று; கடு-காடு-காட்டு; நாற்று, நாக்கு, கச்சு, பந்து, நகு, எது, ஏது.—இவற்றில் குற்றியல் உகரம் கொண்ட சொற்கள் எவை? முற்றியல் உகரம் கொண்ட சொற்கள் எவை? உகரத்தை ஓர் உதாரணத்தில் மட்டும் நன்கு பிரித்துக் காட்டுக.

இரண்டு வகுப்புகட்கும் உரிய எழுத்தைப்பற்றிய கேள்விகள்

1. எழுத்து என்பது யாது? அதன் வகை என்ன?

2. உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து எனப் பெயர்கள் இடக் காரணம் என்ன?

3. குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம்-என்னும் வேறுபாடுகள் உண்டாகக் காரணம் என்ன?

4. அவன், அம்மி, இவன், இடி, உவன், உலக்கை, எவன், எடை, யாது, யானை, அவனா, மைனா.—இவற்றில் சுட்டு, வினா ஏற்ற சொற்கள் எவை?

5. இன எழுத்துகள் எவை? ங, ட, ண, த, ப, ற, ர, வ, ய, ஐ, ஔ.—இவற்றுக்கு இன எழுத்துகள் யாவை?

6. குற்றியல் உகரம் என்பது யாது? முற்றியல் உகரம்—யாது? கடு, கடுகு, கறு, கயிறு, சுடு, சுட்டு.—இவற்றில் கு. உகரம் எவை? மு. உ. எவை? சுட்டுக.

7. க, ஞா, நு, சி, றி, ளூ, நெ, ணே.—இவற்றை உயிர்-மெய்களாகப் பிரித்துக் காட்டுக.

8. ட்+ஆ, ங்+ஊ, ஞ்+எ, ற்+ஐ, ல்+ஔ.—சேர்த்து எழுதுக.

II. சொல்

Word

பெயர்ச்சொல்

Noun

1. அறுவகைப் பெயர்கள்

பெயர்ச்சொல் ஆறுவகைப்படும். அவை-பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என்பன.

(1) பொருட்பெயர்:—பொருளின் பெயரைக் குறிப்பது.

உ-ம்: முருகன், பசு, கிளி, மரம், மண்.

(2) இடப்பெயர் :—இடத்தின் பெயரைக் குறிப்பது.

உ-ம்: நாடு, துறை, காடு, ஆறு, வீடு.

(3) காலப்பெயர் :—காலத்தின் பெயரைக் குறிப்பது.

உ-ம்: வருஷம், மாதம், தை, பகல், மாலை.

(4) சினைப்பெயர் :—உறுப்புகளின் பெயரைக் குறிப்பது.

உ-ம்: தலை, கிளை, துதிக்கை, இறகு, இலை.

(5) குணப்பெயர் :—பொருளின் தன்மையைக் குறிப்பது.

உ-ம்: பசுமை, நன்மை, அன்பு.

குறிப்பு :—பொருள்களின் நிறம், முதலிய குணங்கள் பண்பு (குணம்) எனப்படும்.

பசுமை—நிறம், நன்மை, அன்பு—குணம்.

(6) தொழிற்பெயர் :—தொழிலினது பெயரைக் குறிப்பது.

உ-ம்: வருதல், வருகை, செலவு, பொங்கல்.

கேள்விகள்

1. பெயர்ச்சொல் என்பது யாது?

2. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்? அவை எவை?

3. அவை ஆறு வகைப்படுவதேன்?

4. வள்ளி, வருதல், கை, தை, குளம், தீமை-இவை என்னென்ன பெயர்கள்?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க பெயர்ச்சொற்களை அமைத்துப் படி :—

(1) இவன் பள்ளியில் படிக்கும்———.

(2) இது காவிரி———.

(3) தீபாவளி ——— மாதத்தில் நடைபெறும்.

(4) இந்த மரக் ——— பெரியது.

(5) அவன் செய்யும் வேலை ——— தரும்.

2. இவற்றுள் இன்னின்ன பெயர்ச்சொற்கள் இருக்கின்றன என்பதைக் கூறுக :—

(1) கண்ணன் கருமை நிறத்தவன்.

(2) யானையின் துதிக்கை உரல் போன்றது.

(3) பொங்கல் உடம்பிற்கு நல்லது.

(4) பெரியோர் வருகை போற்றுதற்கு உரியது.

(5) வரவும் செலவும் எழுதிப் பார்.

(6) தலை-கால் தெரியாமல் பேசாதே.

(7) பகலில் பக்கம் பார்த்துப் பேசு; இரவில் அதுவும் பேசாதே.

(8) காலையில் அரும்பு; மாலையில் நறும்பூ.

(9) நக்கீரன் வீட்டில் காலையில் பூசை நடைபெறும்; அவன் செவ்விய முகத்துடன் வருபவர்க்கு நல்வரவு கூறுவான்.

2. பொது--சிறப்புப் பெயர்கள்

1. பொதுப்பெயர் (Common Noun) :—பல பொருள்களுக்குப் பொதுவாக வழங்கும் பெயர்.

உ-ம் : (1) மனிதர்—மக்களுக்குப் பொதுவாக வழங்கும் பெயர்.

(2) விலங்கு—மிருகங்களுக்குப் பொதுவாக வழங்கும் பெயர்.

(3) பறவை—பறவைகளுக்குப் பொதுவாக வழங்கும் பெயர்.

இப்படியே மரம், செடி, மலை, ஆறு முதலியனவும் ஆகும்.

2. சிறப்புப்பெயர் (Proper Noun) :—ஒன்றுக்கே சிறப்பாக வழங்கும் பெயர்.

உ-ம் : (1) கண்ணன்—ஒருவனுக்கே சிறப்பாக வழங்கும் பெயர்.

(2) பசு—ஒன்றுக்கே சிறப்பாக வழங்கும் பெயர்.

(3) கிளி—ஒன்றுக்கே சிறப்பாக வழங்கும் பெயர்.

இப்படியே ஆல், எருக்கஞ் செடி, இமயமலை, காவிரி யாறு முதலியன சிறப்புப் பெயர்கள் ஆகும்.

3. காரண—இடுகுறிப் பெயர்கள்

1. காரணப் பெயர்—ஒரு காரணம்பற்றி ஒரு பொருளுக்கு வழங்கும் பெயர்.

உ-ம்: பறவை—பறக்கும் காரணம் பற்றி வந்த பெயர்.

முக்காலி—மூன்று கால்களை உடைய காரணம் பற்றி வந்த பெயர்.

2. இடுகுறிப் பெயர்—காரணம் கூறமுடியாத நிலையில் பொருளுக்கு வழங்கும் பெயர்.

உ-ம்: மரம்—இதற்கு இப்பெயர் வந்த காரணம் கூறக் கூடவில்லை.

4. முறைப் பெயர்

முறைப் பெயர்—முறையிட்டு வழங்கும் பெயர்.

தந்தை, தாய், மகன், மகள் முதலிய பெயர்கள்.

5. அளவைப் பெயர்

பொருள்களின் அளவைக் குறிக்கும் பெயர், அளவைப் பெயர் எனப்படும். அஃது (1) எண்ணல் அளவைப் பெயர், (2) எடுத்தல் அளவைப் பெயர், (3) முகத்தல் அளவைப் பெயர், (4) நீட்டல் அளவைப் பெயர் என நான்கு வகைப் படும்.

உ-ம்: (1) அரை, ஒன்று—எண்ணல் அளவைப் பெயர்.

(2) சேர், வீசை—எடுத்தல் அளவைப் பெயர்.

(3) படி, மரக்கால்—முகத்தல் அளவைப் பெயர்.

(4) அடி, முழம்—நீட்டல் அளவைப் பெயர்.

6. இருதிணைப் பெயர்கள்

திணை—குலம் (Class). அஃது உயர்திணை, அஃறிணை என இருவகைப்படும். இவ்விரு வகையுள் உலகத்துப் பொருள்கள் எல்லாம் அடங்கும்.

உ-ம்: (1) உயர்திணைப் பெயர்—மக்கள், தேவர், கந்தன், வள்ளி

(2) அஃறிணைப் பெயர்—(மக்கள், தேவர் ஒழிந்த) மற்ற உயிர் உள்ளனவும் இல்லனவும் அஃறிணை.

உ-ம்: பசு, மயில், மரம், மலை, ஆறு முதலியன.

7. ஐம்பாற் பெயர்கள்

பால்—திணையின் உட்பிரிவு (Gender). உயர்திணையுள் (1) ஆண்பால், (2) பெண்பால், (3) பலர்பால் என மூவகை உண்டு. அஃறிணையுள் (1) ஒன்றன்பால் (2) பலவின்பால் என இருவகை உண்டு.

உ-ம்: (1) ஆண்பாற் பெயர்—கண்ணன், முருகன்

(2) பெண்பாற் பெயர்—வள்ளி, மேரி

(3) பலர்பாற் பெயர்—ஆடவர், பெண்கள்

குறிப்பு:—ஒருவனுக்கு மேற்பட்ட ஆடவரும் ஒருத்திக்கு மேற்பட்ட பெண்டிரும் 'பலர்பால்' என்றே கூறப் பெறுவர்.

(4) ஒன்றன்பாற் பெயர்—அது, எலி, மலை

(5) பலவின்பாற் பெயர்—அவை, எலிகள்

8. மூவிடத்துப் பெயர்கள்

தன்மை, முன்னிலை, படர்க்கை—இவ்விடங்களில் வழங்குப் பெயர்கள் 'மூவிடத்துப் பெயர்கள்' எனப்படும்.

1. தன்மைப் பெயர்—தன்மை இடம் குறிப்பது.
   நான், யான், நாம், நாங்கள்

2. முன்னிலைப் பெயர்—முன்னிலை இடம் குறிப்பது.
   நீ, நீர், நீவிர், நீங்கள்

3. படர்க்கைப் பெயர்—படர்க்கை இடத்தைக் குறிப்பது. தன்மை-முன்னிலைப் பெயர்கள் ஒழிந்த எல்லாப் பெயர்களும் படர்க்கைப் பெயர்களே ஆகும்.

(1) அவன், முருகன்—ஆண்பால்
(2) அவள், வள்ளி—பெண்பால்
(3) அவர்கள், அரசர்கள்—பலர்பால்
(4) அது, மாடு—ஒன்றன்பால்
(5) அவை, மாடுகள்—பலவின்பால்

கேள்விகள்

1. பொது-சிறப்புப் பெயர்கள் என்பன யாவை?
2. இடுகுறி-காரணப் பெயர்கள் என்பன யாவை?
3. மூவிடங்கள் யாவை? மூவிடப் பெயர்கள் யாவை?
4. முறைப் பெயர் என்பது யாது?
5. முறைப் பெயர்கள் யாவை?
6. அளவைப் பெயர் என்பது யாது?
7. அளவைப் பெயர்கள் எத்தனை வகைப்படும்?
8. இருதிணைப் பெயர்கள் எவை?
9. ஐம்பாற் பெயர்கள் எவை?

பயிற்சி

1. பலா, மரம், கந்தன், மாணவர், நாய், விலங்குகள், மலைகள், பொதியமலை, ஆறுகள், வைகையாறு, புத்தகங்கள், திருக்குறள்.—இவற்றுள் உள்ள பொதுப்பெயர்-சிறப்புப் பெயர்களைக் கூறுக.

2. நாற்காலி, நூல் (புத்தகம்), கல், மண், மரம், மீன், பறவை, முக்கண்ணன், முள்ளி.—இவற்றில் காரணப் பெயர்கள் எவை? இடுகுறிப் பெயர்கள் எவை?

3. நான் கந்தனோடு வருகையில் நீங்கள் போனீர்கள், யாம் பாடுகையில் ஆடவரும் பெண்டிரும் உன்னுடன் சென்றனர், பிள்ளைகள் ஆசிரியர் சொற்படி நடக்கவேண்டும்.—இவற்றில் உள்ள மூவிடப் பெயர்களைக் குறிக்க.

4. மாமன் மாமியோடு என் அண்ணன் வீட்டிற்கு வருகையில் பாட்டனும் பாட்டியும் எதிர்கொண்டு அழைத்தார்கள்.—இதில் உள்ள முறைப்பெயர்களைக் கூறுக.

5. கால், முக்கால், அங்குலம், கெஜம், கலம், மணங்கு, பலம், ஆழாக்கு.—இவை என்னென்ன அளவைப் பெயர்கள்?

6. தகப்பனார் மிட்டாய்க் கடையில் ஒரு வீசை லட்டு வாங்கினார், மாமனார் ஒரு மைல் நடந்துபோய்க் காவிரியில் நீராடி வந்தார்.—இதில் உள்ள பலவகைப் பெயர்களைக் கூறுக.

7. மேல் வந்துள்ள ஆறு கேள்விகளிலும் உள்ள (1) இருதிணைப் பெயர்களையும் (2) ஐம்பாற் பெயர்களையும் எடுத்து எழுதுக.

9. தொழிற் பெயர்

நடத்தல், வருதல், போதல், வருகை, வரவு—எனத் தொழிலுக்குப் பெயராய் வருவன 'தொழிற் பெயர்' எனப் படும்.

இவை, கடைசியில் தல், அல், அம், ஐ, கை, வை, மதி, வி முதலிய விகுதிகளைப் பெற்று வரும்.

உ - ம்: நடத்தல், ஆடல், கூட்டம், கொலை, இயற்கை, பார்வை, ஏற்றுமதி, கல்வி.

10. வினையால் அணையும் பெயர்

பாடுதல்—தொழிற் பெயர். முருகன் பாடுதல் ஆகிய தொழிலைச் செய்தால், ' முருகன் பாடினான் ' என்கிறோம். அவன் போதலைக்கண்ட நாம், 'பாடினான் போகிறான், பாடினவன் போகிறான் ' என்று சில சமயங்களில் கூறுகிறோம் அல்லவா ? முருகன், பாடுதலாகிய தொழிலைச் செய்தமையால், 'பாடினான், பாடினவன் ' என்னும் புதிய பெயர்களை அடைகிறான். இங்ஙனம், ஒருவன் தான் செய்யும் வினையால் (தொழிலால்) அணையும் பெயர்கள் பல உண்டு. ஓடினவன், ஓடுகின்றவன், ஆடினவள், படித்தவள் முதலியன வினையால் அணையும் பெயர்கள்.

'பாடினவன்' போன்ற வினையால் அணையும் பெயர்கள் எல்லாம் எட்டு வேற்றுமைகளையும் ஏற்று வரும்.

உ - ம்: 1. பாடினவன் 2. பாடினவனை 3. பாடினவனால் 4. பாடினவனுக்கு 5. பாடினவனில் 6. பாடினவனது 7. பாடினவனிடம் 8. பாடினவனே, வருக.

வினையால் அணையும் பெயர் (1) பாடினவன், (2) பாடுகின்றவன், (3) பாடுபவன் என மூன்று காலங்களிலும் வரும்.

11. ஆகு பெயர்

அவனைச் சிதம்பரம் சிரிக்கிறது.—இவ்வாக்கியத்தில், சிதம்பரம் என்பது ஓர் இடத்தின் பெயர். அந்த இடம் சிரிக்குமா ? 'அதில் உள்ள மக்கள் சிரித்தார்கள்' என்பதே பொருள் அல்லவா ? ஆகவே, சிதம்பரம் என்னும்

இடத்தின் பெயர், அவ்விடத்தில் உள்ள மக்களுக்கு ஆகி வந்தது காண்க.

இப்படி, ஒன்றன் பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொன்றுக்கு ஆகி வருதல் 'ஆகு பெயர்' எனப்படும்.

உ-ம்: பொங்கல் உண்டான்.—இதில் பொங்கல் (பொங்குதல்) தொழிற் பெயர். ஆனால் அப்பெயர், அத்தொழிலை அடைந்த உணவுக்கு ஆகி வருகிறதால் ஆகுபெயர் எனப்படும்.

வேற்றுமை

Case

வேற்றுமையைப் பற்றிச் சென்ற வகுப்பில் தெளிவாகப் படித்து அறிந்தீர்கள் அல்லவா? பெயர்ச்சொல் சில உருபுகளை ஏற்றுப் பெயர்ச் சொல்லின் பொருளை வேறு படுத்தும். அங்ஙனம் வேறுபடுத்தும் உருபுகள் வேற்றுமை உருபுகள் எனப்படும். அவற்றைப் பற்றியும் சென்ற வகுப்பில் நன்றாகப் படித்தீர்கள் அல்லவா?

'இல்' என்னும் வேற்றுமை உருபு ஐந்தாம் வேற்றுமையிலும் ஏழாம் வேற்றுமையிலும் வருகின்றது. அஃது இரண்டு இடங்களிலும் வேறு வேறு பொருளில் வருவது என்பதை அறிய வேண்டும்.

உ-ம்: ஐந்தாம் வேற்றுமை (Ablative of Motion)—

கந்தனில் முருகன் பெரியவன்.

↓

(கந்தனை விட)

இங்கு, கந்தனில் என்பதில் உள்ள 'இல்,' (கந்தனை விட) 'விட' என்னும் ஒப்புப் பொருளில் (comparison) வருகிறது.

ஏழாம் வேற்றுமை (Local Ablative)—பெட்டியில் பணம் இருக்கிறது. (பெட்டியாகிய இடத்தில்)

இங்கு, 'இல்' — இடப் பொருளில் வருவது காண்க. எனவே, (1) ஐந்தாம் வேற்றுமையில் வரும் 'இல்' உருபு ஒப்புப் பொருளில் வருவது.

(2) ஏழாம் வேற்றுமையில் வரும் 'இல்' உருபு இடப் பொருளில் வருவது.

வேற்றுமைத் தொகை—வேற்றுமை விரி

1. பால் குடித்தான்.—இது பாலைக் குடித்தான் என விரியும். முன்னதில் ஐ - உருபு தோக்கி (மறைந்து) வருதலால், 'பால் குடித்தான்' என்பது வேற்றுமைத் தொகை எனப்படும்.

2. பாலைக் குடித்தான்.—இதில் ஐ உருபு தொகாமல் (வெளிப்படையாக) வருவதால் வேற்றுமை விரி எனப்படும்.

இத்தொகையும் விரியும் இரண்டு முதல் ஏழு வேற்றுமை முடிய வரும். முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் தொகையும் விரியும் இல்லை.

1. இரண்டாம் வேற்றுமை (Objective Case):— உருபு ஐ.

பாடம் படி — தொகை. பாடத்தைப் படி—விரி.

2. மூன்றும் வேற்றுமை (Instrumental Case):— உருபுகள் ஆல், ஒடு, உடன்.

தலை வணங்கு—தொகை. தலையால் வணங்கு—விரி.

3. நான்காம் வேற்றுமை (Dative Case): உருபு கு. வீடு செல்—தொகை. வீட்டுக்குச் செல்—விரி.

4. ஐந்தாம் வேற்றுமை (**Ablative of Motion**) : உருபுகள்—இல், இருந்து, நின்று.

நாடு நீங்கு—தொகை. நாட்டிலிருந்து நீங்கு—விரி.

5. ஆறும் வேற்றுமை (**Genitive Case**) : உருபுகள்- அது, உடைய.

என் கை —தொகை. எனது கை—விரி.

6. ஏழாம் வேற்றுமை (**Local Ablative**) : உருபுகள்—இல், இடம், கண்.

வீடு நுழை—தொகை. வீட்டில் நுழை—விரி.

கேள்விகள்

1. தொழிற் பெயர் என்பது யாது ? உதாரணத்தால் விளக்குக.

2. வினையால் அணையும் பெயர் யாது ? விளக்குக.

3. ஆகு பெயர் என்பது யாது ? உதாரணத்தால் விளக்குக.

4. வேற்றுமை, வேற்றுமை உருபுகள் — யாவை ?

5. ஐ, இல், இடம், உடைய, கு, ஆல், உடன்—இவை எவ்வெவ் வேற்றுமை உருபுகள் ?

6. வேற்றுமைத் தொகை, வேற்றுமை விரி என்பன யாவை ? உதாரணத்தால் விளக்குக.

பயிற்சி

1. எடுத்தல், ஆட்டம், பாடுதல், பாடல், செலவு, நிலை, செயற்கை, கோவை, போர்வை, இறக்குமதி, கல்வி—இவை என்ன பெயர்கள் ? இவற்றில் உள்ள விகுதிகள் யாவை ?

2. வந்தவனைக் கண்டேன், என் வருகை கண்டு ஆடினவன் ஓடிவிட்டான், பாடியவர் எங்கே?, 'ஏற்றுமதி ஆனதா ?' என்று போனவனைக் கேட்டேன், சீதையைத் தேடினவர் வெற்றியோடு மீண்டனர்.—இவற்றில் உள்ள (1) தொழிற் பெயர்களையும் (2) வினையால் அணையும் பெயர்களையும் கூறுக.

3. மயில் வந்தாள், தாமரை போன்ற முகம், கொவ்வை போன்ற உதடு, அவனைத் தெருச் சிரிக்கிறது. ஊர் நடுங்குகிறது, ஊர் அடங்கிற்று, வீசை வாங்கினேன், ஒரு படி வாங்குகிறேன், ஒரு கெஜம் வாங்கினாள்.—இவற்றுள் ஆகு பெயர்கள் எவை ? எப்படி ? விளக்குக.

4. கந்தன் வீடு, இராமன் தசரதன் மகன், பள்ளிக்கூடம் போ, பசு வாங்கு, மான் கொம்பு, சொல் கேள், பெட்டிப் பணம், மலை நீர்.—இவற்றை வேற்றுமை **விரி** ஆக்குக.

5. வீட்டைக் கட்டு, தலையால் வணங்கு, வீட்டிற்குப் போ, ஆற்றினது கரை, வாலினது மயிர், நகரத்தில் உள்ள சிறுவன், பதத்துக்கு உரை—இவற்றைத் **தொகை** ஆக்குக.

6. அரை, மாமன், முழம், வீசை, படி, தங்கை, அரசன், நான், நீங்கள், புலிகள், பூனை—இவை என்னென்ன பெயர்கள் ?

வினைச் சொல்

Verb

1. வினைமுற்று - எச்சங்கள்

சென்ற வகுப்பில், (1) செயல் முடிந்து நிற்பதைத் தெரிவிக்கும் வினைச்சொல் வினைமுற்று (Finite Verb) என்பதையும், (2) முடிந்த பொருளைத் தாராமல் எச்சமாய் (குறை சொல்லாய்) நின்று பெயர்ச்சொல்லைத் தழுவுவது பெயரெச்சம் (Noun Participle) என்பதையும், (3) அங்ஙனமே நின்று வினைச்சொல்லைத் தழுவுவது வினையெச்சம்

(Verbal Participle) என்பதையும் விளக்கமாகப் படித்தீர்கள் அல்லவா?

செய்தான்—வினைமுற்று
செய்த (பையன்)—பெயர் எச்சம்
செய்து (போனான்)—வினையெச்சம்

2. பகுதி - விகுதி - இடைநிலை

ஒவ்வொரு வினைச்சொல்லும் ஒரு பகுதி அடியாகவே பிறக்கும். பகுதி என்பது 'வா, போ, செய், நில்' என்பன போன்ற ஏவல் (கட்டளைச் சொல்) ஆகும். இதைக் காண்பது எப்படி?

(1) 'செய்தான்' என்பது வினைமுற்று. என்ன சொன்னால் ஒருவன் செய்வான்? 'சேய்' என்றால் செய்வான். ஆகவே, இங்குச் சேய் என்பது பகுதி (Root) ஆகும்.

குறிப்பு :—இப்படியே ஒவ்வொன்றுக்கும் பகுதி கண்டு கொள்க.

(2) 'செய்தான்' என்னும் சொல், செய்தவன் ஆண் மகன் என்பதைக் குறிக்கிறது. 'செய்தாள்' என்பது செய்தவள் பெண் மகள் என்பதைக் குறிக்கிறது. இவ்விரண்டு சொற்களிலும் இம்மாறுதலை உண்டாக்கும் உறுப்பு எது?

செய்தான் = செய் + த் + ஆன்
செய்தாள் = செய் + த் + ஆள்

இரண்டிலும் 'செய்'—பகுதி; அதுவும், 'த்' என்பதுவும் மாறவில்லை. ஆனால், முதலில் உள்ள ஆன், இரண்டாம் உதாரணத்தில் ஆள் என மாறுகிறது. எனவே, செய்த ஆளைக் குறிப்பது கடைசி உறுப்பே ஆகும். இஃது இலக்கணத்தில் விகுதி (Termination) எனப்படும்.

ஆன்—ஆண்பாலைக் குறிக்கும் விகுதி.
ஆள்—பெண்பாலைக் குறிக்கும் விகுதி.

3. செய்தான்—இறந்தகால வினைமுற்று, செய்கின்ருன்—நிகழ்கால வினைமுற்று என்பதை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? இவை எப்படிக் காலத்தை உணர்த்துகின்றன?

செய்தான் = செய் + த் + ஆன் (இறந்த காலம்)

செய்கின்ருன் = செய் + கின்று + ஆன் (நிகழ்காலம்)

இவ்விரண்டிலும் (1) செய்—பகுதி, (2) ஆன்—விகுதி என்பதை முன்பே அறிந்தோம் அல்லவா? இவ்விரண்டும் மாறுதல் பெறவில்லை. மாறுதல் பெற்றிருப்பன இடையில் நிற்கும் 'த்-கின்று' என்னும் உறுப்புகளே ஆகும். இவை பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்பதால் இடைநிலை எனப்படும். இங்கு,

த்—இறந்தகால இடைநிலை.
கின்று—நிகழ்கால இடைநிலை.

குறிப்பு :—(1) இந்த முக்கால இடைநிலைகளைப் பற்றியும் நீங்கள் சென்ற வகுப்பில் படித்தீர்கள்.

(2) வினைச்சொற்களில் பல உறுப்புகள் இருக்கும். இருப்பினும் பகுதி, விகுதி, இடைநிலை என்பவற்றை மாத்திரம் அறியப் பழகுக.

இதுவரை நீங்கள் அறிந்தவை என்ன?

ஒரு வினைச்சொல்லில்,

(1) முன் நிற்பது தொழிலைக் குறிப்பது; அதுவே பகுதி எனப்படும்.

(2) பின் நிற்பது எழுவாயைக் குறிப்பது ; அதுவே விகுதி எனப்படும்.

(3) இடையில் நிற்பது காலத்தைக் குறிப்பது ; அதுவே இடைநிலை எனப்படும் என்பனவே அறிய வேண்டுவன.

‘இன்’ என்னும் இடைநிலை

இறந்தகால இடைநிலைகளில் ‘இன்’ என்பது ஒன்று என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த ‘இன்,’ சொற்களில் பலவாறு வந்து, இறந்த காலத்தை உணர்த்தும் என்பதை இங்கு அறிதல் நலம்.

உ-ம் : (1) போயின = போ + இன் + அ
(இன் அப்படியே வந்திருக்கிறது.)

(2) போன = போ + ன் + அ
(ன் மாத்திரம் வந்திருக்கிறது.)

(3) போயது = போ + ய் + (அ)து
(இ-‘ய்’ ஆக மாறியுள்ளது.)

இப்படி மாறுபட்டு வருதல் இடம் நோக்கி உணர்க.

கேள்விகள்

1. வினைமுற்றின் இலக்கணம் யாது ?

2. வினையெச்சம் - பெயரெச்சம்இவற்றின் இலக்கணம் யாது ?

3. பகுதி என்பது யாது? அதனைக் கண்டறிவது எப்படி ?

4. விகுதி என்பது யாது? அதனைக் கண்டறிவது எப்படி ?

5. இடைநிலை-பொருள் யாது? அதனைக் கண்டறிவது எப்படி?

6. 'இன்' என்னும் இடைநிலை என்னென்ன மாறுதல்களை அடையும்? உதாரணம் தருக.

பயிற்சி

1. வருகிறான், செய்வார், போயிற்று, ஓடுகிறான், படித்தார், வருகிற, வந்து, செய்கின்ற, போன, ஓடிய, படித்த, படித்து, எழுந்து, நின்று, ஓடி.—இவற்றில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் கூறுக.

2. மேல் வந்துள்ள சொற்களில் உள்ள பகுதி, விகுதி, இடைநிலைகளைக் கூறுக.

3. மேல் கூறப்பெற்ற சொற்களில் உள்ள காலங்களைக் கூறுக.

4. வந்து, போய், நின்று, கண்டு, படித்து, எழுந்து.—இவற்றைப் பெயரெச்சங்களாக மாற்றுக.

5. ஓடின, ஆடின, பேசிய, சிரித்த, விளைத்த, முளைத்த.—இவற்றை வினையெச்சங்களாக மாற்றுக.

6. 4, 5-ல் வந்துள்ள எச்சங்களை முற்றுகளாக மாற்றுக.

7. படி, நில், நட, வா, எழு, இடி, தூங்கு.—இப்பகுதிகளோடு எதிர்கால இடைநிலைகளையும் 'ஆன்' விகுதியையும் கூட்டி வினைமுற்றுகள் ஆக்குக.

உ-ம்: எழு + வ் + ஆன் = எழுவான்.

8. அப்பகுதிகளோடு நிகழ்கால இடைநிலைகளையும் 'ஆள்' விகுதியையும் கூட்டி வினைமுற்றுகள் ஆக்குக.

9. அப்பகுதிகளோடு ஏற்ற இறந்தகால இடைநிலைகளையும் 'ஆர்' விகுதியையும் கூட்டி வினைமுற்றுகள் ஆக்குக.

10. செய்தான், நிற்கிறாள், படிக்கிறார், ஓடுகிறது, ஆடின, அடிப்பார், காப்பாள், உண்டான், போயிற்று, நடக்கின்றன.—இவற்றில் (1) ஆண்பால் வினைமுற்றுகள் எவை? (2) பெண்பால் வினை

முற்றுகள் எவை ? (3) பலர்பால் வினைமுற்றுகள் எவை ? (4) ஒன்றன்பால் வினைமுற்றுகள் எவை? (5) பலவின்பால் வினைமுற்றுகள் எவை ?

வினைச்சொல் வகைகள்

1. தன்வினை—பிறவினை

வினைச்சொற்கள் (1) தன்வினை-பிறவினை, (2) செய்வினை-செயப்பாட்டுவினை, (3) செயப்படுபொருள் குன்றியவினை-செயப்படுபொருள் குன்றாவினை எனப் பலவகைப்படும். இவற்றுள் பின் இரண்டும் சென்ற வகுப்பிலேயே வாசித்துவிட்டீர்கள். ஆதலால், இங்குத் தன்வினை - பிறவினைகளை மட்டும் கவனிப்போம் :

1. கண்ணன் வந்தான்.—இதில், கண்ணன் (தானே) வருதலாகிய வினையைச் செய்தான். ஆதலால், 'வந்தான்' என்பது தன்வினை.

2. கண்ணன் முருகனை வருவித்தான்.—இதில், கண்ணன் முருகனை (பிறனை) வருமாறு செய்தான். ஆதலால், 'வருவித்தான்' என்பது பிறவினை.

இங்ஙனமே,

வா	—தன்வினை	வருவி	—பிறவினை
போ	—தன்வினை	போக்கு	—பிறவினை
படி	—தன்வினை	படிப்பி	—பிறவினை
அழை	—தன்வினை	அழைப்பி	—பிறவினை
ஆடு	—தன்வினை	ஆட்டு	—பிறவினை

எனவரும்.

இங்ஙனமே பிறவினைச் சொற்களையும் கொள்க.

2. ஏவல்—வியங்கோள்

1. வரதா, வா.—இதில், வரதனை வருதலாகிய தொழிலைச் செய்ய ஏவுதலால், 'வா' என்பது ஏவல் வினை (Imperative Verb) எனப்படும். வினைப் பகுதிகள் எல்லாம் ஏவல் என்றே கூறலாம்.

வா—ஏவல் ஒருமை

வாரும், வாருங்கள்—ஏவற் பன்மை

2. ஐயா, வருக.—இதில் 'வருக' என்பது மரியாதையாக ஏவும் வினை ஆதலால், வியங்கோள் வினை (Optative Verb) எனப்படும். இவ்வினை, (1) வாழ்த்தல், (2) வைதல், (3) வேண்டல், (4) விதித்தல் முதலிய பொருள்களில் வரும்.

உ-ம்: (1) நீ வாழ்க —வாழ்த்தல்
(2) நீ அழிக —வைதல்
(3) நீ அருள்க —வேண்டல்
(4) நீ செய்க —விதித்தல்

குறிப்பு:—(1) உலக வழக்கில் 'வேண்டும்' என்பது வியங்கோள் வினையாக இருந்து வருகிறது.

உ-ம்: தாங்கள் வாழ வேண்டும்—வாழ்த்தல்
தாங்கள் அருள வேண்டும்—வேண்டல்
நீ அழிய வேண்டும்—வைதல்

(2) பிச்சைக்காரன் 'தாயே, சாதம் போடு' என்கிறான். இங்குப் போடு என்பது வேண்டுதல் பொருளில் வருதலால் ஏவல் ஆகாது; வியங்கோள் என்றே பொருள் நோக்கிக் கோடல் வேண்டும்.

3. ஐம்பால் வினைமுற்றுகள்

1. இராமன் வந்தான்—ஆண்பால் வினைமுற்று
2. சீதை வந்தாள்—பெண்பால் வினைமுற்று
3. வீரர் வந்தனர் } — பலர்பால் வினைமுற்று
   பெண்டிர் வந்தனர்
4. பசு வந்தது — ஒன்றன்பால் வினைமுற்று
5. பசுக்கள் வந்தன -- பலவின்பால் வினைமுற்று

'இராமன்' என்பது இல்லாமலே 'வந்தான்' என்னும் வினைமுற்று ஒன்றைக்கொண்டே, 'இஃது ஆண்பால் வினைமுற்று' என்பதைக் கூறி விடலாம். எப்படி? 'வந்தான்' என்பதன் கடைசியில் உள்ள 'ஆன்' விகுதியே ஆண்பாலை உணர்த்துகிறது அன்றோ? இங்ஙனமே ஏனைய நான்கு பால்களையும் வினைமுற்றின் விகுதி கொண்டே கூறிவிடலாம். ஆதலின், ஐம்பால் வினைமுற்று விகுதிகளை ஓரளவு அறிந்திருத்தல் நல்லது.

1. அன், ஆன்—ஆண்பால் வினைமுற்று விகுதிகள்.
   (முருகன்) வந்தனன், வந்தான்.
2. அள், ஆள்—பெண்பால் வினைமுற்று விகுதிகள்.
   (வள்ளி) வந்தனள், வந்தாள்.
3. அர், ஆர், க்ள்—பலர்பால் வினைமுற்று விகுதிகள்.
   (வீரர்) வந்தனர், வந்தார், வந்தார்கள்.

குறிப்பு:—ஒருவரையே 'அவர் வந்தார்' எனின், இங்கு, வந்தார் என்பது மரியாதைப் பன்மை வினைமுற்று என்பதை அறிக.

4. து, று, டு—ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள்.
   (பூனை) வந்தது, போயிற்று, உண்டு.
5. அ, ஆ—பலவின்பால் வினைமுற்று விகுதிகள்.
   (பூனைகள்) வந்தன, வாரா.

4. மூவிடத்து வினைமுற்றுகள்

1. நான் வந்தேன்—தன்மை ஒருமை வினைமுற்று

2. நாம் வந்தோம்—தன்மைப் பன்மை வினைமுற்று

3. நீ வந்தனை, வந்தாய்—முன்னிலை ஒருமை வினைமுற்று.

4. நீர் வந்தீர், நீங்கள் வந்தீர்கள் } — முன்னிலைப் பன்மை வினைமுற்று.

5. ஆண்பால், பெண்பால் ஒன்றன்பால் வினைமுற்றுகள் } — படர்க்கை ஒருமை வினைமுற்றுகள்.

6. பலர்பால், பலவின்பால்—படர்க்கைப் பன்மை வினைமுற்றுகள்.

இவை (5, 6) இரண்டுமே ஐம்பால் வினைமுற்றுகள். இவையே மேல் கூறப்பட்டன.

மேல் கூறிய ஐம்பால் வினைமுற்றுகளில் உள்ள விகுதிகளைக் கொண்டே பால் உணர்தல் போலவே, 'வந்தேன்' முதலிய வினைமுற்றுகளைக் கொண்டே 'இஃது இன்ன இடத்து வினைமுற்று' என்பதைக் கூறிவிடலாம். இவற்றின் விகுதிகளாவன:—

1. வந்தேன்—ஏன்—தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

2. வந்தோம்—ஓம்—தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.

3. வந்தனை— ஐ, வந்தாய்—ஆய் } — முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள்.

4. வந்தீர்—ஈர், வந்தீர்கள்—கள் } — முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள்.

குறிப்பு:—இவ்வினைமுற்று விகுதிகளில் வேறு சிலவும் உண்டு. அவற்றை மேல் வகுப்புகளில் படித்துணர்க.

கேள்விகள்

1. 'தன்வினை' என்பது யாது? 'பிறவினை' என்பது யாது?

2. ஏவல்—வியங்கோள்: வேறுபாடு யாது?

3. வியங்கோள் எத்துணைப் பொருள்களில் வரும்?

4. 'வேண்டும்' என்பது எத்துணைப் பொருள்களில் வரும்?

5. ஐம்பால்கள் எவை? ஐம்பால் வினைமுற்றுகள் எவை? உதாரணம் தருக.

6. வினைமுற்றைக் கொண்டே 'பால்' கூறுதல் எப்படி முடியும்?

7. ஆண்பால் வினைமுற்று விகுதிகள் எவை?

8. பெண்பால் வினைமுற்று விகுதிகள் எவை?

9. பலர்பால் வினைமுற்று விகுதிகள் எவை?

10. ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள் யாவை?

11. பலவின்பால் வினைமுற்று விகுதிகள் யாவை?

12. தன்மை ஒருமை, தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் யாவை?

13. முன்னிலை ஒருமை, முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் யாவை?

14. 'ஒருவர் வந்தார்'.—இதில் உள்ள வினைமுற்று எவ்வகையைச் சேர்ந்தது?

பயிற்சி

1. ஆடு, கூடு, ஏறு, பாய், நட, உருள், விழு, நீங்கு, வருந்து, கிளம்பு.—இவற்றைப் **பிறவினைகள்** ஆக்குக.

2. செய்வி, நடத்து, வீழ்த்து, எடுப்பி, சேர்த்தான், கடத்தினர், ஆழ்த்தினள்.—இவற்றுக்குத் **தன்வினைகள்** கூறுக.

3. செய், நில், வாழ், வா, போ, எடு, படு, தூங்கு.—இவற்றை **வியங்கோள் வினைகள்** ஆக்குக.

4. அழிக, நீந்துக, செய்யவேண்டும், எழுக, வருக.—இவற்றை **ஏவல் வினைகள்** ஆக்குக.

5. என், ஆன், அ, ஆ, அர், ஈர், ஆய், ஐ.—இவ்விகுதிகளைக் கொண்டு வினைமுற்றுகளை அமைக்க; இவை இன்ன வினைமுற்றுகள் என்பதையும் கூறுக.

6. செய், இரு, நட, படி.—இவ்வினைப் பகுதிகளையும் மேற்கண்ட விகுதிகளையும் இறந்தகாலத்திற் பொருத்திக் காட்டுக.

உ-ம்: செய் + **இறந்தகால இடைநிலை** + என் — **செய்தேன்.**

சொல்லைப் பற்றிய கேள்விகள்

(Forms I & II)

1. சொல் என்பது யாது? கந்தன், வந்தான், அம்மணி, ஆடு, போனது, அலை, அடிக்கின்றன—இவை என்னென்ன சொற்கள்?

2. அறுவகைப் பெயர்ச்சொற்கள் எவை? கால், பொங்கல், பள்ளிக்கூடம், கருமை, தீமை, மார்கழி, காலை.—இவை எவ்வெப் பெயர்ச்சொற்கள்?

3. வீரன் - நெல்சன், கடவுள் - சிவன், மரம் - ஆல், பறவை - புறா, ஆறு - காவிரி: இவற்றுள் பொது, சிறப்புப் பெயர்கள் எவை?

4. வீரன், பத்தினி, கொக்கு, புறாக்கள், அரசர்கள், அரசியர்—இவை எவ்வெப் பால் பெயர்கள் ?

5. நான், நீ, அவன், நாம், நீர், அவர், நீங்கள், நாங்கள், இராமன், சீதை, மணி, நாயகன்.—இவை எவ்வெவ் விடத்துப் பெயர்கள் ?

6. அரை, முழம், பலம், மைல், தந்தை, அத்தை.—இவை எவ்வெப் பெயர்கள் ?

7. ஆகுபெயர்—யாது ? உதாரணத்தால் விளக்குக.

8. தொழிற்பெயர்—யாது ? அதன் விகுதிகள் எவை ?

9. கண்டான்—இதனை வினையாலணையும் பெயர் ஆக்குக.

10. படித்தல், ஓடல், கல்வி, ஆட்டம், ஏற்றுமதி, சேர்க்கை, போர்வை.—இவற்றில் உள்ள தொழிற்பெயர் விகுதிகள் எவை ?

11. படித்தவன்—இவ்வினையால் அணையும் பெயர் எட்டு வேற்றுமைகளிலும் வருவதற்கு உதாரணங்கள் தருக.

12. வேற்றுமை-யாது ? வேற்றுமை உருபு-யாது ?

13. வேற்றுமைத் தொகை, விரிகளை விளக்குக.

14. கந்தன் மலை, கணக்குப் போடு, வீடு வாசல், தலை வணங்கு, மலை அருவி, பெட்டிப் பணம்.—இவற்றை விரி ஆக்குக.

15. திணை, பால், எண், இடம்.—இவற்றை விளக்குக.

16. பெயர்ச் சொல்லில் அறிய வேண்டுவன யாவை?

17. வினைச்சொல்லில் அறிய வேண்டுவன யாவை ?

18. வினைச்சொல்—யாது ? வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம்—இவற்றை உதாரணங்களால் விளக்குக.

19. பரிந்து பேசிய பரந்தாமன் நடந்து வந்த நட

ராசனை வரவேற்றான்.—இதில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் இவற்றைக் கூறுக.

20. முக்கால இடை நிலைகளைக் கூறுக.

21. 'இன்' இடைநிலை பெறும் மாறுதல்கள் எவை?

22. கண்டான், பெறுகிறாள், வருவார், கற்றார், செய்தாள், போயிற்று, வருகின்றான், பார்ப்பான்.—இவற்றில் உள்ள முக்கால இடைநிலைகளைச் சுட்டுக.

23. போயிற்று, போனது, ஆகியது.—இவற்றில் உள்ள இடைநிலைகள் எவை? அவை குறிக்கும் காலம் என்ன?

24. தன்வினை—பிறவினை என்பன யாவை?

25. ஆகு, நட, படி, ஓடு, ஆடு, எழு.—இவற்றைப் பிற வினைகள் ஆக்குக.

26. உருட்டு, பாய்ச்சு, போக்கு, கூட்டு, ஏற்று, நீக்கு, வருத்து, கிளப்பு.—இவற்றைத் தன் வினைகள் ஆக்குக.

27. ஏவல், வியங்கோள்—வேறுபாடு என்ன?

28. வியங்கோள் எப்பொருள்களில் வரும்? உதாரணம் தருக.

29. வேண்டும்.—இஃது எப்பொருள்களில் வரும்? உதாரணம் தருக.

30. நீ வாழ்க, நீ கெடுக, நீ தருக, நீ செய்க, நீ வர வேண்டும், நீ ஒழிய வேண்டும், நீ வாழ வேண்டும்.—இவை எப் பொருள்களில் வந்துள்ளன?

31. வந்தான், செய்கிறாள், தூங்குகிறது, ஓடின, வருவார்.—இவை எவ்வெப் பால் வினைமுற்றுகள்?

32. வந்தாய், வந்தான், வந்தனை, வந்தீர், வந்தோம், வந்தீர்கள், வந்தேன்.—இவை எவ்வெவ்விடத்து வினைமுற்றுகள்?

III சொற்றொடர்

1. கலப்பு வாக்கியம் (Complex Sentence) :

சென்ற வகுப்பில் தனி வாக்கியம், தொடர்வாக்கியம் என்னும் இரண்டைப்பற்றியும் வாசித்தீர்கள் அல்லவா? இங்குக் கலப்பு வாக்கியம் பற்றிக் கவனிப்போம்.

ஒரு தனி வாக்கியமும் அதனோடு தொடர்புடைய பிற வாக்கியங்களுடன் இணைந்திருப்பது கலப்பு வாக்கியம் எனப் படும்.

உ-ம் : நான் சென்னை சென்றபொழுது, 'நீ எங்கிருந்து வந்தாய்?' என்று உன் மாமனார் என்னைக் கேட்டார்.

இதில், (1) உன் மாமனார் என்னைக் கேட்டார்.—தனி வாக்கியம்.

(2) நான் சென்னை சென்றேன்—அப்பொழுது—சார்பு வாக்கியம்.

(3) 'நீ எங்கிருந்து வந்தாய்?'—சார்பு வாக்கியம், (Subordinate clause.)

குறிப்பு :—இவ்வாக்கிய அமைப்புத் தமிழ் இலக்கணத்திற்கு ஏற்றதன்று; ஆயினும் ஆங்கில முறைக்கு ஏற்ப, இங்ஙனம் கொடுக்கப்பட்டதென்பதை அறிக.

2. வேறு சில வாக்கியங்கள்

1. உடன்பாடு (Affirmative), எதிர்மறை (Negative).

(1) நான் வந்தேன்—உடன்பாட்டு வாக்கியம்.

நான் வந்திலேன்
நான் வரவில்லை } — எதிர்மறை வாக்கியம்.

(2) நீ வந்தாய்—உடன்பாட்டு வாக்கியம்.

நீ வந்திலை, வரவில்லை—எதிர்மறை வாக்கியம்

(3) அவன் வந்தான்—உடன்பாட்டு வாக்கியம்.

அவன் வந்திலன்
அவன் வரவில்லை } — எதிர்மறை வாக்கியம்

இங்ஙனமே பிறவற்றுக்கும் கூறிக்கொள்க.

2. (1) நான் வந்தேன்—உடன்பாட்டு வாக்கியம்.

நான் வந்தேனா ?— உடன் பாட்டு வினா வாக்கியம்.

(2) நான் வரவில்லை — எதிர்மறை வாக்கியம்.

நான் வரவில்லையா? எதிர்மறை வினா வாக்கியம்.

இங்ஙனமே பிறவற்றுக்கும் கூறிக்கொள்க.

3. பிழை இன்றிப் பேசலும் எழுதலும்
Errors and Corrections:

(1) நாம் பேசும் வாக்கியங்களில் பல சொற்களைப் பிழைபட உச்சரிக்கிறோம். இதனை நாம் உணர்வதில்லை. பேச்சுப் பழக்கமே எழுதும்பொழுதும் வந்து விடுகிறது; வரவே, நம் சொற்களும் பிழைபட்டு விடுகின்றன. அவற்றுள் சில கீழே காண்க.

சரியானவை :	பிழைபட்டவை :
முன்னரே	ஏற்கனவே
மிக்க	வெகு
மற்ற, பிற, வேறு	இதர
அவன் மீது	அவன் பேரில்
சுவரில்	சுவற்றில்
தவற்றோடு	தவறோடு
நிரம்ப	ரொம்ப

(2) நாம் பேசும் வாக்கியங்களில் பல சொற்களைச் சிதைந்து வழங்குகிறோம். உதாரணமாகச் 'சீநிவாசன்' என்பதைச் 'சீனு' என்கிறோம். இப்பழக்கம் எழுத்திலும் வந்து, தவறு ஆய்விடுகிறது. இத்தகைய சொற்கள் சிலவற்றைக் கீழே காண்க :

சரியான சொற்கள் :	சிதைந்த சொற்கள் :
அகத்துக்கு	ஆத்துக்கு
சீதாராமன்	சீத்து
பார்த்தசாரதி	பாச்சு
சேஷாத்திரி	சேச்சு
வருகிறாயா ?	வர்ரியா ?
போகிறேன்	போரேன்
நேற்று	நேத்து
இன்று வருகிறேன்	இண்ணைக்கு வர்ரேன்

இவ்வுதாரணங்களால், நாம் பேசுவது 'கொச்சைத் தமிழ்' என்பது நன்கு விளங்குகிறது அன்றோ? கொச்சைத் தமிழ் எழுதத் தக்கதன்று. ஆதலின், பேசும்பொழுது ஒழுங்காகப் பிழையின்றிப் பேசினால், எழுதும் பொழுது பிழை வராது. ஆதலால், நீங்கள் முதலில் பேச்சுத் தமிழைச் சுத்தப்படுத்தவேண்டும். பேச்சுத்தமிழ் சுத்தமாயின், எழுதுவதும் சுத்தமாக இருக்கும்.

நாம் பேசும் வாக்கியங்களில் பிறமொழிச் சொற்களையும் இடையிடையே கலந்து பேசுகிறோம்.

உ-ம் : என்ன சார், இன்று லேட் ஆய்விட்டது. இவ் வாக்கியத்தில், 'சார், லேட்' என்னும் இரண்டும் ஆங்கிலச் சொற்கள். வாக்கியத்தில் உள்ள சொற்களோ ஐந்து. இவற்றில் இரண்டு ஆங்கிலச் சொற்கள். இப்பழக்கமே எழுதும் பொழுதும் நம்மை அறியாமல் வந்து விடுகிறது. இதனால் பிழைபட்ட தமிழே பரவுகிறது. ஆதலின், நாம், 'என்ன ஐயா இன்று நேரம், ஆய்விட்டது' என்று தமிழில் பேசுவதே சிறந்த பழக்கம் ஆகும். இங்ஙனம் தமிழ்ச் சொற்களைப் பேசாது, பிற மொழிச் சொற்களைத் தமிழ் வாக்கியத்தில் பேசுவது பெருந்தவறு. இக்கொடிய பழக்கம் நீக்கப்படல் வேண்டும்

பிறமொழிச் சொற்கள் :	தமிழ்ச் சொற்கள் :
பீச் (Beach)	கடற்கரை
லைட் ஹவுஸ்	கலங்கரை விளக்கம்
விவாஹம்	திருமணம்
உற்சவம்	திருவிழா
கர்ண பூஷணம்	காதணி
ஸ்ரீமான்	திருவாளர்
ஸ்ரீமதி	திருவாட்டி
முகூர்த்தம்	நாழிகை
சர்வம்	எல்லாம்

நிறுத்தக் குறிகள்
Punctuation

சென்ற வகுப்பில் காமா, முற்றுப் புள்ளி, கேள்விக் குறி இவைபற்றி அறிந்தீர்கள். இவ்வகுப்பில் சில குறிகளைப் பற்றிப் படித்துணர்க :

1. ; இது செமிக்கோலன் எனப்படும். இங்கு இரண்டு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும். இது நீண்ட வாக்கியங்களில் இடையிடையே கருத்து முடியும் இடங்களில் இடத் தகுவது.

உ-ம் : கந்தன் கடைக்குப் போனான் ; ஆறணா கொடுத்தான் ; புத்தகம் வாங்கினான்.

2. : இது கோலன் எனப்படும். இங்கு மூன்று மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும். இது பின் கூறத்தகும் செய்திகட்குமுன் இடத்தகுவது.

உ-ம் : அவன் கீழ்வருமாறு சொன்னான் :
அதன் விளக்கம் பின்வருமாறு:

3. ! இது வியப்புக்குறி. இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும். இது, இரக்கம் ,அச்சம், வியப்பு ஏமாற்றம் முதலியவற்றைக் குறிக்கும் சொற்களை அடுத்து இடத்தகுவது.

உ-ம் : (1) ஐயோ ! பாவம் — இரக்கம்.
(2) ஆ ! புலி வருகிறது — அச்சம்
(3) அப்படியா ! — வியப்பு
(4) அடடா ! ஏமாந்தேன் — ஏமாற்றம்

கேள்விகள்

குறிப்பு :—சென்ற வகுப்புப் பாடத்தைப் பற்றிய கேள்வி களும் இதில் கேட்கப்பட்டுள்ளன.

1. வாக்கியம் என்பது யாது ? உதாரணத்தால் விளக்குக.

2. தனி வாக்கியத்தின் இலக்கணம் என்ன ?

3. தொடர் வாக்கியத்தின் இலக்கணம் என்ன?

4. கலப்பு வாக்கியத்தின் இலக்கணம் என்ன ?

5. பிழைபட்ட சொற்கள் எவை ? நான்கு கூறுக. அவற்றுக்கு நேரான சொற்கள் எவை ?

6. பீச், ஃலைட் ஹவுஸ், பென்ஸில், லேட், டைம்.— இவற்றுக்கு நேரான தமிழ்ச் சொற்கள் எவை?

7. விவாஹம், முஹூர்த்தம், கர்ண பூஷணம், சர்வம், ஸ்ரீமான்.— இவற்றுக்கு நேரான தமிழ்ச் சொற்கள் எவை.

8. சிதைந்த சொற்கள் எவை? நான்கு கூறுக. அவற்றுக்கு நேரான சொற்கள் கூறுக.

பயிற்சி

1. கண்ணன் வந்தான் ; 'அண்ணா' என்றான்.—இதனை ஒரே தனிவாக்கியம் ஆக்குக.

2. கண்ணன் வந்தபொழுது மாமனார் 'இராமா !' என்றார்.— இது என்ன வாக்கியம் ? இதனை இரண்டு தனி வாக்கியங்கள் ஆக்குக

3. கண்ணன் வந்தான் ; கடைக்குப் போனான் ; புத்தகம் வாங்கினான்.—இத்தொடர் வாக்கியத்தைத் தனிவாக்கியம் ஆக்குக.

4. ரொம்ப, சுவற்றில், இதர. வெகு அழகு, எற்கனவே வயித்து வலி.—இவற்றைத் திருத்தி எழுதுக.

5. வர்ரியா, போரியா, சாப்ட்டியா, ஒக்கார், ஓரல், ஓலக்கை, பாச்சு, சேச்சு, சீனு.—இவற்றைத் திருத்திக் கூறுக.

6. சார், பெஞ்சு, இங்கு (Ink), விவாஹம், சுபம், பூஷணம், பந்துக்கள், மித்திரர்.—இச்சொற்கட்கு நேரான தமிழ்ச் சொற்களைக் கூறுக.

சொற்றொடர் பற்றிய கேள்விகள்

Forms I & II)

1. நிறுத்தக் குறிகள் என்பன யாவை? நிறுத்தல் அளவு யாது?

2. , ; : . ? ! - இக்குறிகள் எங்கெங்கு நிறுத்தப்பட வேண்டுபவை?

3. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்—யாவை?

4. வாக்கியத்திற்கு வேண்டும் இன்றியமையாத உறுப்புகள் எவை?

5. செய்வினை, செயப்பாட்டு வினை யாவை?

6. நான் பாட்டுப் பாடினேன், அவர் பாடம் எழுதுகிறார், பூனை எலியைப் பிடிக்கும், சீதை இராவணனை ஏசினாள், எருதுகள் சிங்கத்தை விரட்டுகின்றன.—செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகள் ஆக்குக.

7. குழல் கண்ணனால் ஊதப்பட்டது, கைலை இராவணனால் அசைக்கப்பட்டது. இராவணன் இராமனால் கொல்லப்பட்டான், தச்சனால் நாற்காலி செய்யப்படுகிறது, அரசரால் குடிகள் காக்கப்படுவர்.—இவற்றில் உள்ள செயப்பாட்டு வினைகளைச் செய்வினைகள் ஆக்குக.

8. செயப்படுபொருள் குன்றிய வினை, செ. குன்றா வினை - யாவை?

9. நான் வீடு சென்றேன், மங்களம் பாட்டுப் பாடினாள், கண்ணகி கோவலனை மணந்தாள் நக்கீரன் தூங்கு

கிறான், சேக்கிழான் இனி வருவான், இராஜ ராஜன் சிவன் கோவிலைக் கட்டினான்.—இவற்றில் உள்ள செயப்படுபொருள் குன்றிய-குன்றா வினைகளைக் குறிக்க.

10. கண்ணன் கருத்தாய்ப் பாடம் படிக்கிறான்.—சொல் இலக்கணம் கூறுக.

11. வாக்கியம் என்பது யாது? மூவகை வாக்கியங்கட்கும் உதாரணம் தருக.

12. நாம் பேசும்போது உண்டாகும் பிழைகள் யாவை? அவற்றை எப்படி நீக்கவேண்டும்?

13. நான் வந்தேன், நான் செல்வேன், நீ வந்தாய், அவன் படிப்பான்.—இவற்றை எதிர்மறை வாக்கியங்கள் ஆக்குக.

14. மேல் (13-ல்) சொன்னவற்றையே வினா வாக்கியங்கள் ஆக்குக.

15. கண்ணன் கவனித்திலன், நான் நடவேன், நீ படியாய், அவள் வாராள்.—இவற்றை உடன்பாட்டு வாக்கியங்கள் ஆக்குக.

16. மேல் (15-ல்) சொன்னவற்றையே எதிர்மறை வாக்கியங்கள் ஆக்குக.

IV. புணர்ச்சி

Combination

1. சொற்கள் ஒன்ரோடு ஒன்று சேர்வது புணர்ச்சி எனப்படும். அவ்வாறு சொற்கள் சேரும்பொழுது முன் நிற்கும் சொல் நிலைமொழி எனப்படும். அதனோடு வந்து சேரும் சொல் வருமொழி எனப்படும்.

நிலைமொழி		வருமொழி		புணர்ச்சி
மரம்	+	வளரும்	=	மரம் வளரும்

2. நிலைமொழியும் வருமொழியும் சேரும்பொழுது (1) சில இயல்பாகப் புணரும்; (2) இடையில் சில எழுத்துகள் தோன்றும்; (3) சில கெடும்; (4) சில எழுத்துகள் திரியும் (மாறும்.) இயல்பாகப் புணர்வது இயல்பு புணர்ச்சி எனப்படும். பின்னவை மூன்றும் விகாரப் புணர்ச்சி எனப்படும்.

1. மரம் +வளரும் =மரம் வளரும்
—இயல்பு புணர்ச்சி

2. (1) அந்த +காகம் =அந்தக் காகம்
—தோன்றல் விகாரம்

(2) பல் +பொடி =பற்பொடி
—திரிதல் விகாரம்

(3) மரம் +வேர் =மரவேர்
—கெடுதல் விகாரம்

இம் மூன்றும் விகாரப் புணர்ச்சி.

உயிர் முன் உயிர்

நிலைமொழியின் கடைசியில் உள்ள உயிர் எழுத்தும் வருமொழி முதலில் உள்ள உயிர் எழுத்தும் சேர்வது 'உயிர் முன் உயிர்' எனப்படும்.

மணி + அழகு
↓ ↓
ண் + இ அ
உயிர் (முன்) உயிர்

உயிர் எழுத்துகள் பன்னிரண்டில் (1) இ, ஈ, ஐ ஒரு வகை; (2) ஏ ஒருவகை; (3) மற்ற எட்டும் ஒருவகை.

(1) நிலைமொழியின் கடைசியில் இ, ஈ, ஐ இருந்து, வருமொழி முதலில் எந்த உயிர் எழுத்து இருந்தாலும், அவ்விரண்டையும் சேர்க்க இடையில் 'ய்' தோன்றும்.

i. மணி + அழகு = மணி + (ய்) + அழகு
= மணியழகு

ii. தீ + அவி = தீ + (ய்) + அவி
= தீயவி

iii. பனை + ஓலை = பனை + (ய்) + ஓலை
= பனையோலை

(2) நிலைமொழியின் கடைசியில் ஏ இருந்து, வருமொழி முதலில் உயிர் வரின், இடையில் சில இடங்களில் 'வ்' தோன்றும்; சில இடங்களில் 'ய்' தோன்றும்.

i. தே + ஆரம் = தே + (வ்) + ஆரம்
= தேவாரம்

ii. சே + அடி = சே + (வ்) + அடி
= சேவடி
= சே + (ய்) + அடி
= சேயடி

(3) ஒழிந்த எட்டு உயிர்களின் முன் உயிர் வரின், இடையில் 'வ்' தோன்றும்.

பல + ஆடுகள் = பல + (வ்) ஆடுகள்
= பலவாடுகள்

இங்ஙனமே பிறவும் கண்டு கொள்க.

கேள்விகள்

1. புணர்ச்சி என்பது யாது?

2. நிலைமொழி-வருமொழிகள் எவை?

3. புணர்ச்சி எத்தனை வகைப்படும்? என்னென்ன?

4. விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை என்னென்ன?

பயிற்சி

1. **சேர்த்துப் படிக்க:**—அவனை + பார், அவனுக்கு + கொடு, சீதைக்கு + தா, அவரை + சந்தி, அந்த + காடு, எங்கு + போகிறாய், அவரைப்பற்றி + பேசு, பலவித + புத்தகங்கள்.

2. **பிரித்துக் காட்டுக:**—மட்டப்பலகை, கற்சட்டி, மரவேர், கற்கண்டு, மேட்டுத் தெரு, எண்ணிப்பார், கற்பலகை.

3. மேல் வார்த்தைகளில் உள்ள **தோன்றல்-திரிதல்-கெடுதல்** விகாரங்களைச் சுட்டுக.

4. வடி + தட்டு, தீ + அவி, மணி + அழகு, கோல் + நீளம், தே + ஆரம்.—இவற்றில் உள்ள **நிலைமொழி வருமொழிகளைக்** கூறுக.

5. தேவாரம், மணியடி, கோவில்—பிரித்துப் **புணர்ச்சி இலக்கணம்** கூறுக.

புணர்ச்சி பற்றிய கேள்விகள்

(Forms I & II)

1. புணர்ச்சி என்பது யாது?

2. நிலைமொழி, வருமொழிகள் யாவை?

3. இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி-யாவை?

4. விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை என்னென்ன?

5. பற்பொடி, அந்தக் காக்கை, மரவேர், கற்சட்டி, புளியம்பழம், மரக்கட்டை.—இவை எவ்வகை விகாரங்களைச் சேர்ந்தவை?

6. மணி+அடி, தீ+அவி, பனை+ஓலை, தே+ஆரம், சே+அடி, கோ+இல்.—இவற்றைப் புணர்த்தி விதி கூறுக.

7. க, ச, த, ப மிகும் இடங்கள் எவை? நான்கு உதாரணங்கள் கூறுக.

8. எந்த+பலகை, அவனை+காண்க, அவனுக்கு+தா, அவனைப்பற்றி+பேசு, பலவித+காட்சிகள், எல்லா+பொருள்கள், நல்லவனாக+போனான்.—சேர்த்துப் படி; எழுது.

V. செய்யுள் இலக்கணம்

1. குறள் வெண்பா

'முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.'

இது குறள் வெண்பா எனப்படும். முதல் அடியில் நான்கு சீர்கள் இருக்கின்றன. இரண்டாம் அடியில் மூன்று சீர்கள் இருக்கின்றன. இங்ஙனமே எல்லாத் திருக்குறள் பாடல்களும் இருக்கும். இப்படி வரும் பாக்களை இங்குக் காட்டியபடியே சீர்பிரித்து வரிவரியாக எழுதவேண்டும்.

2. நாலடி வெண்பா

1. "என்று முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பார் தீதற்றோர்;—
துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து."

இது நாலடி வெண்பா. இதில் இரண்டாம் அடியின் நான்காம் சீராகிய 'துன்றுசுவை' என்பது தனிச்சொல் எனப்படும். அதற்கு முன் ஒரு கோடு இருப்பதைக் கவனியுங்கள். இங்ஙனம் கோடு இருந்து அதன்பின் சொல் வருவதாயின், அச்சொல் 'தனிச்சொல்' எனப்படும். எனவே, இவ் வெண்பா, 'தனிச்சொல் பெற்ற நாலடி வெண்பா' எனப் படும்.

2. "தன்னச்சிச் சென்றுரை எள்ளா ஒருவனும்
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்
என்றும் அழுக்கா றிகந்தானும் இம்மூவர்
நின்ற புகழுடை யார்."

இதன் இரண்டாம் அடியில் தனிச்சொல் இல்லை. ஆதலால், இது தனிச்சோல் பெறாத வெண்பா எனப்படும்.

செய்யுள் இலக்கணம் பற்றிய கேள்விகள்

(Forms I & II)

1. செய்யுள் அல்லது பா என்பது யாது?

2. பதவுரை, பொழிப்புரை, கருத்துரை—இவற்றை விளக்குக.

3. அந்வயம் என்பது யாது?

4. குறள் வெண்பா - யாது? நாலடி வெண்பா - யாது? உதாரணம் தருக.

5. தனிச்சொல் பெற்ற வெண்பா, பெறாத வெண்பா- யாவை? உதாரணம் தருக.

பயிற்சி

1. "கைம்மா றுகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாஞ்செய்வர் ;—அம்மா!
முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியினதா மென்று."

(1) இதனைப் பதம் பதமாகப் பிரித்தெழுதுக.

(2) அந்வயம் கூறுக.

(3) பதவுரை கூறுக.

(4) பொழிப்புரை கூறுக.

(5) கருத்துரை கூறுக.

(6) இப்பாவில் உள்ள வாக்கியங்களை எடுத்து எழுதுக.

(7) இதில் உள்ள எ. ப. செ. கூறுக.

(8) இதில் உள்ள தொழிற்பெயர், வினையால் அணையும் பெயர், வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் கூறுக.

(9) செய்வர், வருந்தி,—பகுதி, விகுதி, இடைநிலை கூறுக.

(10) இதில் உள்ள ஐம்பாற் பெயர்களைக் கூறுக.

தேர்வுக்கு உரிய கேள்விகள்

(Form II)

1. (a) குற்றியல் உகரத்தை உதாரணத்தால் விளக்குக.

   (b) பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன ?

2. (a) அறுவகைப் பெயர்ச்சொற்கள் எவை ?

   (b) அம்மி, காற்று, சித்திரை, கால், வண்டி, வீடு, மலை, ஆறு, வெண்மை, சுண்டல், வற்றல்.—இவை என்னென்ன பெயர்ச்சொற்கள் ?

3. (a) பொதுப்பெயர், சிறப்புப் பெயர்கள் எவை ?

   (b) மனிதருள் இந்தியரே சிறந்த ஒழுக்கம் உடையவர், பிள்ளைகளுள் இராமனே சிறந்தவன், தமிழ் நூல்களில் திருக்குறளே சிறந்தது, பறவைகளில் மயிலே அழகுடையது.—இவற்றில் உள்ள பொதுப்பெயர்—சிறப்புப் பெயர்களைக் கூறுக.

4. (a) காரணப் பெயர் எது? இடுகுறிப் பெயர் எது?
(b) முள்ளி, காற்றாடி, மண், மரம், கல், நாற்காலி, பறவை, மீன்.—இவை என்னென்ன பெயர்கள்?

5. (a) தன்மை, முன்னிலை, படர்க்கை - இவற்றை உதாரணத்தால் விளக்குக.
(b) நான் உன்னைக் கண்ட பிறகு முருகனைச் சந்தித்தேன், நாங்கள் போகையில் நீங்களும் அவர்களும் நின்றிருந்தீர்கள், நானும் நீயும் படிக்கையில் அரசர் பவனி சென்றார்.—இவற்றில் உள்ள மூவிடப் பெயர்களையும் குறிக்க.

6. (a) ஐம்பால்கள் எவை?
(b) கோசிகன் இராமலக்குவருடன் மிதிலையை அடைந்தான்; இராமன் வில்லை வளைத்தான்; சீதை தோழிமாருடன் அரசர்கள் முன் மணப் பந்தலை அடைந்தாள்; இராமன் சீதையை மணந்தான்; எல்லோரும் தத்தம் ஆசனங்களில் இருந்து திருமணத்தைக் கண்டு களித்தார்கள்.—இதில் உள்ள ஐம்பாற் பெயர்களை எழுதுக.

7. (a) முறைப்பெயர் என்பது யாது?
(b) இராமன் தசரதன் மகன், குந்திதேவி கண்ணனுக்கு அத்தை, பாண்டுவுக்குத் தம்பி விதுரன், கோவலன் மனைவி கண்ணகி, செங்குட்டுவன் தம்பி இளங்கோ, கரிகாலன் அம்மான் இரும்பிடர்த் தலையார்.—இவற்றில் உள்ள முறைப் பெயர்கள் எவை?

8. (a) அளவைப் பெயர்—யாது?
(b) அவனுக்குக் கால் ரூபாய் கொடு, சர்க்கரை ஒரு மணங்கு வாங்கு, நெல் ஒரு கலம் குத்து, ஒரு

மைல் தூரம் நட.—இதில் உள்ள பலவகை அள வைப் பெயர்களை எழுதுக.

9. (a) திணை என்பது யாது? அதன் வகை எவை?

(b) இராமன், திருமால், வரதன், மேஜை, கழுதை, மேரி, பசுக்கள், அரசர்கள், எலிகள், மாடு, வண்டி.—உயர் திணைப் பெயர்கள் யாவை?

10. (a) தொழிற்பெயர் என்பது யாது?

(b) தொழிற்பெயர் விகுதிகள் எவை?

(c) படுத்தல், ஓடல், ஆட்டம், விலை, செயற்கை தேர்வு, பார்வை, இறக்குமதி, கல்வி—இவற்றில் உள்ள விகுதிகள் எவை?

11. (a) வினைமுற்று எப்படி வினையால் அணையும் பெயர் ஆகிறது?

(b) அஃது எப்படி ஆறு வேற்றுமைகளையும் ஏற்று வருகிறது?

(c) தொழிற்பெயர் - வினையால் அணையும் பெயர்க ளுக்கு உள்ள வேறுபாடு என்ன? நீ அறிந்த அளவு கூறுக.

(d) நான் போதல் வந்தவனுக்குப் பிடிக்கவில்லை, இருந்தவனைக் கேட்டால், 'போனவனைக் கேள்' என்கிறான், பாடினவற்குப் பரிசு கொடா விடில் கேட்பவர் நகைப்பர், இருந்தவளில் வந்தவள் நல்லவள், வந்தவனது பெட்டியைப் போனவன் எடுத்துக்கொண்டு மறைந்தான், வந்தவரே! சென்னை எப்படி இருக்கிறது? ——— இவற்றில் உள்ள

(1) வினையால் அணையும் பெயர்களைக் கூறுக.

(2) வினைமுற்றுகளைக் கூறுக.

(3) வினைமுற்றுகளில் உள்ள பகுதி, விகுதி, இடைநிலைகளைக் கூறுக.

(4) வினையெச்சங்களைக் கூறுக.

(5) வினையால் அணையும் பெயர்கள் ஏற்றுள்ள வேற்றுமைகளைக் குறிக்க.

(6) வினையால் அணையும் பெயர்கள் எவ்வெப் பால்களை ஏற்றுள்ளன ?

12. (a) ஆகுபெயர் என்பது யாது ?

(b) தாமரை போன்ற முகம், மயில் வந்தாள், குயில் பேசினாள், காளை வந்தான், வண்டியில் வெள்ளையைப் பூட்டு, பொங்கல் சாப்பிடு, வற்றல் உண்டான், துவையல் உண்க.—இவற்றில் உள்ள ஆகுபெயர்கள் எவை ? எப்படி ?

13. (a) வேற்றுமை என்பது யாது ? விளக்குக.

(b) வேற்றுமை எத்தனை வகைப்படும் ? என்னென்ன ?

(c) 3, 5, 6, 7-ஆம் வேற்றுமை உருபுகள் எவை ?

(d) ஐந்தாம் வேற்றுமை 'இல்'-லுக்கும் ஏழாம் வேற்றுமை 'இல்'-லுக்கும் உள்ள வேறுபாடு யாது ? விளக்குக.

14. (a) வேற்றுமைத் தொகை-வேற்றுமை விரி: யாது?

(b) செருப்புப் போடு, வீடு செல், இது எவர் புத்தகம், பட்டுச் சேலை, பட்டுத் துணி, பொன் காப்பு, கந்தன் மகன், பெட்டிப் பணம்.—விரியாக்குக.

(c) மலையில் குகை, வாலில் உள்ள மயிர், நாட்டிலிருந்து நீங்கு, கந்தனது கழுதை, தலையால்

வணங்கு, வீட்டில் நுழை.—வேற்றுமைத் தொகை ஆக்குக.

15. (a) வினைச்சொல் என்பது யாது?
(b) முற்று, எச்சங்கள் என்பன யாவை?
(c) வந்தான், போகிறாள், நடந்தார், பாடிற்று, ஓடின.—இவற்றை வினையெச்சமாகவும் பெயரெச்சமாகவும் மாற்றுக.
(d) வந்த, எழுந்த, நின்ற, படித்த, அழுத.—இவற்றை வினையெச்சமாகவும் வினைமுற்றாகவும் மாற்றுக.

16. (a) பகுதி - யாது? விகுதி யாது? இடைநிலை யாது?
(b) விகுதியை எப்படிக் கண்டுபிடிப்பது?
(c) முக்கால இடைநிலைகள் யாவை?
(d) செய்தான், போயிற்று, வருகின்றாள், பார்ப்பார், போவாள், நடக்கிறார், உண்டான், போயினாள்.
(1) பகுதி, விகுதி, இடைநிலைகளைக் கூறுக.
(2) இடைநிலைகளின் காலங்களைக் குறிக்க.
(3) விகுதிகள் காட்டும் பால்களைக் கூறுக.
(e) 'இன்' இடைநிலை பெறும் மாறுதல்களை உதாரணத்தால் காட்டுக.

17. (a) தன்வினை - பிறவினைகள் எவை?
(b) வா, போ, நில், காண், படி, நட.—இவற்றைப் பிறவினை ஆக்குக.
(c) எழுப்பு, நிறுத்து, உண்பி, அலைவி, ஆட்டு.—தன்வினை ஆக்குக.

18. (a) ஏவலுக்கும் வியங்கோளுக்கும் உள்ள வேறுபாடு யாது?

(b) வியங்கோள் எப்பொருள்களில் வரும்?

(c) நீ ஒழிக, நீ வாழ்க, நீ தருக, நீ இதைச் செய்க, தாங்கள் வாழவேண்டும், வரவேண்டும், நீ ஒழியவேண்டும்.—இவை எவ்வெப் பொருள்களில் வந்துள்ளன?

19. (a) ஐம்பால் வினைமுற்று விகுதிகள் எவை?

(b) போயினன், வந்தனள், போயிற்று, உண்டு, வந்தது, வருவார், செய்தான், நிற்பார்கள், அவை வருகின்றன, அவை போகா.—விகுதிகளைக் குறிக்க.

(c) ஒருவர் வந்தார், தந்தையார் வந்தார், தசரதர் போனார்.—இதில் உள்ள விகுதி எது? அதன் பெயர் யாது?

20. (a) மூவிடங்கள் எவை?

(b) மூவிடத்து வினைமுற்றுகள் எவை? உதாரணம் தருக.

(c) மூவிடத்து வினைமுற்று விகுதிகள் எவை? உதாரணங்களில் பொருத்திக் காட்டுக.

(d) செய்தேன், செய்தோம், செய்தாய், செய்தீர், பாடினீர்கள், பாடினை, பாடினேன், பாடுவாய், பாடுவை, ஆடுகிறோம்.—மூவிடத்து விகுதிகளைத் தனித்தனியே பிரித்துக் காட்டுக.

21. (a) வாக்கியம் என்பது யாது?

(b) மூவகை வாக்கியங்கள் எவை?

(c) மூவகை வாக்கியங்கட்கும் உதாரணம் தருக.

(d) முருகன் வந்தான்; பாடம் படித்தான்.—ஒரே வாக்கியம் ஆக்குக.

(e) முருகன் போய் மிட்டாய் வாங்கி வீடு சேர்ந்தான்.—மூன்று தனி வாக்கியங்கள் ஆக்குக.

(f) முருகன், 'ஐயா, பாக்கு வீசை என்ன விலை?' என்று கடைக்காரனைக் கேட்டான்.—இஃது என்ன வாக்கியம்?

22. (a) ஏற்கனவே, அவள் பேரில், ரொம்ப, சுவற்றில்.—இவற்றைத் திருத்தி எழுதுக.

(b) சினு, பாச்சு, சேச்சு, நேத்து, வர்ரியா, போரேன்.—இவற்றைத் திருத்தி எழுதுக.

(c) பீச், விவாஹம், உற்சவம், பூஷணம், ஸ்ரீமான், சர்வம்.—இவற்றுக்கு உரிய தமிழ்ச் சொற்களைக் கூறுக.

23. (a) புணர்ச்சி என்பது யாது? அதன் வகை என்ன?

(b) விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? உதாரணம் தருக.

(c) அப்பையன், புளியம்பழம், பொற்காப்பு, மரப்பட்டை, மரவேர்.—இதில் உள்ள மூவகை விகாரங்களையும் சுட்டுக.

(d) தென்னையோலை, மணியடி, தேவாரம், சேவடி, அவனேயழகன், கோவில்.—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறுக.

24. (a) ஒரு பாட்டை எப்படி எழுதவேண்டும்?

(b) ஒரு பாட்டில் கவனிக்கவேண்டியவை எவை?

(c) சீர் என்பது யாது? அடி என்பது யாது?

(d) குறள் வெண்பா, நாலடி வெண்பா - உதாரணம் தந்து விளக்குக.

25. "நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்."

(1) இதனைச் சீர்பிரித்துச் செவ்வனே எழுதுக. (2) இச் செய்யுளை உரைநடைப் படுத்துக. (3) பதம் - பதமாகப் பிரித்துக் காட்டுக. (4) பதவுரை - பொழிப்புரை - கருத்துரை கூறுக. (5) இதில் உள்ள உபமான - உபமேயங்களை விளக்குக. (6) இதன் கருத்தைத் தெளிவாக எழுதிக் காட்டுக. (7) இப்பாட்டில் வேற்றுமை உருபுகளைச் சுட்டுக. (8) இதில் உள்ள எ. ப. சே. கூறுக. (9) இதில் உள்ள வினையெச்ச - பெயரெச்சங்களைக் கூறுக. (10) இதில் இருக்கும் பெயர்ச்சொற்களை வகைப்படுத்திக் கூறுக.

தேர்வு வினாக்கள்
(Forms I & II)

1. தமிழ் என்பது யாது? தமிழ் எழுத்துகள் எவை?

2. உயிர், மெய்—இவற்றின் தன்மை என்ன? இவற்றை எழுத்துகட்குப் பெயராக இட்டதேன்?

3. தமிழ் எழுத்துகள் மொத்தம் எத்தனை? எப்படி?

4. உயிர் எழுத்துகளும் மெய் எழுத்துகளும் ஓசையால் எத்தனை வகையாகப் பிரிக்கப்படும்? அவை யாவை?

5. இன எழுத்துகள் யாவை? எவை எவற்றுக்கு இனம்?

6. அவர், அம்மனிதர், இவன், இப் பெட்டிகள் எவன், எவ்வீடு, அவரா வந்தார், ஏணி ஏது, இஞ்சி இவருடையது, அப்பம் அவனுடையது.—இவற்றில் உள்ள, சுட்டு, வினா எழுத்துகளைக் குறிக்க.

7. உகரத்தின் இயல்பான அளவு யாது ? கு. உகரம், மு. உகரம்—இவற்றின் மாத்திரை என்ன ?

8. கனு, புழு, புனுகு, கட்டு, படு, தடுக்கு—இவற்றுள் கு. உகரம் எவை ? மு. உகரம் எவை ?

9. இராமன் வந்தான், முருகனைக் கண்டேன், அவனுக்குக் கொடு, வரதன் வந்து, வந்த பையன்.—இவற்றுள் உள்ள பெயர்ச் சொற்கள் எவை? வினைச் சொற்கள் எவை?

10. அரசன் குதிரை மீதேறிப் படைகளும் அமைச்சரும் இராணியும் உடன் வர நகர்வலம் வந்தான்.—இதில் உள்ள ஐம்பாற் பெயர்கட்கும் திணை, பால், எண், இடம், வேற்றுமை கூறுக.

11. கந்தன், வள்ளி, மரம், முனிவர், பசுக்கள்.—இப் பெயர்களை எட்டு வேற்றுமைகளிலும் வருமாறு எழுதுக.

12. கண்ணன் காலையில் பள்ளிக்குப் போதல் கண்டு வெண் பொங்கல் உண்ட வேணுநாதனும் பள்ளிக்குப் போனான்.—இதில் உள்ள அறுவகைப் பெயர்ச் சொற்களையும் கூறுக.

13. அரசர்—அலெக்ஸாண்டர்,—மனை—அரண்மனை, இவற்றில் உள்ள பொது—சிறப்புப் பெயர்கள் எவை ? இடுகுறி—காரணப் பெயர்கள் எவை ?

14. நான் உன்னுடன் வருகையில் இராமன், சீதை, அமைச்சர், குதிரை, யானை இவர்தம் படங்களைக் கண்டேன்.

இதில் உள்ள மூவிடப் பெயர்களைக் குறிக்க.

15. தொழிற்பெயர், வினையால் அணையும் பெயர்.—இவற்றை உதாரணத்தால் விளக்குக.

16. வந்தவன்—இதனை எட்டு வேற்றுமைகளிலும் அமைத்துக் கூறுக.

17. போ, போய், போன, போதல், போனான், போனவன்—ஒவ்வொன்றுக்கும் இலக்கணம் கூறுக.

18. ஆகு பெயர் என்பது யாது? உதாரணத்தால் விளக்குக.

19. தொகை, விரி என்பன யாவை? உதாரணம் தருக?

20. வினைச்சொல் என்பது யாது? அதன் வகை என்ன?

21. எது பெயர் எச்சம்? எது வினை எச்சம்? ஏன்?

22. தன் வினை—பிற வினை, ஏவல்—வியங்கோள்: விளக்கித் தக்க உதாரணங்கள் தருக.

23. வந்தான், வருகிறான், வருவார், வருகிறது, வந்தன, வந்தோம், வருவீர், வருவாய், வருகிறேன்.—இவற்றில் உள்ள ஐம்பால்—மூவிடத்து வினைமுற்றுகள் எவை?

24. செய்தான், உண்டான், கற்றான், போயின, படிக்கிறார், ஓடுவான், ஆடுகின்றாள், பார்ப்பாள்.—முக்கால இடைநிலைகள் கூறுக; பகுதி, விகுதி, இடைநிலை கூறுக.

25. செயப்படுபொருள் குன்றியவினை.—செய் (குன்றாவினை) செய்வினை—செயப்பாட்டுவினை: இவற்றை உதாரணங்களால் விளக்குக.

26. சொற்றொடர்—யாது? அதன் வகை என்ன?

27. வாக்கியம் எத்தனை வகைப்படும்? வகைக்கொரு உதாரணம் தருக.

28. பெயர்ச் சொற்கும் வினைச்சொற்கும் உள்ள வேறுபாடு என்ன?

29. தக்க நிறுத்தக் குறிகளை இடுக:—

(1) அடடா | அவனா | இவன் |

(2) அண்ணன் | தம்பி | நீ எங்கே போனாய் | என்று கேட்டான் |

(3) கண்ணன் கடைக்குப் போனான் | கால் சட்டை வாங்கினான் |

30. சுந்தரன் வேகமாய் நடந்து சென்று வந்த மாமனைக் கண்டான்.—சொல் இலக்கணம் கூறுக.

31. நாம் பிழைபடப் பேசும்—எழுதும் சொற்கள் எவை? அவற்றை எவ்வாறு திருத்திப் பேசவும் எழுதவும் வேண்டும்?

32. புளியம்பழம், மணியழகு, சேவடி, தீயிட்டான், தென்னையோலை, பலவாடுகள், பகற்பொழுது, மரவேர்.—பிரித்துக் காட்டிப் புணர்ச்சி இலக்கணம் கூறுக.

33. செய்யுள் என்பது யாது? அதனில் கவனிக்கத் தகும் பகுதிகள் எவை?

34. பாட்டை எழுதுவது எப்படி?

35. குறள் வெண்பா—யாது? நாலடி வெண்பா—யாது?

36. "நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்."

இதனை, (1) அந்வயப்படுத்துக. (2) பதம்—பதமாகப் பிரிக்க. (3) தனி வாக்கியங்கள் ஆக்குக. இதற்கு,(4) பதவுரை கூறுக. (5) பொழிப்புரை கூறுக. (6) கருத்துரை கூறுக. இதில் உள்ள, (7) எ. ப. சே. கூறுக. (8) உபமான—உபமேயங்களைக் கூறுக. (9) பெயரெச்ச—வினையெச்சங்களைக் கூறுக. (10) இருதிணை — ஐம்பாற் பெயர்களைக் கூறுக. (11) அறுவகைப் பெயர்களைக் கூறுக. (12) வேற்றுமை உருபுகளை ஏற்ற சொற்களிற் குறிப்பிடுக. (13) என்று, நின்று, செய்த,—இவற்றுக்குப் பகுதி விகுதி, இடை நிலைகளைக் கூறுக. (14) சுட்டு—வினா எழுத்துகளைக் குறிக்க. (15) இன எழுத்துகளைச் சுட்டுக.

III FORM

I. எழுத்து

Letter

1. குற்றியல் உகரம்

The Shortened உ

அரை மாத்திரை ஓசை உடைய உகரம் குற்றியல் உகரம் என்றும், ஒரு மாத்திரை ஓசை உடைய உகரம் முற்றியல் உகரம் என்றும் சென்ற வகுப்பில் வாசித்தீர்கள் அல்லவா ?

தனிக்குற்றெழுத்து அல்லாத பிற எழுத்துகட்குப் பின் மொழி இறுதியில் வரும் வல்லின மெய்களின் (க், ச், ட், த், ப், ற்) மீது ஏறி நிற்கும் உகரம் குற்றியல் உகரம் எனப்படும்.

ட் + உ
பாடு ↓ குற்றியல் உகரம்
க் + உ
பாக்கு ↓ குற்றியல் உகரம்
ற் + உ
வயிறு ↓ குற்றியல் உகரம்

குறிப்பு :—மெல்லின—இடையின எழுத்துகள் மீது வரும் உகரம் குற்றியல் உகரம் ஆகாது. அது முற்றியல் உகரம் (The Full Sound உ) எனப்படும்.

கணு, புழு.

2. குற்றியல் இகரம்

The Shortened இ

குற்றியல் உகரத்தின் முன் வருமொழி முதலில் யகரம் வந்தால், உகரம் இகரம் ஆகும். அது குற்றியல் இகரம் எனப்படும். இது அரை மாத்திரையே ஓசை உடையது.

ட் + உ
நாடு ↓ குற்றியல் உகரம்
நாடு + யாது ? = நா (ட் + உ) + யாது ?
= நா (ட் + இ) + யாது ?
= நாடி யாது ?

3. போலி

ஒரு சொல் தனக்குரிய எழுத்துகளோடு உச்சரிக்கப் பெறலே முறை. அப்படி இன்றிப் பழைய காலமுதலே சில எழுத்துகள் பேச்சு வழக்கில் மாறி உச்சரிக்கப்பட்டு வந்துள்ளன; ஆனால் பொருள் மாறவே இல்லை. இக்காலத்தில் உரல் என்பதைக் கல்வி அறிவு இல்லாதார் ஒரல் என்றும், உலக்கையை ஒலக்கை என்றும் கூறுதலை நாம் கேட்டிருக்கிறோம்.

இப்படியே பழைய காலத்தில் அரசன் என்பது அரைசன் என்றும், சாம்பல் என்பது சாம்பர் என்றும், வைத்தியன் என்பது வயித்தியன் என்றும் பேச்சு வழக்கில் இடம் பெற்று விட்டன; பிறகு செய்யுள்களிலும் ஆட்சி பெற்று விட்டன. ஆதலின், அவை ஒதுக்கப்படக் கூடவில்லை. ஆகவே, இலக்கண முறைக்கு மாறுபட்ட அவ்வெழுத்துகள் போலி (போல நிற்பவை) எனப்பட்டு, இலக்கணத்தில் இடம் பெற்றன.

பெறவே, ஒரு சொல்லில் ஓர் எழுத்து நிற்க வேண்டும் இடத்தில், அதன் பொருள் கெடாத வகையில் வேறு ஓர் எழுத்து நிற்பது போலி எனப்பட்டது.

அப்போலி, சொல்லின் (1) முதலில் நின்றால் முதற் போலி என்றும், (2) இடையில் நின்றால் இடைப்போலி என்றும், (3) கடையில் நின்றால் கடைப்போலி என்றும் மூவகைப்படும்.

வைத்தியன் = வயித்தியன் — முதற் போலி
அரசன் = அரைசன் — இடைப்போலி
சாம்பல் = சாம்பர் — கடைப்போலி

இவ்வாறு வருவனவற்றை உங்கள் பாட புத்தகங்களில் கண்டு கொள்க.

கேள்விகள்

1. குற்றியல் உகரம், முற்றியல் உகரம்—பொருள் என்ன ?

2. குற்றியல் இகரம் என்பது யாது ?

3. போலி என்பது யாது ? உதாரணத்தால் விளக்குக.

4. இலக்கணத்தில் போலி இடம் பெற்றதெப்படி ?

பயிற்சி

1. புழு, நாடு, சுற்று, கணு, பாய்ச்சு, வழு.—இவற்றில் கு. உ. எவை ? மு. உ. எவை ?

2. பலம்—பலன், பசல்—பைசல், அவ்வை—ஔவை. இவற்றில் போலி எழுத்துகள் எவை ? அவற்றின் வகை என்ன ?

3. காடியாது, காடது, சோறிடு, பந்தாடு, குன்றிது.—இவற்றைப் பிரித்துக் காட்டுக.

4. வண்டு + இடம், வம்பு + ஆயிற்று, சீப்பு + இது, சுக்கு + எடு, நாட்டு + யாத்திரை.—சேர்த்துக் காட்டுக.

எழுத்தைப் பற்றிய கேள்விகள்
(Forms I, II & III)

1. ஆடு, அணில், காட்டு, கங்கை, பள்ளம், பாதாளம்.—இவற்றில் உள்ள (1) அரை மாத்திரை ஓசையுடைய எழுத்துகள் எவை ? (2) ஒரு மாத்திரை ஓசையுடைய

எழுத்துகள் எவை? (3) இரண்டு மாத்திரை ஓசை யுடைய எழுத்துகள் எவை?

2. அவனு வந்தான்? இவனோ போனான்? எவன் யாது செய்தான்? இவற்றில் உள்ள சுட்டு—வின எழுத்து களைக் கூறுக.

3. தந்நகரம், றன்னகரம், டண்ணகரம்—இவற்றை உதாரணத்தால் விளக்குக.

4. அ, க, ட, ப, இ, ஐ, ஔ, ச.—இவற்றுக்கு உரிய இன எழுத்துகள் எவை?

5. குற்றியல் உகரம் யாது? உதாரணம் கொடு.

6. குற்றியல் இகரம் — யாது? „ „ .

7. முற்றியல் உகரம் யாது? பந்து, கண்டு, கடு, பட்டு, படு, கணு, அஃது.—இவற்றில் கு. உ. எவை? மு.உ. எவை?

8. போலி என்பது யாது? கொம்பர்—கொம்பு, பயன்—பலன், பசல்—பைசல்: என்னென்ன போலிகள்?

9. 'உயிர் எழுத்து, மெய் எழுத்து' என்று பெய ரிடக் காரணம் என்ன?

II. சொல்

Word

பிறமொழிச் சொற்கள்

1. வடசொல்

(Sanskrit Word)

1. வடக்கே திருப்பதி முதல் தெற்கே கன்னியாகுமரி முனை வரை இருக்கும் நிலப்பரப்பு நமது தமிழ் மொழி வழங்கும் நாடாகும். ஒரு காலத்தில் இப்பகுதி முழுவதும் தனித் தமிழ்மொழியே பேசப்பட்டது. பிறகு வர வர வட இந்தியாவில் இருந்து சம்ஸ்கிருத மொழியைப் பேசிய மக்கள் இந்நாட்டில் குடியேறினர். அவர்கள் சேர்க்கையால் வட மொழிச் சொற்கள் இந்நாட்டில் வழக்குப் பெற்றுவிட்டன. அவை வட மொழிச் சொற்கள் எனப்படும்.

சுபம், விவாஹம், ஹாரம், புஷ்பம், ஸரஸ்வதி, பூஷணம் முதலியன வடமொழிச் சொற்கள்.

இவற்றுக்கு நேரான தமிழ்ச் சொற்களாவன :—

சுபம்—நன்மை, விவாஹம்—திருமணம், ஹாரம்—மாலை, புஷ்பம்—மலர், ஸரஸ்வதி—நாமகள், கலைமகள் ; பூஷணம்—நகை.

2. திசைச் சொல்

(Words from other Languages)

அரேபியர், பாரசீகர், போர்ச்சுகீயர் முதலிய பல நாட்டார் (பல திசைகளிலிருந்து நமது தமிழ் நாட்டில் வாணி

கத்தின் பொருட்டுத் தங்கி இருந்தமையால், அவ்வவர் மொழிச் சொற்கள் சில நமது பேச்சு வழக்கில் ஆட்சி பெற்று விட்டன. அவை திசைச் சொற்கள் எனப்படும்.

1. கிராம்பு, ஜன்னல், சாவி, அலமாரி—போர்ச்சுகீஸியச் சொற்கள்.

2. ஜமீன், சிபார்சு, சிபாய், சுமார், மேஜை—பாரசீகச் சொற்கள்.

3. ஆசாமி, இலாகா, வசூல், ஜப்தி, நகல், முனிசிப்—அரேபியச் சொற்கள்.

4. அபின், அல்வா, உஷார், மசாலா, தபால், பங்களா, மாசூல், சவாரி, துப்பட்டா—இந்துஸ்தானிச் சொற்கள்.

3. ஆண்பாற்—பெண்பாற் சொற்கள்

1. ஆண்பாலைக் குறிக்கும் விகுதிகள்—அன், ஆன், மன், மான்.

பொருளன்	=	பொருள்	+	அன்
காட்டான்	=	காடு	+	ஆன்
வடமன்	=	வடக்கு	+	மன்
கோமான்	=	கோ	+	மான்

2. பெண்பாலைக் குறிக்கும் விகுதிகள்—அள், ஆள், இ.

குழையள்	=	குழை	+	அள்
இல்லாள்	=	இல்	+	ஆள்
பொன்னி	=	பொன்	+	இ

3. ஆண்பாலில் அன் விகுதி பெறும் பெயர்கள் பெண்பாலில் அள் விகுதி பெறும்.

ஆண்பால்	பெண்பால்
அவன்	அவள்
எவன்	எவள்
நல்லவன்	நல்லவள்

4. ஆண்பாலில் அன் விகுதி பெறும் பெயர்கள் பெண்பாலில் இ விகுதி பெறுதலும் உண்டு.

ஆண்பால்	பெண்பால்
அரசன்	அரசி
மாமன்	மாமி
தோழன்	தோழி

5. ஆண்பாலில் அன் விகுதி பெறும் சாதிப்பெயர் பெண்பாலில் தி அல்லது சி அல்லது இ விகுதி பெறும்.

	ஆண்பால்	பெண்பால்
(1)	குறவன்	குறத்தி
	குயவன்	குயத்தி
	உழவன்	உழத்தி
(2)	இடையன்	இடைச்சி
	கணக்கன்	கணக்கச்சி
	ஆயன்	ஆய்ச்சி
(3)	பார்ப்பனன்	பார்ப்பனி

6. ஆண்பாலில் ஆன் விகுதி பெறும் சாதிப்பெயர் பெண்பாலில் தி விகுதி பெறும்.

ஆண்பால்	பெண்பால்
தட்டான்	தட்டாத்தி
வண்ணான்	வண்ணாத்தி
கன்னான்	கன்னாத்தி

7. ஆண்பாலில் காரன் என்று முடியும் பெயர்கள் பெண்பாலில் காரி என்று முடியும்.

ஆண்பால்	பெண்பால்
வேலைக்காரன்	வேலைக்காரி
கடைக்காரன்	கடைக்காரி
கூலிக்காரன்	கூலிக்காரி

8. சில பெயர்கள் இரு பால்களிலும் ஒன்றுகவே வரும்.

அவன்—நோயாளி, குற்றவாளி, கடனாளி.
அவள்—நோயாளி, குற்றவாளி, கடனாளி.

9. சில வட சொற் பெயர்களும் இப்படியே இருபால் களிலும் ஒன்றுகவே வரும்.

அவன்—சாது, பாவி, குணசாலி.
அவள்—சாது, பாவி, குணசாலி.

10. ஆண்பாலில் வான் என்று முடியும் வடமொழிப் பெயர்கள் பெண்பாலில் வதி என்று முடியும்.

ஆண்பால்	பெண்பால்
குணவான்	குணவதி
புண்ணியவான்	புண்ணியவதி
பாக்கியவான்	பாக்கியவதி

குறிப்பு :—இவ்வாறும் பிறவாறும் வரும் இருபாற் பெயர்களைக் கண்டு உணர்க.

4. உறுப்பிலக்கணம்

1. வினைச்சொற்களில் பகுதி, விகுதி, இடைநிலைகளை இன்னவாறு கண்டுபிடிக்க வேண்டும் என்பதைப் பற்றிச் சென்ற வகுப்பில் அறிந்தீர்கள். இங்குச் சில வினைச் சொற்

கள் இடைநிலை பெருமலே காலங் காட்டுதலைக் கவனிப்போம்.

பெற்றாள் — இதில், பெறு — பகுதி; ஆள் — பெண்பால் வினைமுற்று விகுதி. ஆனால் இடைநிலை இல்லை. ஆயின், 'பெற்றாள்' என்பது இறந்தகால வினைமுற்றாகிறது. எனவே, இவ்வுறுப்புகளில் காலம் உணர்த்துவது எது?

(1) பகுதி—தொழிலை உணர்த்துவது
(2) விகுதி—கருத்தாவை உணர்த்துவது.

ஆகவே, காலம் காட்டுவது எது? 'பெறு என்னும் பகுதி 'பெற்று' என்று வந்திருத்தலை நோக்குக. அச்சொல் இறந்த காலத்தை உணர்த்துகிறதன்றோ? ஆகவே, பகுதி ஒற்று இரட்டித்தால் இறந்த காலத்தை உணர்த்தும் என்பது தெரிகிறது. 'பெற்று' என்பதுடன் 'ஆள்' சேர்த்தால், (பெற்று+ஆள்) பெற்றாள் என்று முடிகிறது. எனவே, சில இடங்களில் வினைப்பகுதி ஒற்று இரட்டித்தே இறந்த காலத்தை உணர்த்தும் என்பது அறியத்தக்கது.

(1) நட்டார் = நடு+ஆர் (செடி நாட்டார்)
= ந(ட்)டு+ஆர்—பகுதி ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது.
= நட்டார்

(2) நக்கார் = நகு + ஆர் (சிரித்தார்)
= ந(க்)கு+ஆர்—பகுதி ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது.
= நக்கார்.

குறிப்பு:—வினைச் சொற்களைப் பகுதி முதலிய உறுப்புகளாகப் பிரித்து 'இஃது இன்னது' எனக்கூறல் உறுப்பு இலக்கணம் கூறல் எனப்படும்.

5. மரூஉ மொழிகள்

சென்னப்பட்டினம்—சென்னை எனவும், தஞ்சாவூர்—தஞ்சை எனவும், நாகப்பட்டினம்—நாகை எனவும் மருவி (குறைந்து) வழங்குதலை நாம் காண்கிறோம். இப்படி மருவி வழங்கும் பெயர்கள் மரூஉ மொழிகள் எனப்படும்.

மரூஉ மொழிகள் சில :—

1. மயிலாப்பூர் — மயிலை
2. வண்ணாரப்பேட்டை — வண்ணை
3. புதுச்சேரி — புதுவை
4. போரூர் — போரை
5. குன்றத்தூர் — குன்றை
6. இளையான்குடி — இளைசை

6. வினை மாற்றம்

1. (a) போ — (சொல்லில் வரும்பொழுது) வினைப்பகுதி
போதல் — தொழிற்பெயர்
போனான் — வினைமுற்று
போனவன் — வினையால் அணையும் பெயர்
போ — ஏவல் வினைமுற்று

(b) போன — இறந்தகாலப் பெயர் எச்சம்
போகின்ற — நிகழ்காலப் பெயர் எச்சம்
போகும் (பையன்) — எதிர்காலப் பெயர் எச்சம்

(c) போய் — இறந்தகால வினையெச்சம்
போக (வருகிறான் வருவான்) — நிகழ்கால வினையெச்சம்; இதுவே எதிர்கால வினையெச்சமுமாம்

2. (a) செய் — (சொல்லில் வரும்பொழுது) பகுதி
செய்தல் — தொழிற்பெயர்
செய்தாள் — வினைமுற்று
செய்தவள் — வினையால் அணையும் பெயர்
செய் — (தனியே வரும்பொழுது) ஏவல் வினைமுற்று
செய்க — வியங்கோள் வினைமுற்று

(b) செய்த — இறந்தகாலப் பெயர் எச்சம்
செய்கின்ற — நிகழ்காலப் பெயர் எச்சம்
செய்யும் (பையன்) — எதிர்காலப் பெயர் எச்சம்

(c) செய்து — இறந்தகால வினை எச்சம்
செய்ய (வருகிறாள், வருவாள்) — நிகழ்கால வினையெச்சம்; இதுவே எதிர்கால வினையெச்சமுமாம்

குறிப்பு:—வினையெச்சத்தில் நிகழ் காலத்தைக் குறிப்பதே எதிர்காலத்தையும் குறிக்கும்.

7. உடன்பாடு—எதிர்மறை

Affirmative and Negative Verbs

எல்லா வினைகளையும் உடன்பாடு, எதிர்மறை என இரண்டாகப் பிரிக்கலாம்.

1. உடன்பாடு (**Affirmative**) — தொழிலின் நிகழ்ச்சியைக் குறிப்பது.

செய்தான், செய்கின்றான், செய்வான்.

2. எதிர்மறை (Negative)—தொழில் நிகழாமையைக் குறிப்பது.

செய்திலன் (இல்), செய்கின்றிலன் (இல்), செய்யான் (ஆ).

எதிர்மறை தொழில் மறுத்தலையும் குறிக்கும்.

செய்யாதே, சேராதே, வாராதே.

3. (i) செய்தான் = செய் + த் + ஆன்—உடன்பாடு

↓ ↓ ↓

பகுதி இ. கா. இடைநிலை விகுதி

செய்திலன் = செய் + த் + இல் + அன்—எதிர்மறை

↓

எதிர்மறை இடைநிலை

(ii) செய்கின்ருன் = செய் + கின்று + ஆன்-உடன்பாடு

↓ ↓ ↓

பகுதி நி. கா. இடைநிலை விகுதி

செய்கின்றிலன் = செய் + கின்று + இல் + அன்—எதிர்மறை

↓

எதிர்மறை இடைநிலை

(iii) செய்வான் = செய் + வ் + ஆன்—உடன்பாடு

↓ ↓ ↓

பகுதி எ. கா. இடைநிலை விகுதி

செய்யான் = செய் + ஆ + ஆன்—எதிர்மறை

↓

எதிர்மறை இடைநிலை

இந்த 'ஆ' என்னும் எதிர்மறை இடைநிலை உயர்திணையில் கெட்டுவிடும்; கெட்டுவிடவே, செய் + ஆன் = செய்யான் என வரும்.

ஆனல், இவ்வெதிர் மறை இடைநிலை அஃறிணையில் கெடாது; அப்படியே இருக்கும். செய் + ஆ + து = செய்யாது.

கேள்விகள்

1. வடமொழி என்பது யாது? அஃது ஏன் அப்பெயர் பெற்றது?

2. நன்மை, மாலை, நாமகள், நகை—இவற்றை உணர்த்தும் வடசொற்கள் எவை?

3. திசைச்சொற்கள் எவை? அவை ஏன் அப்பெயர் பெற்றன?

4. தமிழில் வழங்கும் போர்ச்சுகிஸீயச் சொற்கள் எவை?

5. பாரசீகச் சொற்கள் எவை?

6. அரேபியச் சொற்கள் எவை?

7. இந்துஸ்தானிச் சொற்கள் எவை?

8. ஆண்பாற் பெயர் விகுதிகள் எவை?

9. பெண்பாற் பெயர் விகுதிகள் எவை?

10. பலர்பாற் பெயர் விகுதிகள் எவை?

11. ஒன்றன்பால்—பலவின்பாற் பெயர் விகுதிகள் எவை?

12. ஆண்பாலில் அன் விகுதிபெறும் பெயர்ச்சொற்கள் பெண்பாலில் எவ்வெவ்வாறு வரும்?

13. ஆண்பாலில் அன் விகுதிபெறும் சாதிப்பெயர்கள் பெண்பாலில் எவ்வெவ்வாறு வரும்?

14. ஆண்பாலில் ஆன் விகுதிபெறும் சாதிப்பெயர் பெண்பாலில் எப்படி வரும்?

15. ஆண்பாலில் காரன் என்று முடியும் பெயர்கள் பெண்பாலில் எப்படி வரும்?

16. எப் பெயர்கள் இருபால்களிலும் ஒன்றுகவே இருக்கும்?

17. இருபால்களிலும் ஒன்ருகவே வழங்கும் வடசொற்கள் எவை ?

18. ஆண்பாலில் வான் என்று முடியும் வடமொழிப் பெயர்கள் பெண்பாலில் என்ன ஆகும் ?

19. ஒரு வினைச்சொல்லில் காலம் காட்டும் உறுப்பு எது ? வேறு எதுவும் காலம் காட்டும் ? உதாரணம் தருக.

20. உடன்பாடு—எதிர்மறை என்ருல் என்ன ?

21. எதிர்மறை இடைநிலைகள் எவை ?

பயிற்சி

1. இந்நாட்டில் வழங்கும் வடசொற்கள் ஆறு கூறுக ; அவற்றுக்கு நேரான தமிழ்ச் சொற்களையும் கூறுக.

2. இங்கு வழங்கும் பலவகைத் திசைச் சொற்களில் வகைக்கு நான்கு கூறுக.

3. அரசி, அவள், மாமி, ஆய்ச்சி, குறத்தி, கன்னுத்தி, வேலைக்காரி, குணவதி—ஆண்பாற் பெயர்களைக் கூறுக.

4. குயவன், ஒட்டன், பார்ப்பனன், தோழன், வண்ணுன், வேலைக்காரன், புண்ணியவான், ஸ்ரீமான்.—பெண்பாற் பெயர்களைக் கூறுக.

5. செய்தான், உண்கிருன், தூங்குவார், ஓடியது, ஓடுகின்றது.—பகுதி, விகுதி, இடைநிலை கூறுக.

6. செய்தான், உண்கிருன், தூங்குவார்.—எதிர்மறை கூறுக ; கூறி, எதிர்மறை இடைநிலையைச் சுட்டுக.

7. பெற்ருள், உற்ருர், நட்டான்.—பிரித்து **உறுப்பிலக்கணம்** கூறுக.

8. படி, வா, எழு.—இப்பகுதிகளைக் கொண்டு தொழிற் பெயர் முதலிய வினை மாற்றங்களைக் கூறுக.

சொல்லைப் பற்றிய கேள்விகள்

(Forms I, II & III)

1. 'சொல்' என்பது யாது? அஃது எத்தனை வகைப்படும்?

2. வடசொல், திசைச்சொல் என்பன யாவை?

3. பெயர்ச் சொல்லுக்கும் வினைமுற்றுக்கும் உள்ள வேறுபாடு என்ன? உதாரணத்தால் விளக்குக.

4. பெயர்ச் சொல்லில் அறிய வேண்டுவன யாவை? கண்ணன், கண்ணகி, வீரர்கள், பசு, கிளிகள் - இவற்றுக்குத் திணை முதலியன கூறுக.

5. வினைச்சொல்லில் அறியவேண்டுவன யாவை? வந்தான், போகிறாள், நிற்பார், வந்தன, (அவை) வரும்.—இவற்றுக்குத் திணை, பால் முதலியன கூறுக.

6. கழுதை, வால், கார்த்திகை, வெண்மை, சுண்டல், மாளிகை, மாமி, அரை, வீசை, மைல், படி, வரதன், பார்வதி, எலி, அரசர், பசுக்கள், நாங்கள், நீ.—இவை என்னென்ன பெயர்கள்?

7. போதல், போனவன், போனான், போய், போகின்ற, போ, போக.—இவற்றுக்கு இலக்கணம் கூறுக.

8. வினையால் அணையும் பெயரை உதாரணத்தால் விளக்குக.

9. ஆகுபெயர் என்பது யாது? உதாரணம் கூறி விளக்குக.

10. வேற்றுமை, வேற்றுமை உருபு, வேற்றுமைத் தொகை, வேற்றுமை விரி.—இவற்றை உதாரணத்தால் விளக்குக.

11. முக்கால இடைநிலைகள் எவை?

12. பகுதி, விகுதி, இடைநிலை.—இவை உணர்த்துவன யாவை? உதாரணத்தால் விளக்குக.

13. ஏவல் - வியங்கோள், உடன்பாடு - எதிர்மறை.—இவற்றை உதாரணங்காட்டி விளக்குக.

14. ஐம்பாற் பெயர் விகுதிகள் எவை?

15. ஐம்பால் வினைமுற்று விகுதிகள் எவை?

16. தன்மை - முன்னிலை வினைமுற்று விகுதிகள் யாவை?

17. வந்தேன், வந்தனை, வந்தார், வருகின்றது, வருகின்றன, வந்தான், வருகிறாள், வருவீர்கள், வாரா.—விகுதிகள் எவை? 'இன்ன வினைமுற்று விகுதிகள்' என்பதைக் கூறுக.

18. தன் வினை - பிறவினை, செய்வினை - செயப்பாட்டு வினை, செயப்படுபொருள் குன்றிய வினை - செயப்படு பொருள் குன்றா வினை: விளக்கி, உதாரணம் தருக.

19. முற்று - எச்சங்களை எப்படிக் கண்டறிவது?

20. மூன்றுகால வினை முற்றுகள், வினை யெச்சங்கள், பெயரெச்சங்கள்.—இவற்றுக்கு உதாரணங்கள் தருக.

21. ஐந்தாம் வேற்றுமை 'இல்', ஏழாம் வேற்றுமை 'இல்,'—இவற்றை உதாரணத்துடன் விளக்குக.

22. எட்டாம் வேற்றுமையில் பெயர்கள் எவ்வெவ்வாறு மாறி வரும்? உதாரணங்கள் தருக.

23. உச்சரிப்பால் குறைபட்ட சொற்கள், மாறிவிட்ட தவறான சொற்கள் - இவற்றுக்கு மும்மூன்று உதாரணங்கள் தருக.

24. வந்த கந்தன் கவனித்துப் படித்தான்.—சொல் இலக்கணம் கூறுக.

25. உண்கிறான், வந்திலன், செய்யாது, படிப்பார், கற்றான், பெற்றாள்.—உறுப்பிலக்கணம் கூறுக.

III. சொற்றொடர்

1. நிறுத்தக் குறிகள்
(Punctuation)

சென்ற இரண்டு வகுப்புகளிலும் காமா, முற்றுப்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி, கோலன், செமிக்கோலன் என்பன வற்றைப்பற்றி அறிந்தீர்கள். இந்த வகுப்பில் மற்றக் குறி களைப் பற்றி அறிக.

1. " " — இவை தன்கூற்றுக் (Direct Speech) குறிகள்.

2. கோவலன் — மணந்தான். கோடிட்ட இடத்தில் கண்ணகியை என்னும் சொல் எழுதவேண்டும். இங்ஙனம் ஒரு சொல் எழுத வேண்டுமாயின், ஒரு கோடு இடப்படும்; இரண்டு சொற்கள் எழுத வேண்டுமாயின், இரண்டு கோடுகள் இடப்படும்.

3. (   ) இது அடைப்புக்குறி எனப்படும்.

(1) அடைப்புக் குறிகட்குள் உள்ளவற்றில் பொருத்தமான சொல்லைக் கோடிட்ட இடத்தில் பொருத்துக:—

மாடு—மேய்ந்தது. (புல், கல்) என்று வரும் பயிற்சியில் அடைப்புக் குறியின் பயன் இன்னது என்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

(2) இதனாற் சிறந்த பயன் (உபயோகம்) உண்டாகும்.— இங்குப் 'பயன்' என்னும் சொல்லுக்கு 'உபயோகம்' என்பது பொருள். பயன் என்னும் சொல் விளங்காதென்னும் குறிப்பால், அதன் பொருளை அடைப்புக் குறிக்குள் இடப்

படுதலும் உண்டு. இங்ஙனம் சில இடங்களில் அடைப்புக் குறி பயன் படுத்தப்படும்.

2. தன்கூற்று—பிறகூற்று

(Direct And Indirect Speeches)

1. இராமன் என்னை நோக்கி ,"முருகன் வந்தானா?" என்று கேட்டான்.—இதில் "முருகன் வந்தானா?" என்பது தன் (கேட்டவன்) கூற்று. இக்குறிகளை நீக்கி, இராமன், முருகன் வந்தானா என்று என்னை நோக்கிக் கேட்டான் என்று மாற்றி அமைத்தல் பிற (கேட்கப்பட்டவன்) கூற்று.

2. இராமன், "நான் வரலாமா?" என்று என்னைக் கேட்டான்.

இராமன் தான் வரலாமா என்று என்னைக் கேட்டான்.

குறிப்பு :—தன்மைப் பெயரைப் படர்க்கைப் பெயராக்கித் தன் கூற்றுக் குறிகளையும் நீக்கி எழுதல் பிற கூற்றாகும்.

3. முருகன், "நீயும் வருவாயா?" என்று என்னைக் கேட்டான். முருகன் நானும் வருவேனா என்று என்னைக் கேட்டான்.

குறிப்பு:—இங்கு முன்னிலைப் பெயர் தன்மைப் பெயரானதற்கு ஏற்ப வினைமுற்றும் மாறியது காண்க; குறிகள் ஒழிந்ததும் காண்க.

4. தகப்பனார், "மகனே, நாளை நான் ஊருக்குப் போவேன்" என்றார்.

தகப்பனார் மகனைப்பார்த்துத் தாம் நாளை ஊருக்குப் போவதாகச் சொன்னார்.

இங்ஙனமே, பல தன் கூற்று வாக்கியங்களைப் பிறகூற்று வாக்கியங்களாக மாற்றிப் பழகுக.

3. சில தொடர்கள்

சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்வது (சொல்) தொடர் எனப்படும். இரண்டு சொற்கள் சேரும் பொழுது முன் நிற்கும் சொல் நோக்கி, 'இஃது இன்ன சொற்றொடர்' என்று கூறப்படும். உதாரணமாக, 'வந்தான் இராமன்' என்னும் தொடரில் உள்ள முதற்சொல் வந்தான் என்பது. இது வினைமுற்று. ஆதலால் இத்தொடர் வினைமுற்றுத் தொடர் ஆகும். இதனைத் திருப்பி, 'இராமன் வந்தான்' என்று அமைத்தால் எழுவாய்த் தொடர் (இராமன்—எழுவாய் ஆதலால்) ஆகும்.

இங்ஙனம் வரும் தொடர்கள் சிலவற்றைக் காண்க.

1. கண்ணன் படித்தான்—எழுவாய்த்தொடர்
↓
(எழுவாய்)

2. படித்தான் கண்ணன்—வினைமுற்றுத்தொடர்
↓
(வினைமுற்று)

3. படித்த கண்ணன்—பெயரெச்சத்தொடர்
↓
(பெயரெச்சம்)

4. படித்து வந்தான்—வினையெச்சத்தொடர்
↓
(வினையெச்சம்)

5. வருக, வருக—அடுக்குத்தொடர்
↓
(சொல் அடுக்கு)

6. கண்ணா, வா—விளித்தொடர்
↓
(விளி-அழைப்பு)

தொடர் இலக்கணம் கூறுதல்

வந்த கண்ணன் கடுகி நடந்தான்.

(1) வந்த கண்ணன்—பெயர் எச்சத் தொடர்
(2) கண்ணன் கடுகி—எழுவாய்த் தொடர்
(3) கடுகி நடந்தான்—வினையெச்சத் தொடர்

குறிப்பு:-சொற்கள் 1 & 2, 2 & 3.—என்னும் இம் முறைப்படியே தொடர் இலக்கணம் கூறிச் செல்ல வேண்டும்.

4. இரட்டைக் கிளவி—அடுக்குத் தொடர்

1. கலகல, சலசல, வழவழ—இவ்வாறு இரட்டைப் பட்டே வரும் கிளவி (சொல்) இரட்டைக் கிளவி எனப் படும்.

கல கல—இதில் 'கல-கல' என இரட்டைச் சொற்கள் இருக்கின்றன. இவற்றுள் எந்த ஒன்றையும் பிரிக்க முடியாது ; பிரித்தாலும் மற்றது பொருள் தராது.

அவன் கலகல என்று பேசினான்.—இங்ஙனம் கூறாமல், 'அவன் கல என்று பேசினான்' என்று கூறின், பொருள் விளங்கவில்லை அன்றோ ?

2. ஆனால், பிரித்தாலும் பொருள் தருவதாய், இரண்டாகவும் இரண்டுக்கு மேற்பட்டும் அடுக்கி வருதல் அடுக்குத்தொடர் எனப்படும்.

பாம்பு பாம்பு—இரண்டு சொற்கள் அடுக்கிவந்த தொடர்.

வருக வருக வருக—மூன்று சொற்கள் அடுக்கிவந்த தொடர்.

இவற்றுள் எந்த ஒன்றைப் பிரித்தாலும் மற்றது பொருள் தரும்.

கேள்விகள்

1. " " இக்குறிகட்கு வழங்கும் பெயர் யாது? இவற்றின் பயன் என்ன?

2. — இதன் பயன் யாது?

3. 'அடைப்புக்குறி' யாது? அதன் பயன் என்ன?

4. தன்கூற்று, பிறகூற்று - யாவை? உதாரணம் தருக.

5. தொடர் என்பது யாது? 'இஃது இன்ன தொடர்' என்பதை எப்படிக் கண்டறிவது?

6. இரட்டைக் கிளவிக்கும் அடுக்குத் தொடருக்கும் உள்ள வேறுபாடுகள் எவை? உதாரணத்தால் விளக்குக.

பயிற்சி

1. மகன், 'அப்பா, எனக்கொரு துப்பட்டி வேண்டும்' என்றான்.—இதனைப் **பிறகூற்றாக** மாற்றுக.

2. தகப்பனார், தான் செவ்வையாகப் படித்தாற்றான் சிறப்புப் பெறலாமென்று மகனிடம் கூறினார்.— இதனைத் **தன்கூற்றாக** மாற்றுக.

3. கந்தன் வந்தான், போனான் பொன்னப்பன், நடந்த நடராசன், வந்து பார், வந்து வந்து, வரதா வா.—இவை என்னென்ன தொடர்கள்?

4. கீழே தரப்பட்டவற்றுள் தக்க இரட்டைக் கிளவிகளைக் கோடிட்ட இடங்களில் அமைக்க :—

சலசல	கலகல	தகதக
மளமள	நறநற	கரகர

(1) முருகன் பற்களை——என்று கடித்தான்.

(2) வீமன் தண்டாயுதத்தைக்——என்று சுழற்றினான்.

(3) மரக்கிளை——என்று முறிகிறது.

(4) நெருப்புத்——என்று எரிகிறது.

(5) வள்ளி——என்று சிரிக்கிருள்.

(6) புதரில்——என்னும் ஓசை கேட்கிறது.

சொற்றொடர் பற்றிய கேள்விகள்

(Forms I, II & III)

1. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்—என்பன யாவை ?

2. சொற்றொடர் - யாது ? அதன் வகைகள் எவை ? உதாரணம் தருக.

3. தனி, தொடர், கலப்பு - வாக்கியங்கள் எவை ? உதாரணம் தருக.

4. வா, நீ அவனைக் கண்டாயா ?, நான் புத்தகம் படித்தேன்—எ. ப. சே. கூறுக.

5. கோவலன் கண்ணகியை அழைத்துக்கொண்டு அழகிய மதுரையை அடைந்தான்.—சொல் இலக்கணம் கூறுக.

6. அண்ணன் | | தம்பி | நீ எங்கே சென்றிருந்தாய் | | என்று கேட்டான் | —நேர்க்கோடு இட்ட இடங்களில் தக்க நிறுத்தக் குறிகளை இடுக.

7. புலவர், "அரசே, உங்கள் அன்புக்கு வந்தனம்" என்ருர்.—இதனைப் பிற கூற்ருக மாற்றுக.

8. —, ( ), " "—இக்குறிகளின் பயனை உதாரணத்துடன் விளக்குக.

9. ; : ! — இவற்றின் பயனை உதாரணத்துடன் விளக்குக.

10. அண்ணு, வா – தேள் தேள் – படித்தான் பரந் தாமன் – ஆடின அண்ணுமலே – தேடிப் பார் – கந்தன் கதறினுன்: இவை என்ன தொடர்கள் ?

11. பிழைகளேத் திருத்துக:—

(1) நான் நேத்து வந்தேன்.

(2) நான் ஏற்கனவே சொன்னேன் அல்லவா ?

(3) பாச்சு ! இங்கு வா.

(4) சுவற்றில் படம் தொங்குகிறது.

(5) நான் பீச்சுக்குப் போகிறேன்.

(6) என்ன சார், டைம் என்ன ?

IV. புணர்ச்சி

Combination

மெய்ம்முன் உயிர்

1. வேல் + ஆயுதம் = வேலாயுதம். இதில், நிலைமொழி — வேல் என்பது; வருமொழி - ஆயுதம் என்பது. இவ்விரண்டும் சேரும்பொழுது நிலைமொழியீற்றுல், வருமொழி முதலில் உள்ள உயிராகிய ஆ என்னும் இரண்டும் சேர்ந்து லா என்னும் உயிர்மெய் ஆகின்றது.

2. ஆனுல், கண் + ஆடி = கண்ணுடி என வரும். அஃதாவது, கண் +(ண்)+ ஆடி = கண்ணுடி என்ருகிறது. மேல் உதாரணத்திற் கண்டபடி, நிலைமொழி ஈற்று ண், வருமொழி முதலில் உள்ள உயிராகிய ஆ என்பதுடன் ஏன் சேரவில்லை? நடுவில் 'ண்' வரக்காரணம் என்ன? இரண்டு உதாரணங்களையும் நன்கு கவனித்தால் இம்மாறுதலுக்குக் காரணம் விளங்கும்.

முதல் உதாரணம் : வேல் + ஆயுதம்
இரண்டாம் ,, : கண் + ஆடி

இரண்டிலும் வருமொழி முதலில் உயிரே இருக்கிறது. நிலைமொழி ஈற்றில் மெய்யே இருக்கிறது. இருந்தும் மாறுதல் வந்ததேன்? முதல் உதாரணத்தில் உ.ள்ள நிலைமொழியின் முதல் எழுத்து நெடில் (வே). இரண்டாவதில் முதல் எழுத்துத் தனிக்குறில் ஆகிய (க) என்பது. (1) பக்கத்தில் நெடில் இருப்பதால் அதனை அடுத்த 'ல்'—'ஆ' - வுடன் சேர்ந்து லா ஆகிறது. (2) பக்கத்தில் தனிக்குறில் இருப்பதால் அதனை அடுத்த ண் - ஆவுடன் சேர்ந்து ண்ணு ஆகிறது. இதுவே மாறுதலுக்குக் காரணமாகும். ஆகவே,

(1) புணர்ச்சியில், நெடிலை அடுத்த மெய், வருமொழி முதலில் உள்ள உயிருடன் சேர்ந்துவிடும்.

(2) தனிக்குறிலை அடுத்த மெய், வருமொழி முதலில் உள்ள உயிருடன் சேரும்பொழுது இரட்டித்துச் சேரும். இதற்கு உரிய நன்னூல் சூத்திரம் :—

"தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்."

குறிப்பு:—இச்சூத்திரத்தைக் கூறினும் போதும்.

குற்றியல்—முற்றியல் உகரப் புணர்ச்சி

(1) குற்றியல் உகரத்தின் முன் வருமொழி முதலில் உயிர் வரின், குற்றியல் உகரம் தான் ஏறியுள்ள மெய்யை விட்டு ஓடும்.

காசில்லை = காசு + இல்லை
= கா (ச் + உ) + இல்லை
= காச் + இல்லை—'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்.'
= காசில்லை (உக்குறள் — குற்றியல் உகரம்).

(2) குற்றியல் உகரத்தின் முன் வருமொழி முதலில் ய வரின், கு. உகரம் இகரமாகத் திரியும்.

நாடியாது = நாடு + யாது ?
= நா (ட் + உ) + யாது ?
= நா (ட் + இ) + யாது ? 'ய வ்வரின் இய்யாம்.'
= நாடியாது ?

(3) முற்றியல் உகரத்தின் முன் உயிர்வரின், சில இடங்களில் முதற்பிரிவில் சொன்ன விதி பெறும்.

செலவானது = செலவு + ஆனது
= செல (வ் + உ) + ஆனது
= செல + வ் + ஆனது—'முற்றும் அற்று ஒரோ வழி' என்பது விதி.
= செலவானது

(4) முற்றியல் உகரத்தின் முன் ய வரின், மு. உகரம் மு. இகரமாகத் திரியும்.

செலவியாது = செலவு + யாது ?
= செல (வ் + உ) + யாது ?
= செல + வ் + யாது ?—'முற்றும் அற்று ஒரோ வழி' என்பது விதி.
= செலவியாது

இப்புணர்ச்சிக்கு உரிய சூத்திரம் :—

"உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் ;
யவ்வரின் இய்யாம் ; முற்றும் அற்று ஒரோ வழி."

'மை' யீற்றுப் பண்புப்பெயர்ப் புணர்ச்சி

நன்மை, செம்மை, வெண்மை முதலிய 'மை' ஈற்றுப் பண்புப் பெயர்கள் வருமொழியோடு புணர்கையில், (1) நிலைமொழியீற்றில் உள்ள மை கெடும் ; (2) அத்துடன் இடையில் உள்ள உ—இ ஆகாமலும் ; (3) நிலைமொழியில் உள்ள முதல் (ஆதி) எழுத்து நீளும் ; (4) அந்த ஆதியில் உள்ள அ—ஐயாக மாறும். இப்படிப் பல மாறுதல்களை அடையும்.

(1) நன்கொடை = நன் + கொடை
= நன்மை + கொடை — ஈறுபோதல்
= நன்கொடை

(2) பெரியன் = பெருமை + அன்
= பெரு + அன் — ஈறுபோதல்

= பெ (ர் + உ) + அன்
= பெ (ர் + இ) + அன் — இடை 'உ'கரம் 'இ' ஆதல்.
= பெரியன்

(3) மூதூர் = முதுமை + ஊர்
= முது + ஊர் — ஈறுபோதல்
= மு (த் + உ + ஊர்) — முற்றும் அற்று ஒரோ வழி.
= மு + த் + ஊர்
= மூ + த் + ஊர் — ஆதிநீடல்
= மூதூர்

இவ்வாறு வரும் பிற மாறுதல்களையும் ஆங்காங்குக் கண்டு கொள்க; இதன் பிற விதிகளை மேல் வகுப்புகளில் படித்துணர்க.

வடமொழிப் புணர்ச்சி

வடசொற்கள் ஒன்றோடு ஒன்று சேர்தல் 'வடமொழிப் புணர்ச்சி' எனப்படும்.

வடமொழிப் பெயர்களில் உயிர் முன் உயிர் புணர்கையில், மூவகைச் சந்திகள் தோன்றும். அவை தீர்க்க சந்தி, குண சந்தி, விருத்தி சந்தி என்பன.

1. தீர்க்க சந்தி (தீர்க்கம்—நெடில்) :

(i) அ, ஆ முன் அ, ஆ வரின்,
(ii) இ, ஈ, முன் இ, ஈ வரின்,
(iii) உ, ஊ முன் உ, ஊ வரின்,
} நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் கெட, இடையில் அவற்றின் நெடில் ஒன்று தோன்றும்.

(i) பத+அம்புயம் =ப+(த்+அ)+அம்புயம்
=ப+(த்+)+அம்புயம்
=ப+த் +(ஆ)+ம்புயம்
=பதாம்புயம்

(ii) சதா+ஆனந்தம் =ச+(த்+ஆ)+ஆனந்தம்
=ச+(த்+)+ஆனந்தம்
=ச+த் +(ஆ)+னந்தம்
சதானந்தம்

(i) சுசி +இந்திரம் =சுசீந்திரம்
மகீ +ஈசன் =மகீசன்

(ii) குரு+உபதேசம்=குரூபதேசம்

குணசந்தி :

(i) அ, ஆ, முன் இ, ஈ வரின்—அவ்விரண்டும் கெட ஓர் ஏ தோன்றும்.

(ii) அ, ஆ முன் உ, ஊ வரின்—அவ்விரண்டும் கெட ஓர் ஓ தோன்றும்.

(i) நர+இந்திரன் =ந(ர்+அ)+இந்திரன்
=ந+ர்+ஏ+ந்திரன்
=நரேந்திரன்

(ii) வந்தன்+உபசாரம்=வந்த(ன்+அ)+உபசாரம்
=வந்த+ன்+ஓ+பசாரம்
=வந்தனோபசாரம்

குறிப்பு:—விருத்தி சந்தியைப் பற்றி மேல் வகுப்புகளிற் படித்துணர்க.

கேள்விகள்

1. வேல்+ஆயுதம்=வேலாயுதம் எனவும், கண்+ஆடி=கண்ணடி எனவும் புணரக் காரணம் என்ன?

2. தனிக்குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டும்—இஃது எதற்கு விதி? உதாரணம் தந்து விளக்குக.

3. குற்றியல் உகரம் என்ருல் என்ன? அதன் முன் உயிர் வந்தால் அவ்வுகரம் என்னுகும்? அதன் முன் ய வந்தால் என்னுகும்? இவ்விருவகையிலும் முற்றியல் உகரம் என்னுகும்?

4. நன்மை+கொடை—இவை எப்படிப் புணரும்?

5. பெருமை+அன் —இவை எப்படிப் புணரும்?

6. முதுமை+ஊர் —இவை எங்ஙனம் புணரும்?

7. 'வடமொழிப் புணர்ச்சி' என்பது யாது? அதன் வகை என்ன?

8. பத+அம்புயம், கிரி+ஈசன், நர+இந்திரன்—இவை எப்படிப் புணரும்?

பயிற்சி

1. பால்+அபிஷேகம், மெய்+உரை—சேர்த்துப் **புணர்ச்சி விதி** கூறுக.

2. சுக்கு+இல்லை, நாட்டு+யாத்திரை, செலவு+ஆயிற்று செலவு+யாது?—சேர்த்துப் **புணர்ச்சி இலக்கணம்** கூறுக.

3. நன்மனம், சிறியன், ஆருயிர்.—பிரித்துப் **புணர்ச்சி இலக்கணம்** கூறுக.

4. சுசீந்திரம், வரோதயன், மகேந்திரன், பதாம்புயம்,—பிரித்துப் **புணர்ச்சி இலக்கணம்** கூறுக.

புணர்ச்சி பற்றிய கேள்விகள்

(Forms I, II & III)

1. புணர்ச்சியாவது யாது? நிலைமொழி - வருமொழி யாவை?

2. இயல்பு—விகாரப் புணர்ச்சிகள் யாவை? உதாரணம் தருக.

3. மணியடி, தீயவி, தேவாரம், சேயடி, கோவில்.—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறுக.

4. கண்ணழகு, மெய்யுரை, தமிழரசு, வரமளி, கோலழகு.—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறுக.

5. மார்பகலம், நாடியது?, முள்ளியாது?, கதவாயிற்று.—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறுக.

6. கஜேந்திரன், கிரீசன், பதாம்புயம்—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறுக.

7. வேல் + அழகு, கண் + அழகு: இவை எப்படிப் புணரும்? ஏன்? விளக்கிக் கூறுக.

8. பற்பொடி, கரடிக்குட்டி, மரவேர்—இவை என்ன விகாரங்களைச் சேர்ந்தவை?

9. நன்னடை, கரியன், மூதூர், ஆருயிர்.—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறுக.

10. சேர்த்துக் கூறுக:—பலவித + புத்தகங்கள், அவனை + பார், அந்த + காகம், அவரைப்பற்றி + பேசு, அவளுக்கு + கொடு, நல்லவனாக + போனான், எல்லா + புத்தகங்கள், வெம்மை + நீர், தண்மை + நீர், கருமை + குதிரை, செம்மை + தாமரை, வெண்மை + தாமரை.

V. செய்யுள் இலக்கணம்

1. மோனை—எதுகை.

1. மோனை—செய்யுளில் ஓர் அடியின் முதல் எழுத்தோடு மற்றைய அடிகளின் முதல் எழுத்து ஒன்றுபட்டு வருதலும், ஓர் அடியில் உள்ள முதற்சீரின் முதல் எழுத்தோடு மற்றச் சீர்களின் முதல் எழுத்துகள் ஒன்றுபட்டு வருதலும் மோனை எனப்படும்.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

இதில் முதல் அடியின் முதற்சீரில் முதல் எழுத்து—க. இது குறில்.

இரண்டாம் அடியின் முதற்சீரில் முதல் எழுத்து—நி. இதுவும் குறில்.

இங்ஙனம் வருதல் மோனை எனப்படும்.

குறிப்பு:—ஒரு பாவில் முதற்சீரின் முதல் எழுத்துக் குறிலாயின், ஏனைய அடிகளின் முதற்சீரின் முதல் எழுத்துகளும் குறிலாகவே இருத்தல் வேண்டும்; இங்ஙனமே நெடிலும் என்பதை அறிக.

முதல் அடியில் நான்கு சீர்கள் உள்ளன. ஒவ்வொரு சீரின் முதல் எழுத்தும் க என்றே இருப்பதைக் காண்க. இங்ஙனம் ஒரே வரியில் உள்ள நான்கு சீர்களிலோ, இரண்டு சீர்களிலோ, மூன்று சீர்களிலோ ஒரே எழுத்து வருவதும் மோனை ஆகும். ஓர் அடியில் உள்ள நான்கு சீர்களிலும் ஒரே எழுத்து வருதல் முற்றுமோனை எனப்படும்.

2. எதுகை—செய்யுளில் ஓர் அடியில் உள்ள இரண்டாம் எழுத்து ஏனைய அடிகளிலும் ஒன்றுபட்டு வருதல் எதுகை எனப்படும்.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

இவ்விரண்டு குறிப்புகளையும் கொண்டு உங்கள் செய்யுட் பாடத்தில் உள்ள செய்யுட்களில் எதுகை - மோனைகளைக் கண்டறிக.

குறிப்பு:—நாலடி வெண்பாக்கள் சிலவற்றுள் (1) நான்கு அடிகளிலும் ஒரே எதுகை வரும்; (2) முதல் இரண்டு அடிகளில் ஓர் எதுகையும் பின் இரண்டு அடிகளில் வேறு ஓர் எதுகையும் வரும்.

2. உவமை—உருவகம்

1. உவமை— சிங்கம் போன்ற அரசன் இதில்,

சிங்கம்	போன்ற	அரசன்	
↓	↓	↓	
உபமானம் உவமை	உவமைவுருபு	உபமேயம்	ஆகும்.

இங்ஙனம் உவமை முன்னும், உபமேயம் பின்னும், இரண்டிற்கும் இடையில் உவமை உருபும் வருதல் உவமை அணி எனப்படும். (அணி - அலங்காரம்.)

போல, போன்ற என்னும் உவமை உருபுகள் இடையில் வரப்பெறாமலே உவமையும் உபமேயமும் சேர்ந்துவருதலும் உண்டு. அதுவும் உவமை அணியே ஆம்.

உ—ம்: மலர்ப் பாதம் - மலர் (போன்ற) பாதம்: இதில், 'போன்ற' என்பது மறைந்து வருதல் காண்க.

2. உருவகம்—அரசன் ஆகிய சிங்கம் இதில்,

அரசன்	ஆகிய	சிங்கம்	
↓		↓	
உபமேயம்		உபமானம்	ஆகும்.

இங்ஙனம் உபமேயம் முன்னும் உபமானம் பின்னும் இரண்டிற்கும் இடையில் 'ஆகிய' என்பதும் வருதல்

உருவக அணி எனப்படும். சில இடங்களில் 'ஆகிய' என்பது இல்லாமலே உபமேயம் முன்னும் உபமானம் பின்னும் சேர்ந்து வரும். அதுவும் உருவக அணியே ஆம்.

உ-ம். பாதமலர் - பாதம் (ஆகிய) மலர். இதில் 'ஆகிய' என்பது மறைந்து வருதல் காண்க.

3. தற்குறிப்பு ஏற்ற அணி

"தன் மகனை கன்னன் கொல்லப்படுவதைக் காணப் பொருத கதிரவன் மாலை ஆறுமணிக்குமேல் கடலில் மறைந்தான்."—இவ்வாக்கியத்தில், சூரியன் மாலை ஆறுமணிக்கு மறைதல் இயல்பு. இங்ஙனம் இயல்பாக நடைபெறும் செயலில் புலவன் தன் குறிப்பை (தான் சொல்லக் கருதியதை) ஏற்றிக் கூறுதலே தற்குறிப்பு ஏற்ற அணி (தன்+குறிப்பு+ஏற்றம்) எனப்படும்.

"நீங்கள் மாலையில் விளையாடலாகாதென்று காற்றும் மழையும் கலந்து அடிக்கிறது."—தற்குறிப்பேற்ற அணி.

குறிப்பு:—அணி வகைகள் 'அணி இலக்கணம்' என்னும் தனிநூலில் விரிவாகக் கூறப்பட்டுள. இங்குக் கூறியவை உங்கள் பாடப்பகுதிகட்கு வேண்டும் அளவினவே ஆகும். இவை பெரும்பாலும் செய்யுள்களிலேயே வரும். ஆதலால் 'செய்யுள் இலக்கணம்' என்னும் தலைப்பின்கீழ்த் தரப்பட்டுள. இவை மேல் வகுப்புகளில் 'அணி இலக்கணம்' என்னும் தனித்தலைப்பின் கீழ் விளக்கப்படும்.

கேள்விகள்

1. மோனை என்பது யாது? உதாரணத்தால் விளக்குக.

2. எதுகை என்பது யாது? உதாரணத்தால் விளக்குக.

3. உவமை அணி - யாது? உதாரணம் தந்து விளக்குக.

4. உருவக அணி - யாது? உதாரணம் தந்து விளக்குக.

5. தற்குறிப்பேற்ற அணி - யாது? உதாரணம் கொண்டு விளக்குக.

பயிற்சி

1. "என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பார் தீதற்றோர்—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து."

இதில் உள்ள **மோனை, எதுகை**களைக் குறிக்க.

2. மேற் பாட்டில் உள்ள உவமையைக் கூறுக.

3. "சேனை ஆகிய கடலை வீமனாகிய மத்துக் கலக்கியது."—இதில் உள்ள உருவங்களைக் கூறுக.

4. பாதமலர், மலர்ப்பாதம்—மலர்க்கை, கைம்மலர்—மலர்க் கண், கண்மலர்—இவை என்னென்ன அணிகள்?

5. "உலகிற் பிறந்தவர் இங்ஙனமே இறப்பர் என்பதை உணர்த்துவான்போலக் காலையில் தோன்றிய கதிரவன் மாலையில் மறைந்தான்."—இஃது என்ன அணி? விளக்குக.

செய்யுள் பற்றிய கேள்விகள்
(Forms I, II & III)

1. அந்வயம், பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, உபமானம், உபமேயம்.—இவற்றை விளக்குக.

2. "அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவ
லொன்(று)
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை."

(1) இதனை உரைநடை (அந்வய)ப் படுத்துக.

(2) இதனை நான்கு சிறு வாக்கியங்கள் ஆக்குக.

(3) இதனைப் பதம் பதமாகப் பிரிக்க.

(4) இதற்குப் பதவுரை கூறுக.

(5) இதற்குப் பொழிப்புரை கூறுக.

(6) இதன் கருத்துரை யாது?

3. உவமை அணி யாது? உதாரணத்தால் விளக்குக.

4. செய்யுளை எப்படி எழுதுவது? உதாரணம் தருக.

5. குறள் வெண்பா, நாலடி வெண்பா.—உதாரணம் தருக.

6. இரண்டாம் கேள்வியில் உள்ள செய்யுள் என்ன வெண்பா?

7. இரண்டாம் கேள்வியில் உள்ள பாவில் இருக்கும் எதுகை—மோனைகளைச் சுட்டுக.

8. உவமைக்கும் உருவகத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன? உதாரணம் தந்து விளக்குக.

9. தற்குறிப்பேற்றம்—பொருள் யாது? உதாரணம் தந்து விளக்குக.

10. முன்னிலை என்பது யாது? அதன் வகை என்ன? உதாரணம் தருக.

தேர்வுக்கு உரிய கேள்விகள்

(Form III)

1. குற்றியல் உகரம்—இதன் பொருள் யாது? உதாரணத்தால் விளக்குக.

2. முற்றியல் உகரம் - யாது? உதாரணம் தருக.

3. குற்றியல் இகரம் - எது? உதாரணம் தருக.

4. கடுகு, வயிறு, புட்டு, கடு, புழு, கணு, நாடியாது, கதவு, கதவியாது.—இவற்றில் உள்ள கு.உ., மு.உ., கு.இ. எவை?

5. போலி என்பது யாது? விளக்கி உதாரணம் தருக.

6. பந்தல் - பந்தர், அரசன் - அரைசன், வயித்தியன் - வைத்தியன்: போலி எழுத்துகள் எவை? இவை எவ்வகைப் போலிகள்?

7. வடசொல், திசைச்சொல் - பொருளை விளக்குக.

8. எம்மொழிச் சொற்கள் இப்பொழுது திசைச் சொற்களாக இருக்கின்றன? வகைக்கு நான்கு கூறுக.

9. கமலம், கிராம்பு, சிபாய், முனிசீப், மாசூல், பூஷணம், ஜப்தி, சவாரி, சுமார், சாவி.—என்ன சொற்கள்?

10. ஆண்பால் பெயர் விகுதிகள் எவை?

11. வடமன், காட்டான், போனன், செய்வன், பொருளன், இல்லாள், வருவாள்,—பெயர் விகுதிகள் எவை? வினைமுற்று விகுதிகள் எவை?

12. பார்ப்பான், தோழன், எவன், ஆயன், கன்னன், குணவான்.—பெண்பாற் பெயர்களைக் கூறுக.

13. இருபால்களிலும் ஒன்றாகவே வரும் பெயர்கள் (தமிழ் - வடமொழி) எவை?

14. உண்டான், காணுகிருள், வருவான், பெற்ருள்.—உறுப்பிலக்கணம் கூறுக.

15. பகுதி, விகுதி, இடைநிலை - இவை எவற்றை, எப்படி உணர்த்தும்?

16. போ, செய், படி.—இப் பகுதிகளைக் கொண்டு தொழிற் பெயர், வினைமுற்று, வினையால் அணையும் பெயர், வினையெச்சம், பெயர் எச்சம், ஏவல், வியங்கோள்களாக மாற்றுக.

17. மூன்று காலப் பெயரெச்சங்கட்கும் உதாரணம் தருக.

18. உடன்பாட்டு வினை, எதிர்மறைவினை - விளக்குக.

19. செய், செய்யாதே, செய்க, செய்யற்க - இவை என்ன வினைகள்?

20. செய்யாதே, செய்யற்க, செய்யான், செய்கின்றிலன், செய்திலன்.—இவற்றில் உள்ள எதிர்மறை இடைநிலை குறிக்க.

21. கந்தனில் பெரியன் கண்ணன், வீட்டில் திருடர் நுழைந்தனர் - 'இல்' உருபுகட்குள்ள வேறுபாடு யாது?

22. கண்ணன் வந்த மாமனுடன் கடுகி நடந்தான்.—சொல் இலக்கணம் கூறுக.

23. " ", ———, ( ) இவற்றின் பயனை உதாரணங்கள் மூலம் விளக்குக.

24. இராமன், "நான் வரலாமா?" என்று என்னைக் கேட்டான்.—

கந்தன், "முருகன் வந்தாளு?" என்று கேட்டான்.—

முருகன், "நீயும் வருவாயா?" என்று என்னைக் கேட்டான்.—

தகப்பனார், "மகனே, நான் நாளை ஊருக்குப் போவேன்" என்றார்.—இவற்றைப் பிறகூற்றுகளாக மாற்றுக.

25. 'தொடர்' என்பது யாது? தொடர் இலக்கணம் கூறுவது எப்படி?

26. சென்ற மாமன் தங்கி வந்தான், வந்த மாமன், "கந்தா, வா" என்றான்.—தொடர் இலக்கணம் கூறுக.

27. இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் - இரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன? உதாரணம் தருக.

28. வேல் + ஆயுதம், கண் + ஆடி : இவை இரண்டும் எவ்வாறு புணரும்? விளக்குக.

29. வாலறிவன், நன்கொடை, சிறியன், காசில்லை, செலவியாது, நாடியாது, செலவானது, சகோதரன், சதானந்தன், சுசீந்திரம், நரேந்திரன்.—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறுக.

30. மோனை, எதுகை - என்பன யாவை? உதாரணம் தருக.

31. (1) உவமை, உருவகம் - விளக்கி உதாரணம் தருக.

(2) இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன?

32. தற்குறிப்பேற்றம் - விளக்கி உதாரணம் தருக.

தேர்வுக்கு உரிய வினாக்கள்
(Forms I, II & III)

1. இவ்விலக்கணம் கற்று முடிந்ததால், நீங்கள் பெற்றுள்ள நன்மை யாது?

2. உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர் மெய் எழுத்து - இவற்றின் பெயர்க் காரணம் விளக்கிக் கூறுக.

3. க, ட, த, ழ, ர, ற - இவற்றுக்கு இன எழுத்துகள் எவை ?

4. குற்றியல் உகரம் இன்னதென விளக்குக.

5. போலி என்பது யாது ? விளக்கி உதாரணம் தருக.

6. கு. இகரம், முற்றியல் உகரம் எவை ?

7. சொல் என்பது யாது? அதன் சிறந்த வகை யாவை?

8. வடசொல் நான்கும் திசைச்சொல் நான்கும் கூறுக.

9. சென்னை, ஆவணி, வீடு, கை, வற்றல், நன்மை, தந்தை, முழம், வீசை, கெஜம், முக்கால், நீங்கள், நாங்கள் - இவை எவ்வெப் பெயர்கள் ?

10. மரம் - பலா, பறவை - கிளி, பாம்பு - சாரை, வீரர் - நெப்போலியன் : இவற்றுள் பொது - சிறப்புப் பெயர்கள் எவை ?

11. பறவை, நாற்காலி, கண்ணப்பர், முக்கண்ணன், முள்ளி, காற்றாடி - இவை என்ன பெயர்கள் ?

12. தொழிற்பெயர், வினையால் அணையும் பெயர் - இவைகளை விளக்கி உதாரணம் தருக.

13. போ, போதல், போனவனை, போனான், போன, போய்.—ஒவ்வொன்றுக்கும் இலக்கணம் கூறுக.

14. போன, போகின்ற, போகும் (பையன்) போய், போக - இலக்கணம் கூறுக.

15. கண்டான், போயிற்று, நிற்கின்றது, செய்வார், சென்றன, பாடினான், கற்றார், பெற்றார்.—உறுப்பிலக்கணம் கூறுக.

16. வந்தான், செய்கின்றான், எழுவார், (அது) வரும், (அவை) வரும் - எதிர்மறை வினைகளைக் கூறி, எதிர்மறை இடைநிலைகளைச் சுட்டுக.

17. வேற்றுமைத் தொகை, வேற்றுமை விரி - இவற்றை உதாரணத்தால் விளக்குக.

18. வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் - இவற்றை விளக்குக.

19. தன்வினை - பிறவினை, செய்வினை - செயப்பாட்டு வினை, செயப்படுபொருள் குன்றியவினை - செ. குன்றாவினை : விளக்கி உதாரணம் தருக.

20. ஏவல் வியங்கோள் வினைமுற்றுகள் யாவை? உதாரணம் தருக.

21. வியங்கோள் என்னென்ன பொருள்களில் வரும்?

22. ஆகுபெயர் என்பது யாது? மயில் வந்தாள்– 'மயில்' ஆகுபெயர் ஆவது எங்ஙனம்?

23. நிறுத்தக் குறிகள் எவை? அவற்றின் அளவு என்ன? பயன் என்ன?

24. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்—இவற்றை வாக்கியத்தில் கண்டறிவது எப்படி?

25. தனி வாக்கியம், தொடர் வாக்கியம், கலப்பு வாக்கியம் - உதாரணத்தால் விளக்குக.

26. தாமஸ் நடந்துசென்று வந்த வீரனை வரவேற்றான்.—சொல் இலக்கணம் கூறுக.

27. ஆண்பால் - பெண்பாலாகிய இரு பால்களுக்கும் பொதுவாக வரும் தமிழ் - வடமொழிப் பெயர்கள் எவை?

28. (1) தன்கூற்று, பிறகூற்று எவை? (2) தந்தையார், "மகனே, நீ செவ்வனே பாடம் படி" என்றார்.—இதனைப் பிறகூற்றாக மாற்றுக.

29. வருகிறான் வரதன், படிக்கும் பரந்தாமன், எழுதி வந்தான், கழுதை கத்துகிறது, மாமா! வா, பாம்பு பாம்பு—இவை என்ன தொடர்கள்?

30. வந்த வரதன் படித்துப் பார்த்தான்.—தொடர் இலக்கணம் கூறுக.

31. புணர்ச்சி என்பது யாது? அதன் வகை என்ன?

32. விகாரப் புணர்ச்சி வகை என்ன? உதாரணங்கள் தருக.

33. நிலைமொழி, வருமொழிகளை விளக்குக.

34. தீயவி, மணியடி, கோவில், சேயடி, தேவாரம், பனையோலை - பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறுக.

35. பாலழகு, மெய்யுரை, கண்ணருவி, வேலாயுதம், செலவானது, செலவியாது, மூக்கழகு, நாடியாது.—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறுக.

36. நன்னிலம், பெரியன், மூதூர், சராசந்தன், சுரேந்திரன்.—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறுக.

37. வெந்நீர், தண்ணீர், நன்னீர், நற்றாமரை, செந்தாமரை, சுசீந்திரம், சதானந்தன், நரேந்திரன், மணியழகு, கல்லழகர், வரமளி, பாலபிஷேகம்.—பிரித்துக் காட்டுக.

38. செய்யுளில் கவனிக்க வேண்டுவன யாவை?

39. "எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ?—பைந்தொடீஇ!
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்று முதவும் கனி."

(1) இதனை அந்வயப்படுத்துக.

(2) இதனை இரண்டு வாக்கியங்கள் ஆக்குக.

(3) இதில் உள்ள எ. ப. சே. கூறுக.

(4) இதனைப் பதம் பதமாகப் பிரிக்க.

(5) இதில் உள்ள முன்னிலை யாது? அஃது என்ன முன்னிலை?

(6) இதற்குப் பதவுரை கூறுக.

(7) இதற்குப் பொழிப்புரை கூறுக.

(8) இதற்குக் கருத்துரை கூறுக.

(9) இச்செய்யுட் செய்தியை அழகாக ஐந்து வரிகளில் எழுதுக.

(10) இதில் உள்ள உபமான - உபமேயங்கள் எவை?

40. செய்யுள் எழுதப்படும் முறை யாது? ஒன்றை எழுதிக் காட்டுக.

41. குறள் வெண்பா, நாலடி வெண்பா—இவற்றை எழுதிக் காட்டுக.

42. மோனை, எதுகை என்பன யாவை? 39 ஆம் கேள்வியில் உள்ள பாவில் அமைந்துள்ள மோனை - எதுகைகளைக் குறிக்க.

43. உவமை, உருவகம் இவற்றை நன்கு விளக்குக.

44. இரட்டைக்கிளவி, அடுக்குத் தொடர்—இவற்றின் வேறுபாடு தோன்ற விளக்குக.

45. தற்குறிப் பேற்றம் - யாது? உதாரணம் தந்து விளக்குக.